1401
d. M. 1895 Vol. 6—No. 9 & 10.

# லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR OF ...
No.
11 DEC 1929
MADRAS

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | கீதாஞ்சலி மொழி பெயர்ப்பு ... | 325 |
| 2. | துருக்கியின் தற்கால நிலைமை... | 326 |
| 3. | எனது குருநாதர் | 330 |
| 4. | காலத்தின் நிலை | 337 |
| 5. | பதினெண் கீழ்க் கணக்கு | 338 |
| 6. | பண்டைத் தமிழ் நாகரிகம் | 341 |
| 7. | நவமணிகள் | 346 |
| 8. | முயற்சிபெறத் தூண்டும் முதுமொழி | 347 |
| 9. | நற்குணப் பயிற்சி | 349 |
| 10. | ஸ்ரீ ஹர்ஷ சரிதம் | 351 |
| 11. | பத்திராசிரியர் குறிப்புகள் | 353 |
| 12. | வாலாஜாபாத் இந்துமத பாடசாலை | 357 |
| 13. | கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கம் | 359 |
| 14. | பெண் கல்வி ... | 363 |
| 15. | மணித் திரட்டு... | 364 |


உள்நாடு 2′ லக்ஷ்மி ஆபிஸ் சென்னை. வெளிநா 2′8

ஆசிரியர்:— கே. எஸ். சுந்தரம். தனிப்பிரதி அ

# அவ்வளவு[illegible] இனிப்பே!

மணம் கமழும் நாவல்களும், ஆ[illegible] கருத்துகள் நிறைந்த நவீனங்களும், அறிவை விளக்கி ஆனந்தத்தை பெருக்கும் நூல்களும் நமது புத்தக சாலையில் இருக்கின்றன. அ[illegible]களில் சிலவற்றைக் குறிக்கிறோம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| [illegible]ந்திய மாதா ... | 1 | 8 | 0 |
| [illegible]ந்திய பிதா ... | 2 | 0 | 0 |
| [illegible]ர்ஷ்ட இந்தியா ... | 2 | 8 | 0 |
| [illegible]ஃயோதிரத்தின் மர்மம் ... | 1 | 0 | 0 |
| [illegible] அல்லது புண்ணியபூமி ... | 1 | 4 | 0 |
| [illegible]தகயுக்தி ... | 0 | 12 | 0 |
| [illegible]றவாழ்க்கையின் இன்ப ரகசியம் ... | 2 | 0 | 0 |
| [illegible]வாழ்க்கையின் கிரம ரகசியங்கள் ... | 3 | 0 | 0 |
| [illegible]ன்ப வெற்றி (சிறந்த சிற்றின்ப நூல்) | 2 | 4 | 0 |
| [illegible]ர் சிங் ... | 1 | 4 | 0 |
| [illegible]வாசகன் ... | 1 | 4 | 0 |
| [illegible]போன் சங்கீத ரத்னமிருதம் ... | 1 | 0 | 0 |
| [illegible]ளா ... | 1 | 0 | 0 |
| [illegible]யம் திரட்டும் வழி .... | 0 | 6 | 0 |
| [illegible]வசிய சாஸ்திரம் ... | 1 | 8 | 0 |
| [illegible]மாசக் களஞ்சியம் 1-ம் பாகம் ... | 1 | 0 | 0 |
| ஷை 2-ம் பாகம் ... | 1 | 0 | 0 |
| [illegible]ளைபன் ... | 0 | 14 | 0 |
| [illegible]ாகு அல்லது தங்க முக்கோணம் ... | 1 | 8 | 0 |
| [illegible]தரேகை சாஸ்திரம் ... | 1 | 4 | 0 |
| [illegible]யணைத் திருப்புகழ் ... | 1 | 0 | 0 |

வாரத்தில் ஒரு புத்தகம் என்றால்,




ஒரு வருஷத்தில் பெரிய புத்தக சாலை.

## [illegible]முத்தையா புக் டிபோ,

தபால் பெட்டி 99,

சென்னை.

# லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா. ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

| | | |
|---|---|---|
| மலர் 6. | 1929௵ ஜூன்௴ & ஜூலை. , சுக்கில௵ ஆனி௴ & ஆடி. | இதழ் 9. & 10. |

(கீதாஞ்சலி மொழிபெயர்ப்பு)

ஸ்ரீமான் S. தேசியவிநாயகம் பிள்ளை.

என்றுமென்னை யழிவிலாப்பொருளாயியற்றினை
ஈதுனது திருவுள்ளமே

ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தி யுயிர்
எனை புதுக்கி வைப்பாய்

குன்றினொடு குழியெலா மிச்சிறியவேயின் வரு
குழல்கொண்டு சென்று நீயுன்

குமுதவாய் வைத்து நவநவமான இசைகள் செவி
குளிரும் வண்ணம் உயிர்ப்பாய்

பொன்றுத லிலாத நிலை தரவல்ல உன் கரப்
புனிதம் உடல் தீண்டலாலே

பூரித்தவுள்ள மகிழெல்லையற மாய்ந்தது
புகலரிய மொழி குளறினேன்

நன்றுதவு கொடை கோடியிக்குழவி கைகளில்
நாளும் நீயள்ளியிடினும்

நான்குறைகளோதியருள் வேண்டாதிருந்திடேன்
ஞானஒளி வீசு மதியே.

சென்னை-600 008
நூலகம்

# துருக்கியின் தற்கால நிலைமை

(காப்டன் ஹாரால்டு ஆரம்ஸ்ட்ராங்.)

பத்து வருஷ காலம் புரட்சி இயக்கம் துருக்கியில் தாண்டவமாடியதின் பயனாக, அதன் அரசியல் முறை முற்றிலும் மாறுபட்டதன்றி, சமூக நிலையும் தலைகீழாய் மறிந்துவிட்டது.

தற்செயலாய் புரட்சி இயக்க காலத்தில் நான் துருக்கிக்குச் சென்றேன். புரட்சி படிப்படியாய் உருப்பெற்று வருவதை நான் நேரிற் பார்த்தேன். சென்ற இரண்டு வருஷ காலமாக, யுத்த நஷ்ட நிவாரண கமிட்டி அங்கத்தினர் ஹோதாவில் நான் துருக்கி முழுதும் பிரயாணம் செய்து பார்த்தேன். துருக்கி சர்க்காரின் உதவியால் துருக்கியர் தற்கால ராஜீய சமுதாய சமய நிலைமைகளையும் நான் நன்கு உணர்ந்து கொண்டேன்.

இப்பொழுது துருக்கியில் பிரயாண வசதிகள் அவ்வளவு ஏராளமாக இல்லை. பிரயாணிகளுக்கு அங்கங்கே வகுக்கப்பட்டிருக்கும் தங்குமிடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. சில இடங்களில் நகர சபையார் சௌகரியமான சத்திரங்கள் கட்டியிருக்கிறார்கள். மற்ற இடங்களில் பிரயாணிகள் கிராமச் சத்திரங்களில் தங்கவேண்டியதாக இருக்கிறது. கிராமச் சத்திரங்களில் படுக்கை யறைகளில் நாற்கால் மிருகங்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். மூட்டைப்பூச்சி, கொசு முதலியவைகளின் தொந்தரவுக்கும் குறைவில்லை. சாக்கடை நாற்றமும் சகிக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. சத்திரத் தரையும் [illegible] முரடாக இருக்கிறது. பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் கிராமத்தலைவர் செய்து கொடுக்கும் மாமூல் வழக்கமும் மாண்டொழிந்து போய்விட்டது. வெளிநாட்டார் மீது துருக்கியருக்கு எற்கனவே இருந்து வந்த பகை, சென்ற பத்து வருஷ புரட்சிக் காலத்திலும் கொஞ்சம் கூட வலுவடைந்து விட்டது. கிராமத் தலைவர்கள் எல்லாம் பொதுவாக ஏழைகளாகவே இருக்கிறார்கள். அன்றியும் வெளிநாட்டாருக்கு உபசாரம் செய்து சர்க்காரின் அதிருப்தியை சம்பாதிக்கவும் அவர்கள் அஞ்சுகிறார்கள். பாதைகளெல்லாம் மேடுபள்ளங்களாக இருக்கின்றன. பாலங்களும் இடிந்து கிடக்கின்றன. போலீஸ் பந்தோபஸ்து எங்கும் கடுமையாக இருக்கிறது. பிரயாணிகளை போலீசார் மிக நுட்பமாகக் கவனிக்கிறார்கள். பிரயாணிகள் அநேகமாக கைதிகள் போலவே பிரயாணம் செய்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லா எல்லைஸ்தலத்திலும் பிரயாணி தன் பிரயாணச் சீட்டை அதிகாரிகளுக்குக் காட்ட வேண்டும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் பிரயாணிகள் தம் பிரயாணச் சீட்டைக் காட்டி, தம் வரலாறுகளையும், பிரயாணம் செய்யும் நோக்கத்தையும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். பிரயாணிகளை மறைமுகமாகக் கவனிக்க ஒற்றர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரயாணிகள் நிலைமை இவ்வாறெல்லாமிருந்தாலும் துருக்கியில் திருடர் பயமென்பது கிடையாது. 1919-ல் துருக்கியில் கொள்ளைக் கூட்டத்தார் தொந்தரவு ஜாஸ்தியாக இருந்தது. அவர்களெல்லாம் இப்பொழுது ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். எனினும் இயூபரிட்டிஸ் நதியின் கிழக்குப் பிரதேசங்களில் 1924-ல் கலகம் விளைத்த கர்டஸ் என்னும் ஜாதியார் இப்பொழுது மறைவாக இருந்து பிரயாணிகளைத் தொந்தரவு செய்து தான் வருகிறார்கள். நிராயுதபாணிகளாகவும், ஆள் துணை யில்லாமலும் அந்தப் பிரதேசங்களில் இப்பொழுது பிரயாணம் செய்வது ஆபத்துக்கிடமானதாகவே இருக்கிறது.

## கோபுரமிருந்த இடத்தில் குப்பைமேடு

முற்காலத்தில் நீர்வளம் நிலவளம் சிறந்து அழகிய நகரங்களாக இருந்த இடங்களெல்லாம் இப்பொழுது பாழாகிக் கிடப்பதை நான் பிரயாண மத்தியில் நேரில் பார்த்தேன். 1928-ல் எடுத்த ஜனத்தொகைக் கணக்கின் படி ஒரு கோடி நாற்பது லக்ஷம் ஜனங்கள் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் இந்தக் கணக்கு சரியான கணக்கல்ல உண்மையில் ஜனத்தொகை அதிகமாக இருந்திருக்க வேண்டும். அண்டோலியாவில் மட்டும் 6 கோடிப் பேர் வாழ வசதியிருக்கிறது. மேகவியாதி, விஷசுரம் முதலிய நோய்களினாலும்

நல்ல உணவு கிடையாமையாலும், சுகாதார வசதிகள் இல்லாததினாலும் சிசுமரணம் ஜாஸ்தியாகி ஜனத்தொகை குறைந்து விட்டது. புரட்சிக்காலத்தில் ஏராளமான ஜனங்கள் கொல்லப்பட்டதும் ஜனத்தொகை குறைந்ததற்கு வேறொரு காரணமாகும்.

இப்பொழுதும் ஜனத்தொகை விருத்தியடைவதற்கான லட்சணங்கள் ஒன்றும் காணப்படவுமில்லை. சில சமயங்களில் ஒரே மூச்சாகப் பல நாள் தொடர்ந்து பிரயாணம் செய்தேன். அந்நாட்களில் ஒரு மனிதனையாவது ஒரு குடிசையையாவது நான் கண்டதேயில்லை. பார்க்கு மிடமெல்லாம் பாழாகவே இருந்தது.

யுத்தத்துக்குப் பின் அநேக பிரதேசங்கள் பயிர் செய்யப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. உர்பா, அயிண்டாம், அடானாவைச்சுற்றியுள்ள பிரதேசங்களும் பாழாகவே கிடக்கின்றன. 1920-ல் இந்தப் பிரதேசங்களில் பிரஞ்சுக்காரர் கொடும்போர் நடத்தி, கிராமங்களை தீக்கிரையாக்கினார்கள். 1922-ல் அங்கோரா முதல் இங்கிஷிஹர் வரை 300 மைல் தூர முள்ள கிராமப்பிரதேசங்களை, கிரேக்கர்கள் யுத்தத்தில் தோற்று ஓடும்போது அழித்தார்கள். அந்தப் பிரதேசங்களெல்லாம் இப்பொழுதும் பாழாகவே கிடக்கின்றன. துருக்கி ஒரு விவசாய நாடாயிருந்தும், சர்க்கார் தானியங்களை வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்து வருகிறார்கள்.

கிராம வாசிகளெல்லாம் மிக ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கர்நாடக முறையில் விவசாயம் செய்கிறார்கள். வேலைக்குத் தக்க கூலி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அடானா மைதானம் சரியாகக் கிருஷி செய்யப்பட்டால், எகிப்துப் பிரதேசங்களைப் போல் வளப்பமுடையதாக இருக்கும். இப்பொழுது அங்கே அற்ப சொற்பமாகப் பருத்திப் பயிர் செய்யப் பட்டு வருகிறது. அதனால் பெரிய வருமானம் கிடைக்கவுமில்லை. 1927-ல் மாசூல் மிக மோசமாகவே இருந்தது. 1928-ல் மழை பெய்யாததினால் விளைவே இல்லை.

கிராம வாசிகள் முன் போல அடக்கமுடையவர்களாக இருந்து வருகிறார்கள். பொதுவாக அவர்கள் கோழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் மிருகங்களைப் போலவே ஜீவிதம் நடத்துகிறார்கள். அவர்கள் வாழும் குடிசைகள் மனிதவாசத்துக்கு உரியனவல்ல. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டே வாழ் நாள் கழிக்கிறார்கள். நீர் வளம் நில வளம் இல்லாத மலைப்பிரதேசங்களில் அவர்கள் எவ்வளவு தான் உழைத்தாலும், பாட்டுக்குத் தக்க பயன் கிடைக்கவில்லை. கஷ்டகாலத்துக்கு உதவும்படி க்ஷேம நிதி அவர்களுக்குக் கிடையாது. பெரும்பாலோர் உடுத்த துணிக்கு மறு துணியில்லாமல் இருக்கிறார்கள். அதுவும் கந்தையாகவே இருக்கிறது. இரவு வந்ததும் அவர்கள் படுத்துக் கொள்கிறார்கள். குடிசைகளில் விளக்கு வெளிச்சம் என்பதே கிடையாது. பொழுது போனவுடன் உறங்குவதும் பொழுது விடிந்தவுடன் விழிப்பதும் அவர்கள் வழக்கமாக இருக்கிறது. காலை மாலைக் கடன்களும் அவர்களுக்குக் கிடையா. வயிற்றை நிரப்புவதற்கு மட்டும் பாடுபடுகிறார்கள். பணம் சேர்க்க வேண்டு மென்ற ஆசையே அவர்களுக்கு இல்லை. நல்ல உணவு உண்ண வேண்டும்; நல்ல ஆடை அணிய வேண்டும் என்ற ஆசையும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் உணவும் மிகவும் போஷணையற்ற எளிய உணவாக இருக்கிறது. ஊண், உறக்கம் என்னும் தேவைகளைத் தவிர அவர்களுக்கு வேறு தேவைகள் கிடையா. "வெந்த சோற்றைத் தின்பது; வேளை வந்தால் சாவது" என்ற பழமொழிப் படியே அவர்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இடையன் இஷ்டப்படி செல்லும் ஆட்டு மந்தைகளைப் போல் அவர்களும் எதேனும் ஒரு தலைவன் சொற்படி நடப்பார்கள். தலைவர்கள் இஷ்டப்படி அவர்களை எப்படி வேண்டுமானாலும் திருப்பி விடலாம். தூண்டி விட்டு விட்டால் அவர்கள் உயிரையும் துரும்பென மதித்து, எந்த ஆபத்தான வேலையிலும் இறங்கி விடுவார்கள்.

### தேச சஞ்சாரிகளின் நகர வாழ்க்கை.

வீடும் குடியும் இன்றி ஊர் ஊராய்ச் சுற்றித்திரியும் ஒரு வகுப்பார் இப்பொழுது நகரங்களில் வந்து குவிந்து கிடக்கிறார்கள். நகர மைதானங்களில் வெட்டவெளியில் அவர்கள் வாழ்வதை நான் நேரிற் பார்த்தேன். சில நாள் அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய நடை உடை பாவனைகளையும் கவனித்தேன். சில பெண்கள் மட்டும் முக மூடி தரித்துச் சஞ்சரிக்கிறார்கள். அவர்களுக்குள் சமூக வாழ்க்கை முறை என்பதே கிடையாது.

பெண்கள் பரஸ்பரம் வெளிப்படையாகப் பேசுவதும் இல்லை. ஆண்களும் பெண்களும் தனித்தனியாக வாழ்கிறார்கள். அவர்கள் நெருங்கிப் பழகுவதில்லை. ஒரு குடும்பத்தார் வேறு குடும்பத்தாரோடு கலந்து உறவாடுவதுமில்லை.

அவர்களுடைய ஆட்டு மந்தைகளை நாய்கள் காத்து வருகின்றன. அந்த நாய்கள் மிகவும் குரூர குணமுடையவை. அந்நாய்கள் ஓநாய்க் கூட்டங்களை அஞ்சாமல் எதிர்க்கும் சக்தியுடையது. இடையர்கள் பார்வைக்கு அழகாகவும் தைரியசாலிகளாகவும் இருக்கிறார்கள். துருக்கியர் இயல்பாகவே சஞ்சார வாழ்வில் அவர்களுடைய வீரம் பொலிவுற்று விளங்குகிறது. நகரவாழ்வினால் அவர்கள் வீரம் குன்றிப்போகிறது. இயற்கை வாழ்க்கை முறை மாறி, செயற்கை வாழ்க்கை முறையால் உண்டாகும் உல்லாசப் பிரியம் வளர்கிறது.

கான்ஸ்டாண்டிநோபல் நகரம் ஒரு பொழுதும் துருக்கிச் சாயல் பெற்று இருந்ததில்லை. இப்பொழுது அதன் தோற்றம் முற்றிலும் மாறிவிட்டது நகரத் தோற்றமும் ஐரோப்பிய மயமாகவே இருக்கிறது. முன்னிருந்த தலைநகரத் தோற்றம் முற்றிலும் தாழ்ந்துவிட்டது. நகரத்தாரெல்லாம் ஐரோப்பிய வேஷம் பூண்டு விட்டார்கள். நகரத் தோற்றம் முற்றிலும் ஒழிந்து விட்டது. சீரழிந்த ஒரு மாகாணத் தலைநகரத்தின் தோற்றத்தை அது பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் பிரபல துறைமுகப் பட்டணமாய் விளங்கிய கான்ஸ்டான்டிநோபல் இப்பொழுது அந்தப் பெருமையை இழந்திருக்கிறது. வர்த்தகமும் சீர் குலைந்து விட்டது.

ஒரு காலத்தில் அழகிய நகரமாய் விளங்கிய ஸ்மர்னா இப்பொழுது தீப்பட்டு அழிந்த பாழ் நகரமாக இருக்கிறது. 1926-ல் அடானாவை ஒரு தொழிற்சாலை நகரமாக்க சர்க்கார் முயற்சி செய்தார்கள். 1926-ல் அதன் வர்த்தகம் ஒழிந்தது ; நகரத்தோற்றமும் பாழாயிற்று.

புதுத்தலை நகரமாகிய அங்கோரா இன்னும் பூர்த்தியடையவில்லை. நகர அமைப்பு வேலைகள் இப்பொழுதும் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே ஒரு புது இரயில்வே ஸ்டேஷன் கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டேஷனிலிருந்து சர்க்கார் மாளிகை வரை ஒரு அழகிய புதுப்பாதை போடப்பட்டிருக்கிறது. அங்கங்கே சில அழகிய மாளிகைகளும் வர்த்தகசாலைகளும் கட்டப் பட்டிருக்கின்றன. மற்றப்படி ஒரு தலை நகரத்துக்கு வேண்டிய அம்சங்கள் ஒன்றும் இதுகாறும் அமையவில்லை.

ஏனைய நகரங்களும் விருத்தியடைந்து விட்டதாகச் சொல்லுவதற்கு இல்லை. கெய்சாரி நகரத்தில் நல்ல துருக்கி வர்த்தகர்கள் இருக்கிறார்கள். பழைய துருக்கி அரசாங்க காலத்தில் கிரேக்கர்களும், அர்மீனியர்களும், சில்லறை வியாபாரிகளாகவும், கைத்தொழில் தேர்ச்சியுடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் இப்பொழுது அவ்விடமிருந்து ஓட்டப் பட்டு விட்டார்கள். சில நகரங்களில் கத்தோலிக்கரான அர்மீனியர்கள் சிலர் இருக்கிறார்கள். அங்கோராவில் சுமார் 800 பேரும், அடானாவில் 400 பேரும், கெய்சாரியில் 600 பேரும் இருப்பதாகக் கேள்வி. துருக்கி கிராமப் பிரதேசங்களில் அவர்களைக் காணவே முடியாது. சில்லறை வர்த்தகம் செய்வதிலும்; மற்றும் ஏனைய தொழில்களிலும் துருக்கியர் இன்னும் திறமை யுடையவர்கள் ஆகவும் இல்லை. சில நகரங்களில் துருக்கியர் சில்லறைக்கடை வைத்துத் தூங்கிக் கொண்டிருப்பதையும், அவர்களது பக்கத்துக் கடைக்காரர்களான யூதர்களும், சிரியர்களும், எகிப்தியரும் சுறுசுறுப்பாக வியாபாரம் செய்வதையும் நான் கண்ணாரப் பார்த்தேன். வாளேந்தி யுத்தம் செய்கிறவர்கள், போர்த்தொழில் நடத்தவே லாயக்குடையவர்களாக இருப்பார்கள். வேட்டைக்காரன் வியாபாரியாவது அசாத்தியமே ஆகும்.

### சிறுவர் ஜீவனத் தொழில்.

துருக்கியருக்கு வர்த்தகத்தில் வாசனை யில்லாதிருப்பதினால் துருக்கியின் பொருளாதார நிலை மோசமாகவே இருக்கிறது. வர்த்தகத்துக்கு வேண்டிய கைமுதல் துருக்கியரிடம் இல்லை. முதலாளிகளுக்கு துருக்கியரிடம் நம்பிக்கை குறைந்துவிட்டது; துருக்கியரும் முதலாளிகளை நம்பத்தயங்குகிறார்கள். தேச வருமானத்தில் மூன்றிலொரு பகுதி இராணுவத்துக்குச் செலவு செய்யப்படுகிறது. மிகப் பளுவான வரிகளும் சுமத்தப் பட்டிருக்கின்றன. அந்த வரிப் பளுவைத் தாங்க முடியாமல்

ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். முஸ்தபா கமாலின் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் காரியதரிசிகளும் மிக்க சாமர்த்தியசாலிகளே. அவர்களெல்லாம் துருக்கி அரசாங்கத்தைச் சீர்திருத்த பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். ஆனால் சில்லறை உத்தியோகஸ்தர்கள் எல்லாம் சோம்பேறிகளாகவும் மந்த புத்தியுடையவர்களாகவும் இருக்கிறார்கள். பொது ஜனங்களோ "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன" என்னும் மனப்போக்கு உடையவர்களாக இருக்கிறார்கள். பேர் செய்து போர் செய்து அவர்கள் அலுத்துப் போனார்கள். வெளி நாட்டார் கையில் சிக்கியிருந்த துருக்கியை மீட்டெடுக்க அவர்கள் பட்டபாடு பெரும் பாடாய் விட்டது. உரோமகார்லிபிகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து விட்டால் துருக்கியர் புத்துயிர் பெற்று விடுவார்கள் என்று முஸ்தபா கமால் ஒரு கால் எண்ணலாம். அவர் பல நல்ல சீர் திருத்தங்கள் செய்திருக்கிறார். சிசுப் பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் அவர் செவ்வையாகச் செய்திருக்கிறார். விவாகம் செய்து கொள்ளும் முன் மண மகனும் மண மகளும், டாக்டரின் சர்ட்டிபிகேட்டுப் பெற வேண்டுமென்றும் திட்டம் செய்திருக்கிறார். தேச முழுதும் ஏராளமாகப் பள்ளிக் கூடங்களும் ஸ்தாபித்திருக்கிறார். உயரிய ஜன நாயக தத்துவங்களெல்லாம் அந்தப் பள்ளிக் கூடங்களில் போதனை செய்யப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று வருகிறார்கள். மாமூல் சமுதாய வழக்கங்களை யெல்லாம் ஒழித்து விட்டார். இஸ்லாம் மதத்தையும் அழித்து விட்டார்.

## மதம் ஒழிந்தது.

பழைய யுட்டோமான் சாம்ராஜ்யத்துக்கு இஸ்லாம் மதமே அஸ்திவாரமாக இருந்தது. துருக்கி சுல்தானே கலிபா ஆகவும் இருந்தார். நில வரி, ஆசாரம், குடும்ப வாழ்வு, மாதர் உரிமை, விவாகம், சமூக வாழ்வு ஆகியன இஸ்லாம் மதத்தைத் தழுவியே இருந்து வந்தன. சுல்தானே தேசத்தலைவராகவும் சமயத்தலைவராகவும் இருந்தார். முஸ்தபா கமால் அவை யனைத்தையும் அழித்துவிட்டார். அவர் மிகுந்த மதப்பற்றுடையவரல்ல, மிகவும் விசாலமான மனப்பான்மை யுடையவர். கிலாபத்து ஸ்தாபனத்தை வேரறுத்து விட்டார், தர்வேசுகளையும், புரோகிதர்களையும் அவர் நாட்டை விட்டு ஓட்டிவிட்டார். அநேக மசூதிகளையும் மூடி விட்டார்கள். மசூதிகளுக்குச் சொந்தமான சொத்துகளையும் அவர் சர்க்காருக்குப் பறிமுதல் செய்து விட்டார். மதாசிரியர்களுக்கு இப்பொழுது அங்கே செல்வாக்கே கிடையாது. தற்கால துருக்கி சர்க்காருக்கு மத சம்பந்தமான அதிகாரமே கிடையாது. மதாசாரங்களும் மதச் சடங்குகளும் தடுக்கப்படவில்லை யானாலும், இஸ்லாத்தின் ஆதிக்கம் ஒழிக்க மறைமுகமான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வெகு காலமாக துருக்கியர் மத வெறியர்கள் என்று ஒரு அவப்பேர் படைத்திருந்தார்கள். எனினும் சொற்ப காலத்துக்குள் இஸ்லாம் மதம் மறைந்து விட்டது ஆச்சரியமாகவே இருக்கிறது. மதமும் மதச்சட்டங்களும் புருஷர்களுக்கு ஒன்றே என கருதப்பட்டு வருகிறது. பெண்களுக்கு மதப்பற்று அதிகமாக இல்லை. இப்பொழுது, சில கிழவர்களைத் தவிர, வேறு யாரும் மசூதிக்குச் செல்வதில்லை. இஸ்லாம் மதம் ஒன்று இருந்த ஞாபகமே ஜனங்களுக்கு இப்பொழுது இல்லை. துருக்கியின் தற்கால நிலையைக் கவனித்தால், அந்நாட்டில் எப்பொழுதாவது மத உணர்ச்சி நிலைபெற்றிருக்கக் கூடுமென்ற சந்தேகமே உண்டாகக் கூடும்.

ஒரு காலத்தில் யதேச்சாதிகார அரசியலின் கீழ் வாழ்ந்து வந்த துருக்கியர் இப்பொழுது ஜனநாயகக் கொள்கையில் பழகி வருகிறார்கள். இந்த அரசியல் மாற்றத்தினால் பிற்கால நிலை எவ்வாறாக இருக்குமென்று இப்பொழுது உறுதி கூற முடியாது. அனுபவத்தில் தான் அறிய வேண்டும்.

# எனது குருநாதர்

(ஸ்ரீமான் வி. பசுபதி.)

ஸ்வாமி விவேகாநந்தரின் நியூயார்க் உபந்யாசத்தைத் தழுவி எழுதப்பட்டது.

(250-வது பக்கத் தொடர்ச்சி.)

---

"என் குழந்தாய்! ஓர் அறையில் ஒருபொற்கிழி இருக்கிறதென்று வைத்துக்கொள். பக்கத்து அறையில் ஒரு திருடன் இருக்கிறானென்றும் வைத்துக்கொள். அந்தத் திருடன் தூங்குவானென்று நீ நினைக்கிறாயா?" எனப் பிற்காலத்தில் இந்த மஹா புருஷனே என்னைக் கேட்டிருக்கிறார்:- 'அத்திருடன் உறங்கான். அவனுடைய மனம் உள் நுழையும் வகையையும் மூட்டையை எடுத்துப்போகும் விதத்தையும் பற்றியே தியானஞ் செய்து கொண்டிருக்கும். எனவே இப்புறத்தோற்றங்களுக்கப்பால் ஓர் உண்மை,—ஒரு கடவுள்,—அழிவற்ற ஒருவர், பேரின்பக்கடல்,—அந்த இன்பத்துடன் ஒப்பிடுங்கால், புலன்கள் நுகரும் இன்பம் ஒன்றுமில்லை என்பதை நன்கு யறிந்த ஒருவன், அதை யடையப் போராடாது, திருப்தி யடைந்து வாளா விருத்தல் சாத்தியமென்று நீ நினைக்கிறாயா? தன்னுடைய முயற்சிகளை ஒரு கணமேனும் நிறுத்துவானோ? இல்லை; அவன் பித்தம் பிடித்துப் போவான்.' இந்த தெய்வீகப் பித்தமே பையனைப் பிடித்தது. அந்தக் காலத்தில் பையனுக்கு உபதேசிக்க யாருமில்லை. எல்லோரும் பையனுக்கு புத்தி ஸ்வாதீன மில்லையென எண்ணலானார்கள். இதுவும் விந்தையே. உலகத்திலுள்ள வீண் ஆடம்பரங்களை உதறியெறிய ஒருவன் ஆரம்பித்தால் அவனை உலகம் பைத்தியம் என்று அழைக்கின்றது. ஆனால் அவர்களே பாக்யவான்கள். அவ்விதப் பைத்தியத்தினின்று தான் இந்த உலகத்தை ஆட்டிவைத்த சக்திகள் அரும்பின; அவ்விதப் பைத்தியத்தினின்று தான் இந்த உலகத்தை ஆட்டிவைக்கப் போகும் சக்திகளும் அரும்ப வேண்டும். இவ்வாறு, நாட்கள், வாரங்கள், மாதங்கள் தொடர்ந்த போரிலே கழிந்தன. பையனும் பல புதிய தோற்றங்களைக் கண்டான். வியக்கத் தக்கப் பொருளைப் பார்த்தான். பிரகிருதி தேவியும் தன் மர்மங்களைப் பையனுக்கு விளக்க ஆரம்பித்தாள். அறியாமை என்னும் திரையும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தூக்கப்பட்டது. "தாயே" குருவாய் அமர்ந்தாள். அவன் தேடிய உண்மையைத் தந்தாள்.

இந்த சமயத்திலே தன்னை ஒப்பாரும் மிக்காருமில்லா எழில் நிறைந்த ஸ்திரீ யொருத்தி அங்கு வந்தார். பிற்காலத்தில் இந்த மகான், 'அம்மையார் கல்வியைக் கற்றவர்களல்ல; கல்வியே மனித ரூபமாக வந்தவர்' என்று சொல்வது வழக்கம். இங்கு கூட இந்திய ஜாதியின் பெருமையை நீங்கள் பாருங்கள். பொதுவாக அறியாமையில் ஆழ்ந்து கிடக்கிற இந்து ஸ்திரீகளின் மத்தியிலே, சுதந்தர மற்றவர்கள் என மேனாடு அழைக்கும் இந்து ஸ்திரீகளின் இடையிலே ஆழ்ந்த ஆத்மஞானமுள்ள ஒரு ஸ்திரீ தோன்றினார். அவர் ஒரு சந்யாசினி. அவர் அங்கு வந்தார். பையனைப் பற்றிக் கேள்விப்பட்டார். அந்தச் சோலைக்குத் தானே சென்று பையனைப் பார்க்கவும் மனங்கொண்டார். பையன் பெற்ற உதவி இதுவே முதலாவதாகும். பையனை அம்மையார் பார்த்தார். பையனுக்கு ஏற்பட்ட நோய் இன்னதெனவும் உடனே தேர்ந்தார்.

"என் குழந்தாய்! இப்படிப்பட்ட பைத்தியம் யாருக்குப் பிடிக்குமோ அவனே கிருதார்த்தன். இந்தப் பிரபஞ்சமே பைத்திய மயமாயிருக்கிறது. சிலருக்குப் பணப் பைத்தியம், பலருக்குப் பெண் பைத்தியம், இன்னும் பலப் பல பைத்தியம். அவர்கள் பொன்னுக்கும் பெண்ணுக்கும் பொருளுக்கும் இன்னும் அற்பங்களுக்கும் பைத்தியம் பிடித் தலைகிறார்கள். செல்வந்தனாகி பிறரை அடிமைப் படுத்த அலை

கிறார்கள். அவர்கள் பைத்தியத்தை அவர்களே யறிதல் கூடும். பணத்தைத் தேட வேண்டுமென்று பைத்தியம் பிடித்திலையும் ஒருவனிடத்து அவர்கள் அநுதாபம் கொள்ளுகிறார்கள். பைத்தியக்காரர்கள், பைத்தியக்காரர்களையே ஸ்வாதீன புத்தியுடனிருப்பவர்கள் என்று எண்ணுவது போல் இவர்களும் அவனையே சரியான மனிதனென நினைக்கிறார்கள். ஆனால் பிரபு விடத்தில் அன்பு கொண்ட ஒருவனை அவர்கள் அறிவது யாங்ஙனம்? அவர்கள், அவன் 'பித்தம் பிடித்தவனன். அவனோடு ஒரு சம்பந்தமும் வேண்டாம்' என்கிறார்கள்!

"ஆகையினாலேயே உன்னையவர்கள் பித்தம் பிடித்தவனென்கிறார்கள். ஆனால் உன் பைத்தியமே நியாயமான பைத்தியம். கடவுள் பித்தம் பிடித்தவனே கிருதார்த்தன்; அப்படிப்பட்ட மனிதர்கள் மிகவும் சொற்பம்" என அம்மையார் பரிந்துரைத்தார். அன்னையார் பல வருடங்கள் பையனுடன் தங்கி இந்தியாவிலுள்ள பல்வேறு சமயங்களையும் போதித்து பல்வேறு யோகாப்யாச ரகசியங்களையும் விளக்கி, இப்படிப்பட்டதொரு பெரிய "ஆத்ம ஞான நதியை" உற்பத்தி செய்தார்.

பின்னர் ஒரு சந்நியாசி இந்தச் சோலைக்கு வந்து சேர்ந்தார். அவர் ஒரு தத்வ சாஸ்திரி. அவர் ஒரு நூதனமான மனிதன். உண்மையில் உலகமானது இருக்கிறதென்பதை அவர் நம்பினவரல்ல. இந்த உண்மையை மெய்ப்பிக்க அவர் எந்தக் கூரையின் கீழும் செல்வது கிடையாது. சூரியன் காயும் போதும், மழை பொழியும் போதும், அவர் வெளியிலேயே வாசஞ் செய்வார். இந்த மஹான் வேதங்களின் தத்வங்களைப் பையனுக்கு உபதேசித்தார். வெகு சீக்கிரத்திலே சிற்சில விஷயங்களில் சிஷ்யன் தன்னைவிட மிகுந்தவனென்றும் கண்டார். அவ்வுத்தமர் பையனுடன் அநேக மாதங்களைக் கழித்தார். பின்னர் அத்துறவி பையனுக்குக் காஷாயம் கொடுத்து, சந்நியாசி ஆசிரமத்திலே அங்கீகரித்து, அவ்விடம் விட்டு அகன்றார்.

நிற்க, ராமகிருஷ்ண தேவர் கோயிலில் பூசாரியாக விருந்தபொழுது அவருடைய நூதன தெய்வவழிபாட்டைக் கண்ட ஜனங்கள், அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென முடிவு செய்து விட்டார்கள். எனவே, அவரது பெற்றோரும் மணவினை முடித்தாலாவது பையனது புத்தி கன்னிலையடையாதாவெனக் கருதி, தங்களது கிராமத்திற்கு அழைத்துச் சென்று ஒரு சிறு பெண்ணுடன் மணமுடித்தனர். ஆனால் நிலைமை இப்பொழுதும் மாறினபாடில்லை. பின்னர் வெகு நாள் பொறுத்து தன் புருஷன் மத ஊக்கங்கொண்டு அலைகிறார் என்றும், பலர் அவருக்குப் பைத்தியமே பிடித்து விட்டதெனக் கருதுகிறார்கள் எனவும் அம்மையார் கேள்விப்பட்டார். உண்மையை தான் நேரே கண்டுணரவேண்டுமென விழைந்த அம்மையார், நடையாக நடந்து தன் பர்த்தா இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். தன் புருடன் சந்நிதியில் வந்து நின்றவுடன் அம்மையார் அன்புடன் வரவேற்கப்பட்டார். இளைஞன் தன் மனைவியின் காலிலே விழுந்து 'நான் சம்பந்தப்பட்ட வரையில், மாதா எல்லா ஸ்திரீகளிடத்தும் வதிவதாகக் காட்டிப் போந்தார். ஆகவே எல்லா மாதர்களையும் நான் என் மாதாவாகக் கருத நான் கற்றுக் கொண்டேன். இந்த ஒரு எண்ணமே உன் விஷயத்திலும் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் நான் உனக்கு மணஞ் செய்யப் பட்டிருக்கிறபடியால், நீ என்னை உலகாயத வாழ்விற்கு வர வேண்டுமென்று பணித்தால் நான் காத்திருக்கிறேன்' என ராம கிருஷ்ண தேவர் கனிந்துரைத்தார்.

அம்மையார் புனிதமே வடிவெடுத்தவர். தேவரின் அபிலாஷைகள் இன்னதென அறிந்தார்; அநுதாபங் கொண்டார். 'தங்களை உலக வாழ்விலே இழுக்கவேண்டுமென்ற நோக்கம் அடியேனுக்கில்லை. நான் விரும்புவதெல்லாம் உங்கள் அருகே யமர்ந்து, தங்களுக்கு ஊழியம் புரிந்து, தங்கள் உபதேசங்களை செவி மடுக்க வேண்டுமென்பதே யாகும்' என்று அம்மையார் விடையிறுத்தார். அன்று முதல் அம்மையாரே தேவருக்கு முதல் சிஷ்யையுமானார்.

பல சமய உண்மைகளையும் கண்டறிய வேண்டுமென்பது அடுத்தபடியாக தேவருக்கு வந்த அவா. இதுவரை தன் மதத்தைத் தவிர பிறிதொன்றையு மறியார். இதையடைய வேண்டி ஒரு முகம்மதிய குருவை நாடி அவருடன் வசித்து வந்தார். அவர் பணித்தபடியெல்லாம் செய்தார். இறுதியில் தான் முன்

ணர் பற்றிய பாதையில் என்ன பயனை யடைந்தாரோ அதே பயனையே இதிலும் அடைந்ததாகக்கண்டார். இப்படியே கிறிஸ்தவ சமயத்தையும் பின் பற்றிப் பார்த்தார். இன்னும் பல சமயத்தையும் பின் பற்றினர். இறுதியில் எல்லாம் ஒரு லக்ஷியத்திற்கே இட்டுச் சென்றன என்பதையும் தன் அநுபவத்தில் கண்டார். தேவர் பின்னர் "அடக்கம்" என்னும் அணியைப் பெற விழைந்தார். அதைத் தன் ஒழுக்கத்தில் கொணரவும் ஆரம்பித்தார். அதற்காக "நீசர்கள்" எனக் கூறப்படும் மக்களின் இல்லத்திற்குச் சென்று அதைப் பெருக்கிச் சுத்தஞ் செய்ய உத்திரவிடுமாறு கேட்டார். அம்மக்கள் இக்காரியஞ் செய்ய ஒருப்படுவரோ? ஒரு நாளும் ஒருப்படார். ஆகையால் ராமகிருஷ்ணர் அவர்களுடைய இல்லங்களுக்கு இரவில் சென்று, அவர்கள் தூங்கும் பொழுது, தனது நீண்ட தலைமயிரால் அவர்களது இல்லங்களைப் பெருக்குவார். அதுகாலை "என் அன்னையே! இச்சண்டாளனுக்கு என்னைப் பணி செய்ய ஆளாக்கு. நான் இவனினும் தாழ்ந்தவன்" என்று சொல்லிக் கதறுவார். இப்படிப்பல வருடங்கள் கழிந்தன.

தன் மனதிலிருந்தே ஆண் பெண் என்ற பால் வேற்றுமையைக் களைந்தெறிய வேண்டுமென்றது, அடுத்த படியாக ராமகிருஷ்ணரின் உள்ளத்தில் உதித்தது. ஆத்மாவுக்கு ஆண் பெண் என்ற பால் வேற்றுமை கிடையாது. இவ்வேற்றுமை "பருவுடலுக்கே" உரித்து. ஆத்மாவைத் தரிசிக்க விரும்பும் ஒருவன் மனிதவர்க்கத்தில் இப் பால் வேற்றுமை காணல் கூடாது. ஆணாக உடலெடுத்த இம் மனிதன், தான் செய்யும் எல்லாக் காரியங்களிலும் பெண்டன்மையைக் கொண்டு வர ஆரம்பித்தார். பெண்ணெனத் தன்னை நினைத்தார். பெண்ணைப் போல் உடுத்தார். பெண்ணைப்போல் பேசினர். ஆண்கள் செய்யும் தொழிலையும் விடுத்தார். நற்குடும்பத்திலுள்ள நங்கைகள் மத்தியிலும் வசிக்க ஆரம்பித்தார். இப்படிப்பல வருட சாதனங்களுக்குப் பிறகு தான் ஆண் என்பதையும் மறந்தார். இவ்வாறு பல வழிகளிலும் அவருடைய வாழ்வில் பெரு மாறுதல்கள் தோன்றின.

மேனாடுகளிலே பெண்களை ஆண்கள் வழிபடுகிறார்கள் என நாம் கேள்விப்படுகிறோம். அது எற்றுக்கோ என்றால் அவர்களது அழகுக்கும் இளமைக்குமாம். ஆனால் இம்மஹானுக்கோ ஒவ்வொரு ஸ்திரீயின் முகமும் மாதாவின் முகமே. சமூகம் தொடுவதற்கும் அஞ்சும்படியான கெட்ட நடத்தையுள்ள மாதர் முன்னிலையில் இம்மஹான் கண்ணீர் சொரிந்து நின்று, 'தாயே நீ ஒருருவத்தில் தெருவில் தோன்றுகிறாய்; பிறிதொரு ரூபத்தில் பிரபஞ்சத்தில் மிளிர்கிறாய்; தாயே! நான் உன்னை வந்திக்கிறேன்; தாயே! நான் உன்னை வழிபடுகிறேன்;' எனக் கனிந்துரைப்பார்.

இப்படியாக ராமகிருஷ்ணரது வாழ்க்கையிலே சத்ரு ஷட்வர்க்கமாகிய காம க்ரோத லோப மோக மத மாற்சரிய மென்பவைகளே ஓடிவிட்டன. ஆஹா! இப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கை ஒரு மனிதனுக்கு லபிக்குமானால் அவன் ஏன் பரமானந்தத்தை யடைய முடியாது? பூர்ணத்வம் அடைவதற்கு இவ்வித பரிசுத்தமே தேவை. இன்றேல் ஆத்ம ஞான மென்பதும், சமய நெறி யென்பதும் வேஷமாகும். இப்படியாக பல சாதனங்களால் கலங்கா நிலை ஸ்ரீராம கிருஷ்ணருக்குக் கூடிவிட்டது.

தன் வாழ்விலே முக்கால் பாகத்தைச் செலவிட்டு, சொல்லொணாத் துயரிலுழன்று ஈட்டிய ஆத்ம ஞானமானது, இப்போது உலகிற்கு அளிக்கப்படல் வேண்டும். ஆகையால் உடனே ராமகிருஷ்ணர் தன் வேலையைத் துவக்கினார்.

அவர் உத்தேசமும் நூதனமானது. அவரது உபதேசத்தைச் செவிமடுக்க ஆயிரக் கணக்காக ஜனங்கள் கூடினர். அவருக்கு "நான்" என்பதே கிடையாது. எல்லாம் அன்னையார் செய்வதாகவே அவர் எண்ணினர். 'ஏதாவது நலமான வார்த்தைகள் என்வாயி லிருந்து வருமானால் அவை அன்னையார் அருள்வதாகும்' என உரைப்பார். அவரது கொள்கையோ, 'முதலாவதாக ஒழுக்கத்தைச் சீர்படுத்து, பலன்கள் தானாகவே வரும்' என்பது. 'தாமரைப்பூ மலருமானால் தேனீக்கள் தேனைப் பருகத் தானே வருகின்றன. அதைப் போலவே உன் நல்லொழுக்க மென்னும் பங்கயம் மலருமானால் பலன்கள் தானே வரும்' எனப் பகர்வது அவருக்குகந்த உதாரணமாகும்.

இது உலகிற்கே பெரும் பாடமாகும். எண்ணத்தின் சக்தியைச் சிலரே அறிந்துளார். ஒரு மனிதன் ஒரு குகைக்குளே சென்று, உள்ளபடியே ஒரு உத்தமமான எண்ணத்தை நினைத்து மரிப்பானுனல், அவ் வெண்ணம் அக்குகையின் கடினமான சுவர்களை ஊடுறவிச் சென்று உலகெங்கும் பரவி மனிதவர்க்கத்தையே ஆட்டி வைக்கு மென்பதில் ஐயமில்லை. எண்ணத்தின் சக்தி அத்தன்மைத்து. 'உன்னுடைய எண்ணங்களை மற்றையோருக்கு அளிப்பதில் அவசரம் வேண்டாம். முதலில் உன்னிடம் பிறருக்கு அளிப்பதற்கு ஏதேனு மிருக்கட்டும். பிறருக்கு அளிப்பதற்கு ஏதேனுமுள்ளவனே உபதேசம் செய்யக் கூடும். உபதேச மென்பது, கொள்கைகளை பிறருக்குப் போதிப்ப தென்பதில்லை. உபதேச மென்பது கற்றுக் கொடுப்ப தென்பது மில்லை.'

'ஆத்ம ஞான மென்பது, ஒரு மலரை யெடுத்து, ஒருவன் மற்றவனுக்கு அளிப்பது போல், கொடுக்கக் கூடிய தன்மையுள்ளது. இது உண்மையிலு முண்மை. ஆகவே உண்மையை நீயே உணர். பின்னர் நீயதைப் பலருக்குப் போதிக்கலாம்.' இதுதான் ராமகிருஷ்ணரது கொள்கை.

அவர் எவரையும் குறை கூறினதே கிடையாது. அவர் எந்த வகுப்பாரையும் இழித்துக் கூறினது மில்லை. பன்மை நிறைந்த இப்பாரிலே ஒருமை கண்ட உத்தமர் அவர். அவர், எம்மதத்திலும் நன்மையை யன்றித் தீமையைத் தினைத் துணையும் கண்டதே கிடையாது.

இம் மஹான் கடைசியாக கல்கத்தாவிற்கு வாசஞ் செய்ய வந்தார். கல்கத்தாவில் ஆங்கிலக் கலாசாலைகளிலே வாசித்து, விஞ்ஞான சாஸ்திர (Science)க் கொள்கைகளால் உலகாயத வசப்பட்டு, கடவுளே கிடையாதென சாதிக்கும் பல நாத்திகர்களும் (Atheist) ராமகிருஷ்ணரைக் காணவந்தனர். நானும் இம் மனிதனைப்பற்றிக் கேள்விப் பட்டேன். பார்த்துப் பேசவும் சென்றேன். அவர் சாதாரண மனிதனுகவே எனக்குத் தோன்றினர். அப்ராக்ருத தோற்ற மொன்றும் அம்மனிதனிடத்தில் எனக்குப் புலப்படவில்லை. பேசும் பாஷையோ மிகவும் எளிய நடையிலே இருந்தது. இம்மனிதனும் பெரிய தொரு "குரு" ஆவாரோ என்ற ஐயமும் என் மனதுளே ஜனித்தது. அம்மனித னருகில் சென்றேன். என் ஜீவிய மெல்லாம் வழக்கம்போல் கேட்டு வந்த கேள்வியையும் கேட்க ஆரம்பித்தேன். "கடவுளிருப்பில் தங்களுக்கு நம்பிக்கை யுளதோ ஐயா? என்றேன். "ஆம்" என விடை கிடைத்தது. அதை நிரூபித்தல் இயலுமோ ஐயா" என யான் மறுபடியும் உசாவினேன். அதற்கும் "ஆம்" என்ற பதிலே கிடைத்தது. நான் விடாது, "எப்படி?" என மறுபடியும் கடாவினேன். "உன்னை என் எதிரில் காண்பது போலவே அவரையும் காண்கிறேன்." என உரைத்தார். இம்மொழிகள் என் மனதில் ஊடுறுவிப் பாய்ந்தன. இவ்வுலகையும் அதிலுள்ள பொருளையும், புலன்களால் எவ்விதம் நுகர்வது சாத்யமோ அவ்விதமே சமயமும் கடவுளும் காட்சிக்கு உரியன என்று சொல்லத் துணிந்த மனிதனை நான் அன்று தான் கண்டேன். தினந்தோறும் அம் மஹானை நான் பார்க்கச் சென்றேன். நாளடைவில், மதமும் பிறருக்கு வழங்கக் கூடிய வெற்றி பெற்ற பொருளெனவுங் கண்டேன். பெரியோர்கள் ஸ்பரிசமும் பார்வையுமே ஒரு ஜீவ்யத்தை மாற்றக்கூடிய திறன் பெறறவை யெனவுங் கண்டேன். புத்தரைப்பற்றியும், முகம்மது கிறிஸ்துவைப் பற்றியும் நான் வாசித்துளேன். அவர்கள் ஒருவனைப்பார்த்து, "நீ பரிபூரணத்வம் எய்தக்கடவாய்" என்று இயம்பிய மாத்திரத்தில் அவன் எவ்வாறு அவ்வாறே ஆயினன் என்பதையும் நான் படித்துளேன். அவைகளெல்லாம் உண்மை யெனவுங் கண்டேன். என் சமுசயங்களெல்லாம் எங்கோ சென்றன." மத மென்பது பேச்சுமல்ல; கொள்கைகளும் கற்பனைகளுமல்ல ; சமூகத்திலும் வகுப்பிலும் மதம் வாழ்ந்திருக்காது. மதம் என்பது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஏற்பட்ட உறவேயாகும். எனவே அதை வகுப்பிலும் ஜாதியிலும் கொணர்தல் எவ்விதம் அறிவுடைமையாகும் ? நூல்களிலும், சொற்பொழிவுகளிலும் வார்த்தைகளிலும் சங்கங்களிலும், மதத்தைக் காண விழைவது மடமையே யாகும். மதம் அநுபூதியிலேயே அடங்கியுளது." என என் குருநாதர் சொல்லுவது வழக்கம்.

நாம் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு தான் தர்க்கித்தாலும், எவ்வளவுதான் கேள்வி ஞானம் உடையவரா யிருந்தாலும் அவைகளெல்லாம் நமக்குத் திருப்தி யளிக்கா. ஆனல்

அநுபூதியொன்றே ஆறுதல் அளிக்கக் கூடியது. அவ்வித ஆத்மாநுபூதி எய்தல் எவருக்கும் சாத்யமானதே. ஆகையால் முயற்சி தேவையாகும். விடாமுயற்சி வெற்றியைக் கொடுக்குமன்றோ! இவ்வழியில் முயற்சிப்பதற்கு துறத்தலே முதற்படியாகும். நம்மால் கூடுமானவரையில் முதற்படியாக துறக்க முயற்சிக்க வேண்டும். இருளும், வெளிச்சமும் உலக வின்பமும் கடவுளின்பமும், ஒருகாலும் சேர்ந்திருத்தல் சாத்யமன்று. கடவுளையும் பணத்தையும் ஏக காலத்தில் ஆராதித்தலும் சாத்ய மன்று. உண்மையான உரை ஒன்று உண்டென்றால், ஆண்டவனுக்காக மற்ற எல்லாப் பொருளையும் தூவென்று உகுத்தல் என்பதேயாகும். இப்பணி மிகவும் கஷ்டமான தெனினும், அதைக் கொஞ்சங் கொஞ்சமாக இன்ற அநுஷ்டானத்தில் கொணரப் பிரயத்தனப் பட வேண்டும்.

என் குருநாதரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட மிக மிக முக்கியமான இரண்டாவது கொள்கை என்னவெனின், உலகத்திலுள்ள எல்லா மதங்களும் ஒன்றுக்கொன்று இணங்கக் கூடியனவே யன்றி பிணங்கக் கூடியன வல்ல என்பது. பல் வேறு சமயங்களும், ஒரு சாசுவதமான சனாதன சமயத்தின் வேறுபாடுகளாகும். அந்த சனாதனமதக் கொள்கைகளே பல் வழிகளிலும் பல் ஜாதியாருக்கும் பலவித மாய் அவரவர் நடை யுடை பாவனைக்குத் தகுந்தவாறு பயன்படுகின்றன. எங்கும், எக்காலத்தும், என் மதமென்றும், உன்மதமென்றும், என் தேச மதமென்றும், உன் தேச மதமென்றும், இருந்ததே கிடையாது. ஒரு மதமே எப்பொழுதும் உலகில் திகழ்ந்தது; ஒரு அகண்ட மதமே அனாதியாக இருந்து வந்தது, இருந்து வருகிறது. அம்மதமே பல தேசங்களிலும் பல விதமாய்த் திகழ்ந்து வருகிறது. ஆகையால் நாம் மதங்கள் எல்லாவற்றையும் மதித்து நடப்பதுடன், நம்மால் கூடுமானவரை சமயங்கள் எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளவும் பிரயத்தனப்பட வேண்டும். பூகோள நிலைக்கும் ஜாதிய நிலைக்கும் தக்கவாறு மதமானது மிளிரினும், தனி மனிதனிடத்தும் அவன் தன்மைக் கேற்றவாறு திகழ்கிறது. ஒரு மனிதனிடத்தில் மதமானது கர்மமாக இலங்குகிறது. வேறொரு மனிதனிடத்தில பக்தியாகப் பரிணமிக்கிறது. பிறிதொரு மனிதனிடத்தில் தத்துவமாகத் திகழ்கிறது. வேறொரு மனிதனிடத்தில் யோகமாக ஒளிர்கிறது. எனவே மாறுபட்ட சுபாவத்தோடு மனிதர்கள் இருக்கும் வரை ஒரே மத உண்மை பலரிடத்தும் பலவிதமாகப் பரிணமிக்கும். இந்த உண்மையை நாமறிந்தால் நம்மிடம் சஹிப்புத்தன்மை தானே யுண்டாகும் என்பதில் ஐயமில்லை.

என் குருநாதர் முன்னிலையில், இந்த உடலோடுங்கூட மனிதன் நிறைவுள்ளவனாயிருத்தல் கூடுமென்பதை யான்கண்டு தேறினேன். அந்த உத்தமரின் அதரங்கள் எக்காலத்தும் வசை மொழிகளை உச்சரித்து மறியா, அவைகள் எவரையும் குறை கூறினதுமில்லை. அக்கண்கள் தீமை என்பதைக் கண்டதுங் கிடையாது. மனதோ கெடுநியை நினைக்கும் சக்தியையே இழந்து விட்டது. நன்மையைத் தவிர தீமையை அவர் எங்கும் கண்டதில்லை. அவ்வித பரிசுத்தமும் துறவுமே ஆத்மஞானம் அடைவதற்கு வேண்டுவன "செல்வத்தினாலல்ல, பிரஜா உற்பத்தியினாலல்ல, துறவினாலேயே அழிவின்மை அடையக் கூடியது" என வேதங்கள் கோஷிக்கின்றன. "நீ வைத்திருப்பதையெல்லாம் விற்று, ஏழைகளுக்கு அளித்துவிட்டு என்னைத்தொடர்" என்று "இயேசு" இயம்புகிறார்.

எனது குருநாதர் துறவே உருவெடுத்தவர். காமத்தை வென்ற கண்யர். இரண்டற்ற இறைவர்.

அடுத்த படியாக அவரது வாழ்வில் மற்றையோரிடத்தில் அவர் காட்டிய மட்டற்ற அன்பாகும். அவர் வாழ்வில் முன்பாகம் ஆத்மஞானத்தை ஈட்டுவதில் செல்விடப்பட்டது. பிற்பாகம் ஈட்டியதைச் செலவிடுவதில் விநியோகிக்கப்பட்டது. ஒரு மத குருவை, நீங்கள் தரிசிக்கப்போவது போல் எங்கள் தேசத்தார் செல்லமாட்டார்கள். சிலர் ஒரு கேள்விக்குப் பதில் தெரிந்துகொள்ள நூற்றுக் கணக்கான மைல்கள் நடந்து வருவார்கள்.

"நான் முக்தியடைய ஒரு வார்த்தை உங்கள் வாயால் சொல்லுங்கள்" எனக் கெஞ்சுவார்கள். இவ்விதமாகப் பலர் வருவார்கள். இரவு பகலென்ற நேரமும் கிடையாது. ஆகையால் 24 மணி நேரமும் சில வேளைகளில் பேசும்படியாக நேரிட்டு விடும். இப்படி ஓய்வின்றிப் பேசிய படியால் எனது குருநாதருடைய உடல் நாளுக்கு நாள் மெலிய ஆரம்பித்தது. தன்னுதவியை நாடிய எவரையும் அவர் மறுத்ததே கிடையாது. ஆகவே அவரது தொண்டையில் கோளாறு ஏற்பட ஆரம்பித்தது. ஆயினும் அவர் தம் வேலையை நிறுத்தவில்லை. நாங்கள் என்ன சொல்லியும் அவர் கேட்கவுமில்லை. "யாராவது பார்க்கவேண்டுமென்று வந்தால் அவர்களை உடனே உள்ளே விடுங்கள்" என்பார். நாங்கள் மறுத்துக் கூறினாலோ, "எனக்கு அவசியமில்லை, ஒரு மனிதனைக் கரையேற்ற இம்மாதிரியான 2000, ஜன்மம் எடுத்தாலும் எனக்குப் பரவாயில்லை' எனப் பகர்வார். ஆகையால் அவருக்கு ஓய்வென்பதே இல்லாமல் போய்விட்டது.

ஒரு தடவை ஒருவர் எனது குருமணியை நோக்கி "ஐயா! தாங்கள் ஒரு பெரிய யோகி; தங்களுடைய மனதைச் சிறிது உங்கள் சரீரத்தின்மேல் திருப்பி உங்களுக் குண்டாயிருக்கும் வியாதியை தீர்த்துக்கொள்ளலாகாதா," எனப் பரிவுடன் கேட்டார். முதலில் தேவர் பதிலளிக்கவில்லை. கேள்வியும் விடாமல் கேட்கப்பட்டது. உடனே ராமகிருஷ்ணர் "நண்பரே! நான் தங்களை ஒரு முனிவரென மதித்தேன். ஆனால் நீங்கள் மற்ற உலக மாந்தர்களைப் போல் உரையாடுகிறீர். இந்த மனது ஏற்கனவே பிரபுவின் பாதாரவிந்தங்களில் அர்ப்பணம் செய்யப்பட்டு விட்டது. ஆகையால் இந்த ஆத்மாவுக்குக் கூட்டை (cage) யொக்கும் இந்த சரீரத்தின்மேல், பிரபுவுக்கு அளிக்கப்பட்ட மனதைத் திரும்ப எடுத்து, வைக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்களா?" என விடையிறுத்தார்.

இவ்வழியிலே விடாது அவர் உபதேசஞ் செய்யலானார். அவரது உடலும் கரைந்தது. அவருடைய உடலை விட்டு உயிரும் நீங்கப் போகிறதென்ற செய்தியும் ஊர் முழுவதும் பரவலாச்சுது. கோடிக்கணக்கான ஜனங்கள் கூடலானர். அவருடைய உடையை யாவது ஸ்பரிசிப்போம் எனக்கூடினவர் பலர். பிறரிடத்திலிருக்கும் ஆத்ம ஞானத்தை இப்படிப் பாராட்டுவதின் மூலமே, ஆத்ம ஞானம் தன்னிடத்தில் மிளிர்கிறது. மனிதன் எதை விழைந்து பாராட்டுகிறானோ அதை யவன் பெறுவான். இந்த சட்டம் ஒரு தனி மனிதனுக்கானால், அச்சட்டமே ஒரு ஜாதிக்கும் பொருந்தும். நீங்கள் இந்தியா சென்று அரசியல் உபன்யாசம் ஒன்று எவ்வளவு அரியதாகச் செய்தாலும், உங்கள் உபன்யாசத்துக்குச் செவி சாய்ப்போர் மிகவும் சொற்பமாகவே யிருப்பர். ஆனால் மத உபன்யாசம் செய்யுங்கள். உங்கள் பாதங்களைத் தொட்டு மாரியாதை செய்யப் பலர் கூடுவர்.

இப்படிப்பட்ட புனித மனிதன் தங்கள் மத்தியிலிருந்து செல்லப்போகிறார் என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவிற்று. லக்ஷக் கணக்கானோர் கூடினர். என் நாதரும் தன் உடல் நலன் கவனியாது உபதேசஞ் செய்தனர். எங்களால் இதைத் தடுக்கவும் முடியவில்லை. அநேக மைல் தூரத்திலிருந்து பல ஜனங்கள் வந்தனர். அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்த்தாலன்றி அவருக்கு ஓய்வு என்பது கிடையாது. "நான் பேசச் சக்தி பெற்றிருக்கிற போதே நான் அவர்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டும்" என, அவர் உரைப்பார். ஒரு நாள் அவர் எங்களிடம் என் உடலை இன்று விட்டுவிடுவேன்' என்று சொல்லி வேதத்தின் மிக மிக முக்கியமான மந்திரத்தை உச்சரித்து சமாதி நிலை சென்று தன் உடலை விடுத்தார்.

அவருடைய எண்ணங்களையும் செய்தியையும் ஒரு சிலரே யறிவர். தன் வேலையை விடாது நடத்த உலகைத்துறந்த ஒரு சில இளஞ் சிஷ்யர்களையே, ராமகிருஷ்ணர் விடுத்துச் சென்றார். அவர்களை நசுக்கிவிட முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அப்பெரியாரின் ஸ்பரிசம் பட்டவர்களானபடியால் அவர்கள் உறுதியுடன் நின்றார்கள். இவர்களில் சிலர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயினும், சந்யாசி வாழ்க்கை நடத்தி, தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரிலேயே தெருக்களில் இரந்து சென்று தங்கள் ஜீவ்யம் நடத்தினார்கள். பல இடையூறுகள் முதலில் அவர்களுக்கு ஏற்பட்டன. ஆனால் அவர்கள் விடாமற் முயன்று, தேசம் முழுவதும் அப்பெரியாரின்

கொள்கைகள் பரவும் வரை பிரசாரம் செய்தார்கள்.

ஆஹா ! வங்கத்திலே, ஒரு குக்ராமத்திலே, எளிய, செந்தண்மை பூண்டொழுகிய அந்தண மரபிலே, பெரியோர் வயிற்றிலே, பிறந்த ஒரு பாலகன், படிப்பென்பதே சிறிதுமின்றி, தன் உறுதியின் சக்தி கொண்டு உண்மையை யுணர்ந்து பிறர்க்குரைத்த பெற்றிதான் என்னே, என்னே.''

இன்று ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய பெயரானது இந்திய தேசத்துக் கோடிக்கணக்கான மக்களால் அறியப்பட்டு விட்டது. அது மாத்திரமா ? அவருடைய சக்தி இந்தியாவுக்கு அப்பாலும் திரைகடலைக் கடந்தும் பரவி விட்டது. உலகத்திலே எந்த இடத்திலாவது உண்மை நிறைந்த ஒரு வார்த்தை,—ஆத்ம ஞானம் நிறைந்த ஒரு சொல், நான் உரைத்திருப்பேனானால் அது என்னுடைய குருநாதனுக் குரியது. குற்றங்களே என்னுடையன.

தற்கால உலகிற்கு ஸ்ரீராம கிருஷ்ணரின் செய்தி இதுவேயாகும். கொள்கைகளையோ வகுப்புகளையோ சர்ச்சுகளையோ ஆலயங்களையோ பெரிதும் மதித்துப்போரிடாதே. மனிதனிடத்தே யிருக்கும் ஆத்ம சக்தி என்ற சத்தோடு ஒப்பிடுங்கால் அவைகளெல்லாம் ஒன்றுக்கு முதவா. ஆகவே அந்த ஆத்ம சக்தியைச் சம்பாதி. எவனொருவன் அதை அதிகமடைவானோ அவன் சர்வ சக்தியுள்ளவன். அதை ஈட்டு ; அதைச் சம்பாதி, எவரிடத்துங் குற்றங்கண்டு இகழாதே. ஏனெனில் பல்வேறு வகுப்புகளிலும் கொள்கைகளிலும் கொஞ்சமேனும் நன்மையும் உண்மையுமுண்டு. உன் வாழ்க்கையினாலே மதமென்பது வார்த்தையும் பெயரும் வகுப்புமல்ல ; ஆனால் ஆத்மானுபூதியே என்று நிரூபித்துக்காட்டு. அதையுணர்ந்தவர்களே யறிதல் கூடும். ஆத்ம ஞானத்தைப் பெற்றவர்களே பிறருக்கு அதை வழங்க முடியும். அவர்களே மனிதவர்க்கத்தின் குருவாவார். அவர்களே ஜோதியின் சக்தியுமாவார்.

அவ்வகை மனிதர் எந்த நாட்டில் அதிகம் தோன்றுவரோ அந்நாடு முன்னேறி வாழும். எந்நாட்டில் அவ்வகை மனிதரில்லையோ அந்நாடு பாழ்த்துப்போகும். ஆகையினால் என்னுடைய குருநாதரின் கொள்கை என்னவெனின் ''ஆத்ம ஞானியாய் வாழ்ந்து உண்மையை நீங்களே உணருங்கள் '' என்பதாம்.

மற்ற மதாசார்யர்களெல்லாம் தங்கள் பெயர் தாங்கிய தனித்தனி தர்மங்களை உபதேசித்துச் சென்றனர். ஆனால் இப் பத்தொன்பதாம் நூற்றாண்டு மதாசாரியரோ தன் பெயரால் எவ்வித உரிமையையும் கொண்டாடாது சென்றனர். அவர் எந்த மதத்துக்கும் ஊறு செய்யாது சென்றனர். ஏனெனில் பல்வேறு மதங்களும் ஒரு நித்யமான, சனாதன தர்மத்தினின்று எழுந்தன என்பதை அவர் உண்மையில் உணர்ந்தவ ரன்றோ!

ஓம் சாந்தி : சாந்தி சாந்தி :

---


## வேதாந்த நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் விரிவான சரித்திரம் முதல்பாகம் | ரூ. 2 0 0 | ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் | ரூ. 1 4 0 |
| டை 2-வது பாகம் | ரூ. 2 0 0 | ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் விரிவான சரித்திரம் | ரூ. 2 0 0 |
| ஸ்ரீ விவேகானந்த விஜயம் | ரூ. 1 12 0 | | |

முத்தையா புக் டிப்போ, தபால் பெட்டி 99, :: சென்னை.

# காலத்தின் நிலை

ஆசிரியர் மு. மாணிக்க நாயகரவர்கள், புதுவை.

நேரிசை வெண்பா.

நன்மைகளுக் கால மிலையென்று நாடோறுந்
தின்மைக்குத் தோள்கொடுப்பார் தேக்கமா—வின்மை
குறைவில்லை யாவர்க்குங் கொள்ளுங் கருத்து
மறையின் மிகப்பல வாம்.

நூலையே பின்பற்று நுண்ணறிவைக் கொண்டொழுகு
மேலைக் குணத்தோர்கண் மேலில்லை ;—நூனுணக்க
மற்றவ் வொழுக்கமுறை வற்றச் சிறுதகையோர்
முற்று மேலாவார் முளம்.

நாட்டுப் பழக்க நழுவவிட்டு வெள்ளையர் தந்
நாட்டுப் பழக்க நனியுற்றோர்—வீட்டுள்ளு
டனைவிமுதன் மக்கண் மருவிய சுற்றத்
தனைவரையு மம்முறை செய் வார்.

உண்மை பொறுமை யுவப்பளிக்குந் தன் முயற்சி
வண்மை புகழ் விளக்கும் வாழ்க்கையுடன்—றிண்மையுங்
காலநிலை நோக்கிக் கரந்துருக் கொண் டாழ்ந்தனவாற்
சால மனவிரக்கஞ் சார்ந்து.

கல்விநல முள்ளார்க்குங் கல்விநல மில்லார்க்குஞ்
சொல்லவொரு மாறறமுந் தோன்றுமோ—வெல்லார்க்கும்
வணக்கம் பெருமதிப்பு வாழ்த்து மரியாதை
கணக்கிற் குறைவில்லை காண்.

குடியன் வெறியன் கொலையனொடு வம்பன்
றடிய னிவர்தமக்கே காலங்—கடியுணர்வார்
நல்லார் குணக்குன்றர் நன்சொற் சிறப்பின்றிப்
புல்லாய் மதிக்கப் புகும்.

படித்த பெரும்புலவர் பாங்குடனே தீட்டி
விடுத்த பல நூல்கள் மேவுவதில் ;—தொடுத்த கல்வி
சொற்பமே யுள்ளாருந் தோற்றும் புது நாவல்
விற்பனைக்கே முந்தும் விளம்பு.

ஒன்றைநங் கண்ணுக்குக் காட்டிமற் றொன்றையே
யென்று மியற்று மியல்பினோர்—மன்றுளே
போற்றுந் தலைவரைப்போற் போற்றப் படும்பெருமை
சாற்ற முடியாது தான்.

வஞ்ச மனமுடனே வாங்குமொரு லஞ்சத்திற்
கஞ்சாது பொய்சொல்லி யாள்கின்ற—வஞ்சகர்க
டாமு மகாருந் தமரு முலகத்தார்
காமுறவே வாழ்வதிக் கால்

பச்சைப் புளுக னெனினும் பணமுண்டேல்
மெச்சிப் புறஞ்சூழ்வர் மேதினியோர்—உச்சமுள
வாய்மை யுடையான் வறியவனென் றாலுந்
தூய்மைய னென் றெண்ணார் துணி.

# பதினெண் கீழ்க் கணக்கு.

## I. கார் நாற்பது.

(திரு. B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

(1) கடைச் சங்கம் மருவிய சிறந்த நூற்றொகைகளுள் ஒன்றாய பதினெண் கீழ்க் கணக்கினைச் சார்ந்த "கார் நாற்பது" என்ற நூல் சிறிதேயாயினும் அமைப்பிலும் பொருளிலும் மிகவும் பெருமை வாய்ந்தது. அந்நூல் ஆசிரியரின் புலமை அதின் சிறப்புப் பாயிரத்தினின்றே அறியற்பாலது.

"முல்லைக்கொடி மகிழ மொய்குழலாருண் மகிழ
மெல்லப் புனல் பொழியு மின்னெழிற் கார்-தொல்
[லை நாள்
வல்லாருள மகிழத் தீந் தமிழை வார்க்குமே
சொல்லாய்ந்த கூத்தர் கார் சூழ்ந்து."

அந் நூலாசிரியர் மதுரைக் கண்ணங் கூத்தனார் என்பார். இற்றைக்கு சுமார் 1700 ஆண்டுகட்கு முற்பட்டிருந்தவரென்றும், அவர் பிறப்பிடம் மதுரையென்றும் கடைச் சங்க காலத்தின் இடைப் பகுதியில் வாழ்ந்த புலவருள் தலை சிறந்து விளங்கினரென்றும், அவர் திருமாலையே பெரும்பாலும் வணங்கினாரென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இயற்கைப் பொருள்களாகின்ற வனம், காலம், பருவம், பொழுது, கருப் பொருள், உரிப்பொருள், இவைகளைத் தான் கண்ணார நேரிற்கண்டுள்ள தன்மையாய், அழகு பட இன்பம் ததும்பப் பாடி இருக்கும் பாக்களினால் இயற்கை நலனை அணிவகுத்துக் கூறுவதில் இந்நாட்டில் சீர் வாய்ந்துள்ள மதுர கவிஞர்களினும், மேனாட்டின் கண் இயற்கை நலனை இன்னிசையால் பாடியுள்ள ஹோமர், ஷேக்ஸ்பியர், கெய்ற்றி இவர்களினும் தாழ்ந்தவர் அல்லரெனவும் ஆராய்ச்சியினாற் காணப்படும்.

2 இனி முச்சங்க காலங்கள் அச் சங்க காலங்களீந்த பிரபல நூற்களின் கால வேற்றுமைகள் தொகுதியில் சேர்ந்திருப்பவை சேர்வதற் குரியனவோ என ஐயமுற்றெழும் சமுசயங்கள் இவைகளைப்பற்றி ஆராய்ச்சிகள் பல காண்போமாயினும் அவையனைத்தும் நம்பத் தகுந்தவைகளன்று. அவைகளைப்பற்றி மிகுந்த நுட்ப அறிவோடும் ஆழ்ந்தறிந்த சரித்திரக் குறிப்புகளின் ஆதாரவோடும் இவ்விடம் தெளிந்தறிய போதிய சௌகரியமும் சமயமும் கிடைப்பதற்கரிது பற்றி அவை பற்றி இனியோர் தருணத்து ஆராய்ச்சி செய்வாம்.

3 மக்கட் பிறப்பிற் குரித்தாய அறம் பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு புருடார்த்தங்களில் இன்பப்பகுதியைக் கூறா நிற்கும் அகப்பொருள் உணர்த்தும் இந்நூல் முல்லைத் திணையையும் கற்பொழுக்கத்தையும் தழுவி கார்கால நிகழ்ச்சியை உள்ளுறைப் பொருள் தருங் கருத்துடன் அமைந்துளாயது. அகவொழுக்கத்தை கார்காலம் நிகழ்ந்தவுடனே காடெங்கும் நாடெங்கும் கனிந்து இன்பந்தரும் தோற்றங்களாற் செப்பஞ் செய்து கற்பொழுக்கத்தையே மன்றால் எட்டினுள்ளும் இல்லற வாழ்விற்கு இன்றியமையாததென சிறப்பித்துக் கூறியுள்ளார். நாடகரூபமாய் அமைத்து உயர்ந்த உபமான உபமேயங்களால் அலங்கரித்து பகுத்தறிவற்ற மிருகம், பறவை விரும்பும் விருப்பமே காம வேட்கையெனவும், தலைவர், தலைவி தம் உள்ளத்தாலேயே அன்புடன் நினைந்து இன்புறும் நிலையினையே உண்மையாய்க் கடைப்பிடித்தொழுகா நின்ற காதல் எனவும் யாம் அறிந்துணருமாறு கூறியிருக்கின்றார். இந்நூலன்றி இதர நூற்கள் இவ்வாசிரியர் இயற்றிலராயினும் இவ்வொரு நூலே அவரது கவிச்சுவையையும் சுமனோநிலையையும் இசையின்பத்தையும் ஆசிரியர் கற்பிக்கும் ஒழுக்கத்தின் உயர் சிறப்பும் அக்காலத்தே நிகழ்ந்த தமிழரின் வழக்க வொழுக்கங்களையும் வேந்தரியல்பினையும், இல்லற மாண்பையும் கற்பின் பெருமையையும் எடுத்தாளப் போதிய பொருளும் புலமையும் நிறைந்துளதென ஐயந்திரிபறக் கூறல் வேண்டும். இந்நூலின் இயல்பை அதினின்றும் சில பாக்களாலேயே அறிவித்தல் மிகவும் நலம்.

4. அரசர் ஆணையை மேற்கொண்டு அவருக்குத் துணையாய் அயலூர் சென்று போர் புரிந்து வெற்றியும், புகழும், வேண்டும் செல்வமும் பெற்று கார்காலம் நிகழ்ந்தவுடன் திரும்பி வருதுமென உரைத்துச்சென்ற

தலைமகன் திரும்பி வராத காரணம் பற்றிக்கற்புடைமகளிராகிய தலைவி மிகுந்த துயருற்றுச் சோர்வடைந்தாள். அப்பொழுது பக்கத்திலிருந்த தோழி கூறுகின்றாள் :—

'இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோலுண்கண்ணாய் பொய்யன்மையீண்டைப்
பவழஞ் சிதறியவை போலக் கோபந்
தவழுந் தகைய புறவு"

கூறிய அம்பு போன்ற கண்களை யுடைந்தாய மாதரசே! வேந்தன் கட்டளையை மீறின் அவ்வேந்தும் உலகமும் தன்னை இகழுவாரென்றஞ்சி, போர்க்களத் தேகிய நின் றலைவன் தவறாது திரும்புவார்; நீ நின் பவளத்தை அற்றுச்சிதறி யிருக்கின்ற தன்மையாகவே காடெங்கும் குளிர்ந்து இந்திர கோபமென்ற தம்பலப்பூச்சிகள் மொய்ப்பான் தொடங்கிற்று.

5. தலைவன் வரவில்லை. தலைவி பின்னும் வருந்துகின்றாள். கார்காலம் எங்கும் நிகழ்ந்தது. தலைவியின் ஆற்றாமை கண்டு தோழி கூறுநிற்பாள் :—

" கல்பயில் கானங்கடந்தார் வரவாங்கே
நல்விசை யேறொடு வான நடு நிற்பச்
செல்வர் மனம் போற் கவினீன்றநல்கூர்ந்தார்
மேனிபோர் புல்லென்ற காடு.

வானத்தின் கண் மேகம் அடர்ந்து இடிமுழக்கத்துடன் மழை பொழிய வறுமை யுற்றார் மேனிபோல் வாட்டங்கொண்டிருந்த புற்காடு செல்வமுற்றார் மேனிக் கொப்ப தளிர்த்துப் பூவரும்புகள் தர, கற்பாறைகள் அடர்ந்த காட்டைப் புறக் கணித்துச் சென்ற நின் காதலர் வாராமலிரார்"

6 தலை மகன் தன் பாகனைப் பார்த்து "நாம் குறிப்பிட்ட காலம் எய்தியது. என் நாயகியும் எதிர்பார்த்திருப்பாள். ஆகலின் நாம் திரும்புவோம்" எனக் கூறுகின்றான்:—

"வீறு சால் வேந்தன் வினையு முடிந்தன
வாறும் பதமினிய வாயின—வேறாக
டருமணி நாகமனுங் கச்செருமன்னர்
சேனை போர் செல்லு மழை.

சிறப்புற்ற அரசர் ஏவிய போர்த் தொழில் முற்றும் இனிது முடிவாயிற்று; நாம் திரும்பிப் போக வேண்டும்; வழிப்பாதைகளும் நேராய்விட்டன. அருமையான நாகரத்தினங்களைக் கொண்டுலாவிய நாக சர்ப்பங்கள் பயந்து நடுக்கங் கொள்ளுமாறு இடியுடனே மழைத் தாரையை மேகங்கள் பொழிகின்றன. ஆயின் நாம் குறிப்பிட்ட காலம் இதுவே; விடைபெற்று மீள்வோம்."

7. பின் அரும் தலைவன் வாராதது கொண்டு தலைவி மிகவுங் கவலையுற்றதை தோழி கண்டு கூறுகின்றாள்:—

" கண்டிரண் முத்தங் கடுப்பப் புறவெல்லாந்
தண்டுளி யாலி புரளப் புயல் கான்று
கொண்டெழில் வானமுங் கொண்டன்—றெவன்
[கொலோ
ஒண்டொடி யூடு நிலை"

ஒளி வீசும் வளையல்களைக் கையிலணிந்த இளம் பெண்ணே! திரண்டுருண்ட முத்துக்களை யொப்ப கானம் எங்கும் நீர்த்துளிகள் ஆலங்கட்டிகள் நிறைந்து ததும்ப, வான மெங்கும் மேகம் பரவி மழை பொழிய தலைவர் வருங் காலம் இதுவே; அங்ஙனம் வாராதொழியின் அவர் வார்த்தையை நம்பி நீ மிக வருந்த வேண்டுவதேன்? ஆயின் ஆவி வருந்தேல்."

8. இங்கு இவ்வாறாக அவண் தலைமகன் இனித்தன் கற்பியன் மங்கை உயிர் தரித்திராள் என மனம் நொந்து வருந்தும் விதமும் காண்க. அப்பொழுது தலைமகன் கூறுகின்றான் (தனக்குள்ளேயே) :—

"எல்லா வினையுங் கிடப்ப எழு நெஞ்சே
கல்லோங்கு கானங் களிற்றின் மதநாறும்
பல்லிருங் கூந்தல் பணி நோனுள் கார்வானம்
மெல்லவுந் தோன்றும் பெயல்"

கருங்கற்பாறைகள் மிகுந்த கான மெங்கும் இக்கார் காலத்தில் யானைகளின் மத நீர் வீசுகின்றது; வானத்தில் மேகம் நெருங்கி மழை பெய்யத் தொடங்கிற்று; இருண்டு பலவாய்ச் சுருண்ட கூந்தலையுடைய என் மாது யான் கூறிவந்த அமயமும் பொழுதும் நேர்ந்தன வென்று மிக வருந்துவாள்; பொறுத்திருக்க மாட்டாள். ஆயின் என் மனமே! நாம் புரியுந் தொழில்களும் சற்றே ஒதுங்கி நிற்க நீயும் நானும் ஒருமைப்பட்டுத் திரும்புவோம்.

9. ஒரு வேளை உயிர் தரித்திராராயின் நாம் முன்கூறு ஓர் தூதினை ஏவி தலைவியின் ஊடல் தணிப்போ மென்று தலைவன் ஓர்

தூதினை யனுப்ப அது கண்டு தோழி தலைமகட்குச் செய்தி கூறுகின்றாள்,

"சுல மிகு கார்த்திகை நாட்டவரிட்ட
தலை நாள் விளக்கிற்றகை யுடையவாகிப்
புல மெலாம் பூத்தன தோன்றி சில மொழி
தூதொடு வந்த மழை"

மெதுவாகச் சொற்ப மொழிகளே புகல் கின்ற பாவாய்! அழகுபடுத்துகின்ற திருக்கார்த்திகை தினத்தில் நாடு முழுமையும் விளக்குகளின் தீபங்கள் இரவினை அழகு செய்வதற் கொப்ப கார்காலத்தின் றன்மையினல் நாடெங்கும் நாம் காணிட மெங்கும் முல்லையரும்புகள் பூத்து அழகு தருந் தன்மை யுணர்ந் தறிவாய்! மழையும் வந்தது; தூதும் வந்ததே. இன்னும் நீ கவலை யுற்றிருப்பானேன். தூதின்பின் வருவான் நின் றலைமகன்.

10. இனித் தலைவன் நிலையறிவோம்." நாம் நாடிச் சென்ற வினைமுற்றும் முடித்தோம்; வேந்தர் பணி முற்றுவித்தோம். இனி தலைவியிடம் கூறிவந்த ஆணையின்படி அவ்விடம் இன்னும் சேரல் தவிர்ப்பின் என்றலைவி அன்பம் மிகுந்து உயிர் பதைத்திடுவாள்; ஆயின் தேர்ப்பாகனே! விரைவில் அவண் எய்தும்படி தேர் செல்க" என்பான்.

"கடாஅவுக பாகதேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ் வேட்கைச் செல்வர் மனம்போற்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
பிடா அப்பெருந்தகை நற்கு"

ஏ! தேர்ப்பாகனே! மேகங்கள் ஓடுகின்ற தன்மையை அறியாயோ! தேரினை மிக விரைவாய்ச் செலுத்துவாயாக! உண்மையான புகழை, பிறருக்கு என்றும் எவ்வாற்றானும் தீய்மை யுன்னுப்புகழை, விரும்பும் தனவான் களைப்போல, குறைதலில்லா மகிழ்ச்சியுற்ற வண்டுகள் கானமெங்கும் ரீங்காரஞ் செய்து பாடத்தொடங்கின. பெருந் தகையாளரைக் கண்டு மக்கள் பாடிப்பரிசு பெறுந் தன்மையாக, பூத்தமலர் கண்டு வண்டுகள் பாடி தேனுகிய பரிசைப் பெறுவதாயின. ஆயின் நாம் இன்னும் தங்கியிருப்பது தரும மன்று. விரைவாய்ச் செல்வோம்."

11. குறித்துப்போன காலமும் பொழுதும் கழிந்தன. தூதுவர் உரையும் பொய்த்தது. இனி அவர் வருவாரோ என ஐயம் கொண்டாள் தலைவி. அப்பொழுது தேவி கூறுவது:—

"புகர்முகம் பூழிப்புரள வுயர் நிலைய
வெஞ்சின வேழம் பிடியோடியையர்தாடுந்
தண்பதக்காலையும் வாராரெவன் கொலோ
ஒண்டொடி யூடு நிலை,"

ஒளி பொருந்திய வளையல்கள் அணிந்த நங்காய்! மிகுந்த வலிமையும் அறிவும் தோற்றத்தில் மிக உயர்ந்ததுமான ஆண் யானைகள் மத வெறியுற்று கொடிய கோபத்துடன் முகங்களைப் புழுதியிற் புரட்டிக் கொண்டு பெண் யானைகளுடன் கூடி விளையாடுகின்ற இக் கார் முதிர்ந்த காலத்தும் நம் தலைவர் வரவில்லையே! அவ்வாறு இரக்கம் அற்று வாராதொழியின் அவரை நினைந்து நீ என் மனமுருகுதல் வேண்டும்! நின் கவலையை ஒழிப்பாய்!"

12. தலைமகன் கூறிப்போன அவதியும் அமயமும் பொழுதும் முற்றின; அவர் வரக் காணேம்; வானத்தின் கண்ணே முகில் மிகவும் நெருங்கி தாரை மழையாய்ப் பொழியலாயிற்று. தலைவி பரிதாப நிலையை நோக்கி தோழி கூறுகின்றாள்:—

"வந்தன செய்குறி வாரார் அவரென்று
நொந்த வொருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன் றெழில் வானம்
நந்து மென் பேதை நுதல்."

இனி அவர் வரமாட்டாரென்று முடிவாய் எண்ணின தலைவிக்கு நோயுற, அந்நோய்தீர மருந்தாக ஈந்தின் பழத்திற்கொப்ப வானமெங்கும் மேகம் இருண்டு கருமையாக மழையும் பொழிவதாயிற்று; அவர் உரைத்த குறிகள் யாவும் முற்றின; அமையமும் இப்பொழுதே யாம். ஆனதால் நாற் குணத்தின் றன்மையின் பேதமையுடைய அம்மாதின் நெற்றிப் பிரகாசம் பொருந்தியது. அப்பொழுதே தலைவரும் எய்தினர் என்று குறிப்பினல் அறியக்கிடக்கின்றது.

13. மேற்கூறிய இச்சிறு வியாசத்தினின் றும் அறிந்தொழுக வேண்டும் கருத்துரை யாதெனில், கார்நாற்பதின் ஆசிரியர் கார்காலத்தைக் கற்பனை செய்வதினின்றே கற்புடை மகளிர் அக்காலத்தும் எத்தன்மையர் எனச் செப்பனிட்டு, நிகழும் எக்காலத்தும் இல்லறத்தார் பின்பற்றிக் கடைத்தேற வேண்டும் முறையையும் அமைத்துளார் என்பதேயாம்.

———

# பண்டைத் தமிழ் நாகரீகம்

ஸ்ரீலஸ்ரீ. சுவாமி வேதாசலம் அவர்கள்.

(திருப்பாதிரிப்புலியூர் சைவப்பெரியார் மகாநாட்டுத் தலைமைப் பிரசங்கம்.)

299-ம் பக்கத்தொடர்ச்சி

### முதலில் வேண்டியது இன்பமே.

இம்முதலாசிரியர்க்குப்பின் வந்த தமிழாசிரியர்கள், உலகிய லொழுக்கத்திற்கு முற்றும் மாறான பௌத்த சமண சமயக் கொள்கைகளாற் சிறிது சிறிது ஈர்ப்புண்டு,

" சிறப்புடை மரபிற்
பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந்
தோற்றம் போல"

என அறத்திற்கே முதல் நிலை கூறினாராயினுந் திருவள்ளுவனாரும் அறத்தை முன் வைத்தும் பொருளை அதன் பின் வைத்தும் இன்பத்தை இறுதிக் கண் வைத்து நூல் செய்தாராயினும் இன்பத்தை வேண்டாது அறஞ் செய்வாரையும் பொருள் செய்வாரையும் யாண்டுங் கண்டிலமாதலின் தொல்காப்பியனார் இன்பத்தை முதல் வைத்த முறையே மக்களியற்கையொடு பொருந்துவதாதலால் நன்கு துணியப்படும். தமது காலப் போக்கினை யொட்டித் திருவள்ளுவனார் அறத்தை முன் வைத்து இன்பத்தை இறுதிக்கண் வைத்து நூலியற்றப்புகுந்தனராயினும், இன்பத்தை வாயிலாக் கொண்டன்றி அறனும் பொருளும் நடவாமை நன்குணர்ந்தன்றே அவர் அறத்தை இல்லறந் துறவறம் என இரண்டாகப் பகுத்துக், காதலின்பத்தின் வழிப்படுவதாகிய இல்லறத்தையே முதற் கண் வைத்து நூல் அருளிச் செய்தனர். இவ்வாற்றால், ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்ட முறையே நன்முறை யென்பது திருவள்ளுவனார்க்கும் உடம்பாடாதல் பெறுதும். இஃது அவர் இல்லறவியலின் முதலதிகாரத்தில்,

" அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது"

என அன்பை முன் வைத்து அறனை அதன் பின் வைத்துத் தெளித்தோதியது கொண்டும் இனிது பெறப்படும்.

இத்துணைச் சிறந்ததாகிய இன்பவாழ்க்கை அன்பினால் உந்தப்பட்டே நடைபெறல் வேண்டுமென முதல் ஆசிரியர் வலியுறுத்தியவாறு போலவே, தெய்வத் திருவள்ளுவரும்,

" அன்புற் றமர்ந்த
வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ்சிறப்பு "

என்று உடம்பாட்டானும்,——

" அன்பகத்தில்லா உயிர்
வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று"

என்று எதிர் மறையானும் அன்பின் இன்றியமையாமையினை விளங்க வைத்தது காண்க. மதுரைக் கடைச் சங்க காலத்துக்கும் முன்னே பண்டைச் செந்தமிழ்க் காலத்திருந்த குன்றம் பூதனார் என்னும் நல்லிசைப் புலமை மலிந்த சான்றோருந் தாம் முருகவேள் மேற் பாடிய " இருநிலந் துளங்காமை" என்னும் பரிபாடலினும்,

" நான்மறை விரித்து
நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்
கேண்மின் சிறந்தது
காதற் காமங்
காமத்துச் சிறந்தது"

என்று காதலின்பத்தின் மாட்சி தெரிந்து, அவ்வின்ப நுகர்ச்சி இறைவனது தண்பரங் குன்றத்தின்கண் நிகழுமாற்றின் வைத்து அதனை விரித்துப் பாடினார்.

### காதலும் காமமும்.

பாருங்கள் அன்பர்களே, உலகிய லொழுக்கத்திற்கும் இறைவன் திருவடிப் பேற்றிற்கும் ஆணிவேர் போல் இருப்பதாகிய இவ்வின்ப வொழுக்கமானது மெய்யன்பின் வழி நடக்குமாயின் அப்போதுதான் அது 'காதலின்பம்' என உயர்த்துப் பேசப் படுமென்பதும், அஃது அங்ஙனம் அன்பின் வழி நடவாதாயின் இழிந்த காமம் என இழித்துப் பேசப் படுமென்பதும், நஞ் செந்தமிழ்த் தெய்வ ஆசிரியர் வாக்கு எல்லார்க்கும் ஒத்த முடிபா யிருக்கின்றன. ஏனெனில், ஓராண்மகனும் ஒரு பெண்மகளும் தம்மில் ஒருவரை யொருவர் உயிர்போற் கருதி நிரம்பிய அன்பால் ஒழுகினா லன்றிப், பெண்பாலார்க்குக் கற்பொழுக்கம் நிலை பெறுது

கற்பொழுக்கம் நிலை பெறுதாயின் நன் மக்களைப் பெறுதலும் உளதாகாது : உலகில் ஒருவரோ டொருவர் அமைதியா யிருந்து வாழாமல், பகைமையுஞ், சினமுங் கொண்டு அல்லல் உழப்பர். அதனால்தெய்வ நம்பிக்கையும் தெய்வ வணக்கமும் இல்லையாய்ப் போம் : எங்கும் குடியும், கொலையும் கொடுமையும் மலிந்து மக்கள் வாழ்க்கையானது சின்ன பின்னமாய்ச் சிதறி விடும். இத்தகைய குடி கேடான செயல் ருஷியா முதலான மேனாடுகளிற் பரவி அங்குள்ள மக்களை நினைப்பினுங் கொடிய துன்பத்திற் படுத்தத் தேய்த்து வரும் நிலையினைச் சிறிதாயினும் அழுந்தி யறிய வல்லார்க்கே, நம் செந்தமிழ்த் தெயவ ஆசிரியர் வர்புறுத்திச் சொல்லிய காதலின்ப வாழ்க்கையின் விழுப்பம் புலனாகா நிற்கும். மற்றுக், காதலன்பின் வயமாகி மணங் கூடினார்க்கோ ஒருவரை விட்டுப் பிறரொருவர் மேல் உள்ளஞ் செல்லாதாகலின், அவர்க்குக் கற்பொழுக்கந் தானாகவே நிலை பெறும். அவர்க்குக் கற்பொழுக்கத்தினைக் கற்பிக்க வேறெவருமே வேண்டப்படார். அவர், தாம் காதல் கொண்ட அன்பரையன்றிப் பிறரெவரையுங் கருத மாட்டாமையால், தம் கருத்தறியாமல் தம்மைப் பிறரொருவர்க்கு மணம் புகுத்த எவரேனும் முனைகுவ ராயின், அவர்க்குத் தமதுள்ளக் கருத்தைப் புலப்படுத்தித் தமது கற்பொழுக்கத்தினை நிலை நிறுத்திக் கொள்வர் ; அதுவும் வாராதாயின் தமதுயிரையே துறப்பரன்றித் தமது கற்பிற் சிறிதும் வழுவார் ; தம் காதலர் இறந்துபடின் தாமும் உயிர் தாங்கார். இத்தன்மையராகிய பண்டைத் தமிழ் மக்களின் கற்பொழுக்க மாட்சியினைப், பழந்தமிழ் நூல்களிற் போந்த சில பாட்டுகளை எடுத்துக்காட்டி விளக்குதும். முதலிற் கலித்தொகை என்னும் அரிய சங்க நூலிற் காணப்படும் ஒரு செய்யுளை இங்கெடுத் துரைப்பாம்.

சுடர்த்தொடீ கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தார் தன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா வென்றாள், எனயானும்
தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
வளை முன்கை பற்றி நலியத், தெருமந் திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்
றேனா,
அன்னை யலறிப் படர்தரத், தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையுந்
தன்னைப்புறம்பு அழித்து நீவ, மற்றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி
நகைக் கூட்டஞ்
செய்தான் அக்கள்வன் மகன்."

தன்னைப் பிறனொருவனுக்கு மணம் பொருத்தக் கருதித் தன் பெற்றோர் செய்யும் ஏற்பாடுகளைக் கண்டு திகில் கொண்டவளான அழகு மிக்க ஒரு கற்புடை மங்கை, தான் ஒருவன் மேற் காதல் கொண்டிருக்குங் குறிப்புத் தன் தோழிக்குப் புலனாம்படி சொல்லுதலை இச் செய்யுள் எடுத் தியம்புகின்றது. இது கேட்டுத் தன் தலைவியின் காதற் குறிப்பறிந்த தோழி, அவள் தன் பெற்றோர்க்கு அதனை அறிவித்து அவள் காதலித்த இளைஞனுக்கே அவளை மணங் கூட்டுவள். இதனை 'அறத்தோடு நிற்றல்' என்பர் பொருளிலக்கணத்தில். இச் செய்யுட் பொருள் வருமாறு.

காதல் விவாகம்.

" விளங்கா நின்ற தோடியணிந்த தோழீ ! என் மனத்துள்ளதனைக் கேட்பாயாக. தெருவிலே நாம் பணலாற் சமைத்து விளையாடுஞ்சிறிய வீட்டினைக்காலால் எற்றி அழித்தும், நமது கூந்தலிற் செருகிய பூமாலையை அறுத்தும், வரிந்த நமது பந்தினை எடுத்துக்கொண்டோடியும் நாம் மனம் நோவத்தக்க குறும்புகளைச் செய்யும் அந்தச் சிறு பட்டிப் பையன், முன் ஒரு நாள் நம் அன்னையும் யானும் வீட்டின் கண் இருந்தேமாக. எம்பாற் போந்து 'வீட்டில் உள்ளிரே ! உண்ணப்படுந் தண்ணீர்க்காக விடாய் கொண்டு வந்தேன்' என்று சொல்லி வந்து நின்றானுக்கு, அன்னையானவள் என்னை நோக்கிச் சுடரிழாய்! பொற் றகட்டாற் செய்த கரகத்தால் உண்ணுநீரை முகந்து சென்று வார்த்து அதனை அவன் பருகச் செய்து வா' என்று கூறினாள். கூறவே யானும் அவனைப் பட்டிப் பையன் என்று நினையாமலே அன்னை சொன்னபடியே செய்ய அவன் பாற் சென்றேன் : ஆனால் அவன், வளையல் அணிந்த எனது முன் கையினைப் பிடித்திழுத்து வம்பு செய்யவே, யான் மனம் மருண்டு அன்னாய் இவன் ஒருவன் செய்ததைப் பாராய் '! என்று கூவினேனாக. உடனே அன்னை அலறிக்

கொண்டு என்பால் வருதலும், சடுதியில் யான் மனந்தெளிந்து 'இவன் உண்ணுநீரைப் பருகும் போது விக்கி வருந்தினன். என்று அவன் செய்ததனை மறைத்து மொழிந்தேன்; அதுகேட்டு அன்னையும் அவன் முதுகைப் பலகாலுந் தடவினள்; அப்போது என்னைக் கடைக்கண்ணாற் கொல்வான் போல் நோக்கி மகிழ்ச்சிக்கு ஏதுவான மணத்தைக் கள்வனாகிய அவ்விளைஞன் முன்னமே செய்தனன். இதனை அறிவாயாக."

பார்மின்கள் அறிஞர்களே, கற்பிற் சிறந்த இளைய தமிழ் மங்கை ஒருத்தி, தன்னிளமைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் வைத்துத் தான் ஓர் இளைஞன் மேற் காதல் கொண்டமையினை எவ்வளவு நுட்பமாக, எவ்வளவு திறமையாக, எவ்வளவு மனக் கவர்ச்சி யுண்டாகத் தான் கொண்ட அக்காதற் கற்பொழுக்கத்திற்குப் பழுது வாராமற் கூறுகின்றாள். தான் ஏதும் அறியாப் பேதைப் பெண்ணாய் இருந்த காலத்திலேயே தன் உள்ளம் ஓரிளைஞன் பால் அன்பிற் பதிந்தமையும், தானிழைத்த மணல் வீட்டினைக் காலால் எற்றியுந் தன் கூந்தலிற் செருகிய மாலையை அறுத்துந் தான் ஆடும் பந்தினை எடுத்துக் கொண்டோடியும் அவன் தான் வருந்தத்தக்க குறும்புகளை செய்தும், அக்குறும்புகள் அத்தனையும் தன் பால் வைத்த அன்பினாலேயே அவன் செய்தமையும், அதனால் அக்குறும்புகள் தன் மனம் நோவச் செய்தன போற்றோன்றினும் உண்மையில் அவை தன்னை நோவச் செய்யாமையும், 'சிறுபட்டி' என அவனைத் தான் சுட்டுஞ் சொல்லே அவன்பால் தனக்குள்ள அன்பின் அறிகுறியாதலும், விடாய் கொண்டு வந்தானெனினும் இளைஞனை ஒருவர்க்குத் தான் தனியே சென்று விடாய் தணித்தல் நாணுடைய பெண்டன்மைக்கு ஏலாமையின் அன்னையுந் தானும் இருந்தக்கால் அவன் விடாய்த்து வந்தா னென்றமையும், அங்ஙனம் அன்னையோடு இருந்த விடத்தும் அன்னையின் ஏவுதலாலேயே தான் நீரெடுத்து அவன் பாற் சென்றமையும், அவன் தன் பால் வைத்த காதற்கிழமையால் தன் கையைப் பிடித்து வம்பு செய்யினும் அதற்கு எளிதிலே உடன்பட்டிருத்தல் அச்சமும் நாணமும் இயற்கையே வாய்ந்த தன் பெண்டன்மைக்கு ஏலாமையின், அதற்கிசையாது தான் அன்னையைக் கூவி யழைத்தமையும், அன்னை அருகுவந்ததும் அதுபற்றி அவனை அவள் சினவாமைப் பொருட்டு 'அவன் உண்ணுநீர் விக்கினன்' என அவன் செய்த குற்றத்தை அவன்மேலுள்ள காதலால் தான் மறைத்து மொழிந்தமையும் அன்னையும் அவன்றன் எழில் நலங்கண்டு அவன் விக்குதல் பொருளாய் அவன்றன் முதுகினைத் தடவிக்கொடுத்தா ளென்றமையும், அப்போது தான் செய்ததனை ஒரு குறும்பாக நினைந்து அவன் தன்னைக் கடைக்கண்ணாற் பார்த்துச் சினந்தமையும் எல்லாம் அவ் அறிவுடைக் கற்பரசி எத்துணை நயமாகத் தன் உயர்ந்த பெண் தன்மைக்கு எத்துணை இசைவாக, சின்னஞ் சிறிய பருவம் முதலே தான் கொண்ட காதற் கற்பொழுக்கம் எத்தணைச் சிறந்த தென்பது புலனாகக் கூறியிருக்கின்றாள்! அத்துணை விழுமிய காதற் கற்புடைத் தமிழ் மக்கள் வழிவந்த நாம் இவ்வருமையினைக் கனவினும் நனவினும் நினைந்து நினைந்து வியக்கற்பால மல்லமோ!

இத்துணைச் சிறந்த பண்டைத் தமிழ் மாதரின் காதற் கற்பொழுக்கத்தை எடுத்துரைக்கும் இத்தனித் தமிழ்ச் செய்யுள் வழக்கும் பாராட்டற் பாலதா யிருக்கின்றது. வான்மதி மண்டில ஞாயிற்று மண்டிலங்களினும் மேலுயர்ந்து செல்லுங் கூடகோபுர மாளிகைகளைக் கற்பித்து, நேரிற் சென்று பார்த்தால் ஒரு சில குடிசைகளேயுள்ள ஓர் ஊரில அக்கட்டிடங்கள் உளவாக மனக் கோட்டை கட்டி, அக்கட்டிடங்களின் மேலடுக்குகளில் உள்ளவராக மாதர்களை இருத்தி, அம் மாதரின் முடிமுதல் அடிகாறும் உள்ள ஒவ்வோர் உறுப்புகளையும் பற்பல செய்யுட்களால் அழகுபடுத்திப் பாடி, இங்ஙனமே இன்னும் இல்லாத பொய்களை யெல்லாம் ஏராளமாய்ப் புனைந்து கட்டிச் சொல்லும் இக்காலத்தார் செய்யுள் வழக்கெங்கே! உள்ளவற்றை உள்ளவாறே எடுத்தியம்பிச் சிறிதும் பிழைபடா தெழுதிய ஓவியம் போல்வதாகிய பழந்தமிழ்ப் புலவரின் செய்யுள் வழக்கெங்கே! இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கம்பரின் ராமாயணச் செய்யுளோடு இக் கலித்தொகைச் செய்யுளைச் சிறிதும் ஒப்பிட்டு நோக்குவீர்களாயின் நன்கறிவீர்கள். அது நிற்க.

### கணவனுக்குப் பின் வாழாமை.

இனிப் பண்டைகால கற்பொழுக்க மாதர் தங்கணவர் இறந்துபட்ட ஞான்று, அவன்றன்

பிரிவினை ஆற்றாராய் ஏங்கி உயிர் துறந்த நிகழ்ச்சிகளும் பல. இவ்வாறு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியினைப் புறப் பொருள் வெண்பா மாலையிற் போந்த,

ஒருயிராக உணர்க உடன் கலந்தார்க்
கிருயிரென்பர் இடை தெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும்
வெள் வளையினாட்கும்
உடனே உலந்த துயிர்''

என்னுஞ் செய்யுள் கூறா நிற்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தமையால் அவர் அவற்றிற்கு 'மூதானந்தம்' எனப் பெயரிட்டு, அதன் இலக்கணமுங் கூறினர். தன் காதற் கணவன் கோவலனை இழந்த கண்ணகி பட்ட துயரினை நினைப்பிற் கன்னெஞ்சமுங் கரையு மன்றோ? அவள் தன் கணவனைக் கொலை செய்வித்த பாண்டியனுக்கு அறிவு தெருட்டிப் பதினான்காம் நாள் தன்னுயிரினைத் துறந்து தன் கணவனுயிரோடு வானுலகு சென்ற ஆற்றருங் காட்சியினைக் குறவருங் கண்டன ரல்லரோ?

இனித் தன் கணவன் பூதப் பாண்டியன் மாய்ந்த ஞான்று அவனைப் பிரிந்த துன்பம் பொறாளாய் அவன்றன் காதல் மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாயச் சென்றவழி, அவ்வாறு செய்தலாகாதென விலக்கிய சான்றோர்க்கு அவள்,

"பல் சான்றீரே!
பல் சான்றீரே!
செலகெனச் செல்லா
தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப்
பல் சான்றீரே
அணில் வரிக் கொடுங்காய்
வாள்போழ்ந் தட்ட
காழ்போல் நல்விளர்
நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த
கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு
புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை
வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப்
பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம்
அல்லேம் மாதோ
பெருங் காட்டுப் பண்ணிய
கருங்கோட் டீம
நுமக்கு அரிதாகுக தில்ல
எமக்கு எம்
பெருந்தோட் கணவன்
மாய்ந்தென, அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த
தாமரை
நள்ளிரும் பொய்கையுந்
தீரும் ஓரற்றே.''

என்று செய்யுளாகவே விடை கூறிய நிகழ்ச்சி நம் தமிழ் நங்கையரின் காதலன்பின் மாட்சியினை மலைமேல் வைத்த விளக்குப் போல் உலகெங்கும் விளங்கச் செய்கின்ற தன்றோ?

இவ்வாறாகத் தம் உயிரையும் ஒரு துரும்பாகக் கருதி நந்தம் தமிழ்ப் பெருமாட்டிமார் தம் காதலர் மடிந்த வழித் தாமும் உடன் மடியுமாறு அவரை அவ்வாறு ஏவியது எது? அவர் தங்கொழுனர்பால் வைத்த ஒப்புயர்வற்ற காதல் அன்பன்றோ? எனவே, மாதர்க்குச் சிறந்த கற்பொழுக்கமாவது அவர்தங் காவலன்பின் திருப்பாயல் அவர் பால் இயற்கையில் உளதாவதேயன்றிப், பிறர்க்கு அஞ்சியும் பிறர் கூறும் அறிவுரை கேட்டும் வருவதன் றென்பது புலனாகின்ற தன்றோ? இங்ஙனம் இயற்கை யொழுக்கமாய் வரற்பாலதாகிய கற்பிற்குக் காதலன்பு ஒன்றுமே சிறந்த எதுவாயிருத்தலைப் பல படியாலும் மக்களியற்கையில் வைத்து ஆராய்ந்து கண்டமையாலன்றோ, ஆசிரியர் தொல்காப்பியனார் "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்போடு புணர்ந்த ஐந்திணை" என்று ஓதி யருளினர். அம் முதலாசிரியர் வழி வந்த திருவள்ளுவர் முதலான சான்றோரும அங்ஙனமே அஃது அன்பின் வழி நடக்கற் பாற்றென்று பண்டு தொட்டு இன்றுகாறும் வலியுறுத்தி வந்திருக்கின்றன ரல்லரோ?

### தற்கால வாழ்க்கை.

ஆனல், இப்போது நடை பெறும் மனை வாழ்க்கை எத்தன்மையதாய் இருக்கின்றது? அஃது உலகிய லொழுக்கத்திற்கு உயிர் போல்வதாகிய காதலன்பின் வழிச் செல்கின்றதா? இல்லை இல்லை சிறிதுமே யில்லை. சாதி வேற்றுமை யென்னுங் கொடிய தூக்குக் கயிறானது காதலன்பின் கழுத்தை இறுக்கி விட்டது; காதலன்பிற் சிறந்து மறுவற்ற மதிபோல் விளங்கத் தக்கவரான நம் பெண்மணிகளின்

கற்பொழுக்கத்தை நிலை குலைத்து அதனைப் பழி பாவங்களால் மூடி விட்டது! எந்தப் பெண் மகளாவது தான் காதலித்த இளைஞனை மணங்கூட இடம் பெறுகின்றனாளா? எள்ளளவும் இல்லையே, ஏன்? ஒரு சாதிக்குள்ளே தான், ஒருபது வீடுகளேயுள்ள ஓர் இனத்திலே தான் அவள் ஒருவனை மணக்க வேண்டும். அவள் கயல் மீனை யொத்த கண்ணழகியா யிருந்தாலென்ன! கண் குருடானவனைத் தவிர வேறு மண மகன் தன் இனத்திற் கிடைத்திலனாயின் அவள் அவனையே தான் மணந்து தீரல் வேண்டும். அவள் முத்துக் கோத்தாலொத்த பல்லழகியாய் இருந்தாலென்ன! தன் பாழும் இனத்தில் ஒரு பொக்கை வாய்க் கிழவனைத் தவிர வேறு மணமகன்' கிடைத்திலனாயின், அவள் அவனையே தான் மணந்து தீரல் வேண்டும்! அவள் பலகலை கற்றுக் கல்வியறிவிலும் இசைபாடுவதிலும், நுண்ணறிவிலும்' சிவநேய அடியார் நேயங்களிலுஞ் சிறந்த கட்டழகியா யிருந்தாலென்ன! இறுமாப்பே குடி கொண்ட தன் சிறு மாக்குடியிற் கல்வி யிருந்த மூலையே கண்டறியாதவனும், பாட்டுப் பாட வாயைத் திறந்தால் ஓட்டமாய் வர வண்ணானை வருவிப்பானும், அறிவை ஓட்டி விட்ட வெறும் மூளையுடையானும், கறுப் பண்ணன், மதுரை வீரன், மாரியம்மன் முதலான வெறுக்கத் தக்க பேய்கட்கு ஊனுங் கள்ளும் படைத்துக் குடித்து வெறிப்பானுமாகிய ஒருவனைத் தவிர வேறு மணமகன் கிடைத்திலனாயின், அவள் தன் சாதியை விட்டு வேறு சாதியிற் கலக்கலாகாமையின், அக்கல்லாக் கயவனையே கணவனாய்க் கொள்ளல் வேண்டும்! ஆ! பொருளற்ற இச்சாதி வேற்றுமைக் கொடுமையால் நம் அருமைப் பெண்மணிகள் படுந் துயர் மலையினும் பெரிதோ! அன்றிக் கடலினும் பெரிதோ! அன்றி ஞாலத்தினும் பெரிதோ! இவ்வளவு தான் என்று கூறல் எம் ஒரு நாவால் இயலாது!

பல நலங்களாற் சிறந்த ஓர் ஆண்மகனும் அங்ஙனமே தன் சாதியை விட்டுப் பிற சாதியிற் கலத்தல் ஆகாமையால், நலஞ் சிறிதுமில்லா ஒரு பேதைப் பெண்ணை மணந்து துன்புற வேண்டியவனா யிருந்தாலும், அவனது நிலை ஒரு சிறந்த பெண்ணின் துன்ப நிலைபோல் அத்துணைக் கொடிதன்று. ஏனென்றால் அவன் தான் வேண்டியபடி வேறு மகளிரைக் கூடிக் களித்தாலும், அவனை மிகுதியாய்க் குற்றஞ் சொல்வார் இல்லை. ஆனால் நம அருமைப் பெண் மக்களின் நிலையோ அத்தகைய தன்றே! அவர்கள் யாரைப் பார்த்தாலும் குற்றம், யாரொடு பேசினாலும் அதனினும் குற்றம், அப்புறஞ் சொல்ல வேண்டுவது யாதுளது? விலங்குகளும் பறவைகளுங் கூடத் தாம்தாம் விரும்பிய துணையையே கூடி இனிது வாழா நிற்க, ஆறறிவுடைய மக்கட் பிறவியிற் பிறந்து அறிவையும் அழகையும் நற் குணத்தையுங் கண்டு பாராட்டிக் காதலன்பு கொள்ளத் தக்க ஆண் பெண் மக்கள் மட்டும் இடையே புகுந்த சாதி வேற்றுமை யென்னுங் கொலைஞனால் வெட்டி யழிக்கப் பட்டுக் காதலன்பு என்னும் உயிர் ஓடிப்போனபின், இழிந்த காமப்பிணை வாழ்க்கையிற் காலங் கழிக்கும்படி கட்டாயப் படுத்தப் பட்டால், இதனினும் வேறு கொடுங் கொலை உளதோ! கூறுமின்கள். அறிஞர்களே! உலகியலொழுக்கத்திற்கு அடிப்படையாய் நிற்குங் காதலன்பைக் கீழறுத்து விட்டால், அதன் மேல் நிற்கும் அவ் வுலகியல் வாழ்க்கை கீழ் விழுந்து நுறுங்கா தொழியுமோ!

# நவ மணிகள்.

ஸ்ரீமான் C. S. ஜகதீச சுந்தரம் பிள்ளை எழுதியது.

நவமணிகளுள் பதுமராகமானது விலையில் வச்சிரத்திற்கிரண்டாவது. அதற்கு மாணிக்கம், கெம்பு, சிவப்பு, கமலராகம், கௌஸ்துபம் என்றும் பெயர் வழங்கும். இது மக்க நாட்டிலும், காளபுரத்திலும், தாம்புர தேசத்திலும் சீயத்திலும், சோண நதியிலும், பர்மா தேசத்தில், ஓடும் ஐராவதி நதியிலும், பாம்பினிடத்திலும் அகப்படுகிறது. பின் சொல்லப்பட்ட அரவீன்ற மாணிக்கம் அகப்படுவது அருமை. அப்பதுமராகத்தின் பொது நிறம் அரவிந்தமலர், மாதுளம்பூ, மாதுளம்வித்து, நெருப்பு, செங்கழுநீர் மின்மினிப் பூச்சி, நாரத்தைப் பழம், விளக்கு இந்திர கோபம் என ஒன்பது வகைப் படும்.

பதுமராகம் அல்லது கெம்பு.

> ஆளுநிற மொன்பதரவிந்த
> மாதளம்பூவித்தழல் கல்லாரங்
> கோளரிய கச்சோதகரந்த
> சுறும்பலந்திபங்கோபமென்ன''

பொதுவாயுள்ள இவ்வொன்பது நிறங்களையுடைய பதுமராகமானது சாதரங்கம் குருவிந்தம், † சௌகந்திகம், *கோவாங்கம் என்று நான்கு வகைப்படும்.''

சாதரங்கத்தின் நிறமானது தாமரை, கருநெய்தல், சூரியனொளி, தீ, மின்மினிப்பூச்சி, மாதுளம்பூ, மாதுளம் வித்து, மேகம், தீபம், இந்திரகோபம் எனப்பாகுபாடு செய்த பத்து வகை நிறம். இது அந்தணசாதி. இதை யணிவோர் கல்வியும் புண்ணிய வடிவாயுள்ள பசுவும், கன்னிகையும், அறுசுவை யமைந்த கறியோடு கூடிய அன்னம் முதலாகிய குற்றமில்லாத தானங்களைச் செய்த பயனையும், அசுவமேதயாகம் முதலியவற்றைச் செய்த பயனையும் அடைவர்.

குருவிந்தத்தின் நிறமானது குன்றிமணி, முயல் இரத்தம், வெள்ளலோத்தம்பூ, முண்முருக்கம்பூ, மஞ்சாடிப்பூ, செவ்வரத்தம்பூ, முள்ளிலவம்பூ, பொன் இவைகளைப்போல எட்டு வகை நிறம். இது க்ஷத்திரிய சாதி. இதை யணிவோர் நிலவுலகமுற்றுங் தமது வெள்ளை வட்டக் குடை நிழற் கீழ்த்தங்க அரசாண்டு தனலக்ஷ்மியோடும் விஜய லக்ஷ்மியோடுங் கூடி வாழ்வர்.

சந்தோஷத்தைத் தரும் சௌகந்திகத்தின் நிறமானது இலவ மலர், குயிலின் கண், அசோகத் தளிர், பொன், செம்பஞ்சு, மருதோன்றி என அறுவகைப்படும். இது வைசிய சாதி. இதைத் தரிப்போர் செல்வமுங் கீர்த்தியும் அடைவர்.

கோவாங்கத்தின் நிறமானது, குராமலர், குசும்பைமலர், செங்காவிக் கல், கொவ்வைக் கனி என்று நான்கு வகைப்படும். இது சூத்திர சாதி. இந்தக் கோவாங்கம் தரிப்பவர் வீட்டில் பெரிய விந்தை மலைபோல நெல் முதலிய பொருட் குவைகளோடு பாலும்செல்வப் பெருக்கமும் உண்டாகும்.

தாம்புர தேசத்திலும் சோண நதியிலும் உண்டாகும் மாணிக்கம் நீலோற்பல புஷ்பத்தின் நிறம் போல நீல நிறம் உடையதாக விருக்கும். அந்த நிறத்தினுள் கொஞ்சம் சிவப்பு நிறமுடைய நீரோட்டம் வீசும். இதற்கு நீலகந்தி என்று பெயர் நீலகந்திக்குரிய இவ்வித நீரோட்டம் இந்திரநீலக் கற்களுக்குக் கிடையாது. இதுதான் இந்திரநீலக் கற்களுக்கும் நீலகந்திக் கற்களுக்கும் உள்ள வித்தியாசம்.

சிங்களத்தீவிலும், விகாணிதேசத்திலும் உண்டாகும் மாணிக்கம் நல்ல சிவப்பாக விருக்கும். இதற்கு பத்மராகம் என்று பெயர். செந்தாமரைப் பூவின் இதழ்போல் சிவந்த நிறமுடையதாயும், நான்கு பக்கங்களிலும் நல்ல நீரோட்டம் வீசுவதாயும், மிகவும் பளபளப்புடையதாயும், பார்வைக்கு அழகுடையதாயும் அதிக நிறையுடையதாயும் இருக்கிற கற்கள் முதன்மையானவைகள்.

பதுமராகத்தைப் பார்வைக்கு நேராய்ச் சாய்த்துப் பார்ப்போமானால் இரண்டு பதுமராகம் ஒன்றாகச் சேர்ந்தாற்போலத் தோன்றும்; அதற்குத்தான் திராசதோஷம் என்று பெயர். இவ்வித தோஷமுடைய கெம்புகளை அணியலாகாது. அப்படி அணிந்தால் மிருக பயமுண்டாகும்.

† சௌகந்திகம் சுகந்திகம் என்னும் வடசொற்றிரிபு.
* கோவாங்கம் கவாங்கம் என்னும் வடசொற்றிரிபு.

நல்ல உயர்ந்த மாணிக்கக் கற்களை அணிவோர்க்குச் செல்வமும் ஆயுளும் வளரும். பலவகை நோய்களும் தீரும். இதை பஸ்பஞ் செய்து அனுபானத்தோடு உட்கொண்டால் வாதரோகம், மார்பு வலி, க்ஷயரோகம், கபரோகம், சுரரோகம், சன்னிதோஷம், தாகம், மேகம் நேத்திரநோய் இவைகளைப் போக்கும். வசியமும் உண்டாம்.

சுரரோகம் கன்னிகளின் தோஷம் அதி தாகம் உரமான மேகம் ஒழியும்—திரமாக ஊனிக்கொள் நேத்திரநோய் ஓடும். அரவின்ற வொளி மாணிக்கத்தால் வசியம் ஆம்.

**செயற்கை மாணிக்கங்கள்:**—பர்மா தேசத்தில் மாணிக்கம் நீலம் ஆகிய இரத்தினங்கள் விசேஷமாய்க் கிடைத்திருக்கின்றன. நவரத்தினங்களில் இவைகள் விசேஷ மதிப்புப் பெற்றவைகளாகையால், செல்வந்தர்கள் அவைகளைப் பிரியமாகவாங்கி ஆபரணங்கள் செய்கிறார்கள். ஆனால் இப்பொழுது இயற்கையாகக் கிடைக்கும் உண்மையான இரத்தினங்கள் போய், இரசாயன சாஸ்திரோபாயங்களாற் செய்யப்படும் பொய் இரத்தினங்கள் பிரபலமாய் விடும்போலத் தோன்றுகின்றது. சமீபத்தில் ஐரோப்பாவில் பிரஸல்ஸ் நகரத்தில் நடந்த பொருட காட்சியில் பொய்ச் சிவப்பும், பொய் நீலமும் உண்மையான இயற்கை இரத்தினங்களைப்போலவே அழகிலும் காந்தியிலும் இருக்கிறபடியால் அவைகளை வர்த்தகர்கள் பொய் இரத்தினமென்று சொல்லாமல் உண்மையான இரத்தினமென்றே சொல்லுகிறார்கள். இவைகளைச் செய்யும் உபாயம் எளிதாயிருந்தாலும் அதைப் பரம ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். (France) பிரான்ஸ் தேசத்தில் மட்டும் பொய்ச் சிவப்புகள் ஐம்பது லக்ஷம் (காரட்) வரையில் செய்யப்பட்டு விலைக்கு வந்திருக்கின்றன வாம்.

**மழுங்கின மணிகள் ஒளிபெறுதல்:**—இரேடியம் என்ற உலோகத்துக்குப் பல விதமான விலை யேறப்பெற்ற இரத்தினங்கள் மழுங்கிப் போனாலும், அவைகள் நன்றாய் ஒளி வீசி வேறு புதிய நிறம் பெறும்படி செய்யும் சக்தியுண்டு. இந்த உலோகத்தின் வெளிச்சம் பட்டுக்கொண்டே இருக்கும்படி இரத்தினங்களை வைத்திருந்தால் அவைகளின் நிறங்கள் பல்வேறு விதமாக மாறுகின்றன. நீலக்கல்லே இதனால் நல்ல ஒளி பெறுகின்றது. ஜர்மனிய சாஸ்திர விற்பன்னரொருவர் இரத்தினங்களில் அநேக வகைகளை இரேடியம் உலோகத்துடன் ஒரு பெட்டியுள் வைத்து நன்றாகச் சோதித்து அறிந்திருக்கிறாராம். வெள்ளை நிறமுள்ள கல் மஞ்சள் நிறமாகவும், நீலம் பச்சை யாகவும், ஊதா நீலமாகவும், ஒயின் நிறமுள்ள கல் அழகான கெம்பாகவும், கறுப்புக்கல் ஊதா நிறமாகவும் மாறிவிட்டன. தாம் ஆரம்பத்தில் காரட் ஒன்றேகால் ரூபாயாக வாங்கின அதே வியாபாரியிடம் இவர் பரிக்ஷை செய்து நிறத்தை மாற்றின மணிகளை விலைக்குக் கொடுப்பதாகப் பேசினதில் பதினெட்டேகால் ரூபாய் வீதம் எடுத்துக்கொள்வதாக அவரே ஒப்புக் கொண்டார். கெம்பு நிறமுள்ள ஒரு கல்லுக்கு மாத்திரம் காரட் மூவாயிரம் ரூபாய் மதிக்கப் பட்டது.

---

# முயற்சிபெறத் தூண்டும் முதுமொழி.

ஸ்ரீமான் த. ராமகிருஷ்ண விச்வகர்மன், வேதமாணுக்கன்.

பகவான் ஐதரேய மஹிதாச மாமுனிவரது உள்ளக் கிளர்ச்சி மிக்க மொழிகளால் முயற்சி பெறத் தூண்டும் நெறிகள் ஐதரேய பிராமணம் எழாவது பஞ்சிகையில் அறிவுறுத்தப் படுகின்றன. மக்கள் தத்தம் முயற்சியின்றி உயர்வு பெற வியலாதென்பது எக்காலத்திற்கும் ஒப்பமுடிந்த நியதியாகும். எஞ்ஞான்றும் மக்கள் உறுபய னெய்தற்கு முயற்சி வேண்டப்படுவதின்று, என்பதில்லை. எனவே மக்கள் யாவரும் இம்மொழிகளை நினைவுறுத்தல் இன்றியமையாததாகும். அரிச்சந்திரன் புதல்வன் உரோகிதனுக்குப் பகவான் இந்திரன் உபதேசித்ததாகக் கீழ் குறித்தவை ஐதரேய மகிதாசரால் ஐதரேயப் பிராமணத்துப் புகலப்படுகின்றன.

1 நாநா ச்ராந்தாய ச்ரீரஸ்திதி ரோஹித சுச்ரும
பாபொ ந்ருஷத்வரொ ஜந:
இந்த்ர இச்சரத: ஸக்கா
சரைவேதி சரைவேதி.

"உரோகித அரசகுமாரா! உழைப்பின்றி மடிகொள் மடியர்கட்குப் பொருள், வருவாய், செல்வம், மேன்மை முதலியன வெய்தமாட்டா என யாம் கேட்கப்பட்டு வருகின்றோம். மக்களில் மடியர் பாவிகளாவர். உறுதியாகச் செல்வர் உறுபய னெய்தற் குழைக்கும் உள்ளக் கிளர்ச்சியாளர்க் குறுதுணையாவர். எனவே முயன்றிடுமின் உறுதியாக உயர் பொருளெய்தற் குழைத்திடுமின்."

'ச்ரீ' யென்பது—பொருள், வருவாய் செல்வம், மேன்மை, உயர்வு, வளர்ச்சி, பெருமை, அரசுரிமை, மேனிலை, அழகு, ஒளி, மினுக்கம், உடலொளி, நற்பண்பு, அறிவு, உயர் வன்மை, யோக வன்மை, அறம், பொருள் செயல் இன்பம், நாவன்மை, புகழ், கீர்த்தி, இவை யனைத்தும் உலைவின்றிச் தாழாது உழைக்கின்ற உயர்வுடையா ரெய்துவர். உழைப்பின்றிச் சோம்பித் தூங்கித் திரியும் மக்கள் பாவிகளாவர். மடி, சோப்பல், உழைப்பின்மை, வேலையின்மை, அசைவின்மை உள்ளக் கிளர்ச்சியின்மை யென்பன பாவமாகும். அசையாதிருப்பவன் பாவியவன். முயற்சியுடையான் புண்ணியவான். பேருழைப்பாளியே அறநெறியுடையானும் புண்ணியவானுமாவன். இறைவன் உழைப்பாளிக்கு உதவி செய்கின்றான். எனவே யாவரும் இன்றியமையாது உழைத்தல் வேண்டும்.

2 புஷ்பிண்யௌ சரதோ ஜங்கே பூஷ்ணு ராத்மா பலக்ரஹி:
சேரேஅஸ்ய ஸர்வே பாப்மாந: ச்ரமேண ப்ரபதே ஹதா:
சரைவேதி சரைவேதி.

"நடந்து செல்வோர் தொடைகள் வளமுற்று வன்மை யடைகின்றன. உழைப்புடையார் ஆன்மா முன்னேற்ற மடைவதோடு பயனெய்தும் வரையிலும் உழைப்பதாகவு மிருக்கின்றது. இதனால் எல்லாப் பாவங்களும் இடையே உழைப்பினால் உருப்படா தொழிகின்றது. எனவே உழைத்திடுமின். "உறுதியாகத் துணிவு கொண் டுழைத்திடுமின்."

நடந்து திரிவோர் கால்களும் தொடைகளும் வலிமையும் வளமும் பெறுகின்றன. நடவாது ஓரிடத்திலேயே சதா உட்கார்ந்திருப்போர் கால்கள் வன்மை யற்றிருக்கின்றன. கைகளுக்குப் பயிற்சி கொடுப்போரது தோட்கள் வளமும் உரமு மெய்துகின்றன. பயிற்சி பெறாதார் தோட்கள் வலியற்றிருக்கின்றன. இவ்வாறே பயிற்சி பெறுதலால் உடலனைத்தும் செழுமையும் வன்மையுமடைகின்றது. பயிற்சி பெறாதார் உடலம் வலியற்றிருக்கின்றது. எனவே நமது உடல் செழுமையும் மலிவையும் பிணியின்மையும் படைத்தல் நம் பாலதேயாம்.

உழைப்புடையார் ஆன்மாவினிடத்து நம்பிக்கை கொள்கின்றனர். நாம் உறுதியாக, உயர்வடைவோமென்ற நம்பிக்கை உழைப்புடையார் உள்ளத்தில் யாண்டும் நிலவுகின்றது. முயற்சியுடையார் மந்தமாக, உள்ளக்கிளர்ச்சியின்றி, அசட்டையாக விரார். யாண்டும் உள்ளக்கிளர்ச்சியொடு உறு தொழிலில் முயல்வர். இத்தகையர்க்குச் செயல் முடிவில் உறுபயன் தாமே வந்தெய்தும். செயல்களின் இனிய பயனை இன்பமாக நுகரும் பேறடைவர். உழைப்பினா லெய்தும் பலவகைத் துன்பங்களிலும் அறநெறி தவறாது ஒழுகுமாற்றால் பாவச் செயல்கள் தேய்ந்து பாவமற்றா ராகின்றனர். உழைப்பிற்கு இத்துணைப் பெருமையுண்டு. எனவே, யாவரும் உறுதியாக நின்றுழைத்து உறுபய னெய்தித் தூய்மை யடைதல் இன்றியமையாததாகும்.

3. ஆஸ்தே பக ஆஸீநஸ்யோர்த்வஸ் திஷ்டதி திஷ்டத:
சேதே நிபத்யமாநஸ்ய சராதி சரதோ பக:
சரைவேதி சரைவேதி.

"உட்கார்ந்திருப்பவன் செல்வம் உட்கார்ந்திருக்கின்றது. நிற்பவன் செல்வம் நிற்கின்றது. உறங்குபவன் செல்வம் உறங்குகின்றது. உழைக்கின்றவன் செல்வம் அவனோடு கலந்துழைக்கின்றது. எனவே முயன்றிடுமின், இடையறாது முயன்றிடுமின்."

பொருள் செல்வம் ஆளுகை முதலியன இடையறாது பெருமுயற்சி யுடையா ரெய்துவர். மடியர் எஞ்ஞான்றுஞ் செல்வ மெய்தார். உறங்குவார் பொருள் உறக்க மெய்தும். எனவே யாவரும் பெரு முயற்சியால் பெரும் பொருள் முதலியன திரட்டல் வேண்டும்.

எந்தத் தேவனும் எதிர் தோன்றி நினக்குச் செல்வங்கள் அளிக்கின்றே னென எஞ்ஞான்றும் அளிக்கப் போவதில்லை. தெய்வவாதி மடியர்பால் செல்வம் தூங்குகின்றது. செல்வம் அவர்களிடம் செல்லாது, மக்கள் கட்

டுண்டு முயற்சியின்றி வறிதே கழிக்கின் பொருட்பேறு அவர்கள்பாற் சென்றெய்தமாட்டா. எனவே யாவரும் சிறந்த முயற்சி செய்தல் இன்றியமையாததாகும்.

4. கலி: சயானோ பவதி ஸம்ஜிஹானஸ்து த்வாபர:
உத்திஷ்டம் ஸ்த்ரேதா பவதி க்ருதம் ஸம்பத்யதெ சரந்
சரைவேதி சரைவேதி.

"உறங்குதல் கலியுகம். சோம்ப ரகற்றுதல் துவாபர யுகம். எழுந்திருத்தல் திரேதா யுகம். செயல் புரிதல் கிருதயுகம். எனவே முயன்றிடுமின், உறுதியாக முயன்றிடுமின்."

பலர் முயற்சிக் குறைவால் 'காலத்தைக் குறை கூறுகின்றனர். ஆனல் 'காலம்' யாவருக்கும் ஒப்ப நிகழ்வ தொன்றாகும். இது கலியுகம். இதில் இக்குறை நிகழ்ந்தே தீருமென்று புகல்வர். உண்மை இதுவன்று. ஒவ்வொரு சமுகமும் ஒவ்வொரு நாடும் தமக்குத் தாமே தஞ் செயலால் கலியுகம் அல்லது சத்திய யுகத்தைப் படைத்துக் கொள்கின்றது. சோம்பல் நெறியில் செல்வோனுக்கு எச்சமயமும் கலியுகமென்ற இழிந்த நிலையுடைக் காலமாகும். சோம்பலை விட்டெழுந்து செயல் புரிதற்கு முனைந்து நிற்பார்க்கு அவ்வேளை துவாபரத் திரேதா யுகங்களாகும். உறுதியான நம்பிக்கையோடும் சிறந்த உள்ளக் கிளர்ச்சியோடும் தஞ்செயலில் இடையறாது உழைப்பார்க்கு யாண்டும் போற்றத்தக்க சத்திய யுகம், சுவர்ண யுகம் அல்லது உயர்வு பெறும் இன்பம் பயக்குங் காலமாகும். எனவே யாவரும் தத்தம் உள்ளத்தில் உழைப்பினெளியை நிறுவுதல் வேண்டும். அவர்களகத்தினின்று எஞ்ஞான்றும் சோம்பரும் மடியும் எழுதலாகா. அன்றியும் ;

5. சரந்வை மது விந்ததி சரந்த்ஸ்வாது முதும்பரம்.
சூர்யஸ்ய பச்ய ச்ரேமரணம் யொ ந தந்த்ர யதெ சரந்
சரைவேதி சரைவேதி.

"தேனீக்கள் சுற்றித் திரிவதாலேயே தேன் சேர்க்கின்றது. பறவைகள் சுற்றித் திரிவதாலேயே இனிய நற் கனிளைப் பெறுகின்றன. கதிரவன் சுழல்வதாலேயே கதிரொளி பெறுதல் காண்க, அன்றேல் இலவாம். எனவே செயல் புரிந்திடுமின். உறுதியாகச் செயல் புரிந்திடுமின்."

விலங்கு பறவை புழு, பூச்சி, எறும்பு, ஈக்கள் முதலிய உயிர்க் களனைத்தும் சுற்றித் திரிந்து உணவு பெற்று உயிர் வாழ்கின்றன. உழைப்பின்றி எவர்க்கும் எதுவும் அகப்பட மாட்டா எனவே யாவரும் உழைத்தல் வேண்டும்.

இவ்வாறாக உழைப்பின் மேன்மையை ஐதரேய பிரமாணத்தில் விளக்கப் பட்டிருக்கின்றது. இது வைதிக நெறியில் உழைப்பின் தன்மையைக் குறிப்பதாகும். வைதிக நெறிப் பட்டாரிடம் சோம்பல், மடி, அசட்டையாதிய இழிதகைமைகள் இருத்தலாகா. வைதிகநெறி உள்ளக்கிளர்ச்சியோடு உழைக்கத் தூண்டும் நெறியாகும். தன்னுயர்ச்சிக்காக உழைத்திடுமின். சமூக நலத்திற்காகப் பாடு படுமின். நாட்டின் நலத்திற்காகச் செயல் நிகழ்த்திடுமின். மக்களனைவர் முற்போக்கிற்காக முயன்றிடுமின். எழுந்திருமின் ! இப்பொழுது வெகு நாழிகை சென்றுவிட்டது.

---

# நற்குணப் பயிற்சி.

(டர்பன் வித்தியாலய தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ. ச. முனிஸ்வாமி பிள்ளை எழுதியது)

மக்கட்கு நற்குணமானது பெருஞ் சிறப்பை விளைவிப்பதால் அதனை தம் முயிரினும் அதிகமாகப் பாராட்டி மக்கட் கூட்டத்தில் மலிந்து பரவச் செய்தல் அவசியமாகும். அங்ஙனம் அது எங்கும் பரவி ஜன சமூகத்துக்குப் பெரியதோர் நன்மையைப் பயக்க வேண்டுமானல் அதனைப் பயிலும் வழியினைக் குறித்து பல விடத்தும் சான்றோர்கள் கூறியுள்ளவற்றை அறிந்தொழுகுதல் சாலவும் நன்றாம்.

நற்குணப்பயிற்சி முக்கியமாக மூன்று பிரிவுகளாக வகுத்தற் குரிய தாயுள்ளது. அவை,

(க) குழந்தைகள் இளமை தொட்டே பள்ளிக் கூடத்துக்கு அனுப்பப் படும் வரை நற்குணங்களிற் பயிலுதல்.

(உ) பாடசாலைகளில் மாணவர்கள் நற்குணப் பயிற்சியைப் பெறுதல்.

(ங) கல்வி கற்று முடிந்த பின்னர் உலக வாழ்க்கையுட் பட்டவர்கள் நற்குண நற் செய்கை யுடையராய் விளங்கல் என்பனவாம். இனி, இப் பிரிவுகள் ஒவ்வொன்றினைக் குறித்து சுருக்கமாகக் கூறுவோம்.

பள்ளிக் கூடத்துக்குப் போகும் பருவத்திற்கு முன் குழந்தைகள் தம் பெற்றோரிடத்து மிக்க பற்றும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். ஆனால் அப்பிள்ளைகளை எவ்வாறு வளர்த்து வந்தால் தமக்குப் பிற்காலத்தில் அவர்கள் பெரிதும் பயன் படுவர் என்பதை பெற்றோர்கள் பலர் நன்கு அறிந்திலர். பிள்ளைகளை வளர்த்தல் எளிதான விஷயமன்றெனினும் அது மிகவும், அருமையும் மேன்மையுமான காரியமென்றே கூறலாம். அந்தோ பிள்ளைகளை முறையாகப் பயிற்றும் விஷயத்தில் நாம் மிக்க குறைபாடுடையவர்களா யிருக்கிறோம். நம் மாட்டுள்ள குறைகளை நாமுணர்ந்து அவற்றை நீக்க முயலுவதில் எவ்வித கௌரவக் குறைவுமில்லை. அதனால் நமக்கு கௌரவ நிறைவே விளையும். பொதுவாகப் பெற்றோர்கள் தமக்குக் குற்றமெனத் தோன்றுவனவற்றை யெல்லாம் சிறுவர்மேலேற்றித் தாம் செய்வதெல்லாம் சரியென நினைக்கிறார்கள். அங்ஙனம் கருதுவது சாதாரண மனிதர்களின் இயல்பென்றாலும், பிள்ளைகளோடு பழகும் போது பெரியோர்கள் பிள்ளைகளின் செயலில் குற்றமுளதா? இலதா? என்பதை உணர்ந்து குற்ற மிருப்பின் அதனை மறு முறை அப்பிள்ளைகள் செய்யாதிருப்பதற்கு நாம் யாது செய்தல் வேண்டும். அங்ஙனமின்றிக் குற்றம் ஒன்று கண்டவுடனே கோபங் கொண்டு சிறுவர்களைச் சிக்ஷிப்பது முறையன்று.

தாய்மாரிட மிருந்து குழந்தைகள் அறிந்து கொள்ளக் கூடிய பண்புகள் பல. அத்தாய்மார்கள் கல்வி கற்று, உண்மை யறிவுடைய உத்தம மாதர்களா யிருப்பார்களானால் அவர்களால் சிறுவர்கள் அடையும் பலன் அளவற்றது. இதனாலன்றோ ஒரு பெரியவர், ஒரு ஆடவனுக்குக் கல்வி பயிற்றினால் கற்றவனாகிறான். ஒரு பெண்மணியானவள் கற்றுணர்ந்து விளங்குவாளானால் ஒரு குடும்ப முழுதும் அதன்பயனை யடைகிறது. குடும்ப மட்டுமா? அவள் மூலமாக அக்குடும்பத்தின் மக்கட் கூட்டமனைத்தும் நன்மையுறுகின்றது." என்று வெகு அழகாகக் கூறியிருக்கிறார்.

ஆகையால், நாம், நம் சிறுவர்கள் நற்குண சம்பன்னராய் விளங்க வேண்டு மென்று விரும்புவோமானால் மேற் கூறிய வாக்கியத்துள் பொதிந்துள்ள நுண்பொருளை யுணர்ந்து நமது பெண்களுக்கும் கல்வி பயிற்றுதல் வேண்டும்.

பள்ளிக்கூடத்திற்குச் செல்லத்தொடங்கியது முதல் உயர்தரப் படிப்பு முடியும் வரை மாணுக்கர்களுக்கு உபாத்தியார்களால் நற்குணம் வளர்த்தல் கூடுமாயினும் அவர்கள் தமது முயற்சியினால் மனத்தை அப்போதைக்கப் போது நல்வழியில் திருப்பிக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளுக் காசிரியரா யிருப்பவர்கள் மாணவர்கள் அறிவு வளர்தற்கு வேண்டியவற்றை மாத்திரம் போதித்தால் போதாது. ஒழுக்கம் ஓங்கிவளர்தற்கான வற்றையும், மாணவர்களோடு தம்மாலியலுமளவு உபாத்தியார்கள் நெருங்கிப் பழகவும் தமது மாணவர்கள் நல்ல புஸ்தகங்களை எடுத்துப் படிப்பதில் அவாவுண்டாகும்படி தூண்டவும் வேண்டும். அதனால் பொதுவாகப் படிப்பினிடத்து ஆவல் கொண்ட மாணவர்கள் பற்பல தேசச் சரித்திரங்களையும் படித்து அவற்றிலிருக்கும் உண்மை, இதோபதேசம் முதலியவைகளை உணர்ந்து நல்வழிப் படுவ தல்லாமல், ஏதாவதொன்றில் ஐயப்பாடு நிகழும்போது பல நண்பர்களுடன் கலந்து அளவளாவி நாளடைவில் நல்லொழுக்கத்தையு மடைவர்.

இவ்வாறு திருந்திய கல்வியைப் பெற்றுள்ள மாணவர்கள் பின்னர் தொழிலில் அமர்ந்ததும் தம் வாணாளைக் கழிக்கும் போது அவர்கள் கற்றதன் பயனாக அதற்குத் தகவே ஒழுகி நிற்றல் வேண்டும். கல்வி நலம் மிக்கானொருவனுக்கு நற்குணமில்லாது ஒழியுமாயின் அவனைப் போன்ற பேதையினும் பேதை இவ்வுலகில் யாருமிரார் என்பது பெரியோர் கருத்தாகும். கல்வியறிவினை இயற்கையிலேயே சூட்சம புத்தியுடையவன் தான் எளிதிற் பெறலாகும். நற்குணமோ யாவராலும் பயிலுதற் குரியது. நற்குணத்தோடு கூடிய கல்வியே பிறரால் மதிக்கத்தக்கது—மதிப்புடையது.

நற்குணங்க ளெல்லாம் தொடங்குங்கால் துன்பம் போல் தோன்றி இறுதியில் இன்பம்

பயக்கும்" தீக்குணங்களோ "சுலபமாய்த் தோன்றிப் பின்னர் பெருந்துன்பத்தை விளைவிக்கும். ஆகவே மக்களாகப் பிறந்த யாவராலும், எக்காலத்தும், எவ்விடத்தும், எந்நிலையிலும் போற்றப்படுவதும், போற்றற் குறியதும், போற்றிற் பெரும்பயன் விளைவிப்பதும் நல்லொழுக்கமேயன்றிப் பிரிதில்லை. அறிவுடையோர் பாராட்டும் கல்வியறிவும் அதற்கு அடுத்தபடியாகுமே யன்றி அதனினும் உயர்ந்ததெனக்கொள்ள இயலாதெனின் ஒழுக்கத்தின் விழுப்பத்தைப் பற்றி இனி உரைப்பதென்னே?

---

# ஸ்ரீ ஹர்ஷ சரிதம்.

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

## அரசியல்.

ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தி ஆரியாவர்த்தம் முழுவதும் தன் வசமாக்கி யாவரும் புகழுமாறு ஆட்சி புரிந்து வந்தார். கி. மு. 647-ல் காலகதி யடைந்தார். இவருடைய அரசியல் முறை இந்தியருடைய தர்மங்களை ஒட்டியேயிருந்தது. குடிகளின் நன்மைக்காகவே அரசியல் நடத்துவதென்று எண்ணினவராகையால் நீதியும் நிலவியது. கௌடியன், சுக்கிராசாரியன் முதலியவருடைய நான்முறையைப் பின் பற்றியே ஒழுகி வந்தாரென்று தெரிகிறது. அரசியல் ஒரு பொதுஜன சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதைப் பற்றி பாணனுடையவும் யுவாங்சுவானுடையவும் மொழிகளால் நன்கு புலனாகவில்லை ராஜ்யவர்த்தனனுடைய மரணகாலத்தில் ஹர்ஷனுடைய வேலைகளைப்பற்றி சேனாதிபதி சிங்கனாதனும் அயல்நாட்டுக் காரியதரிசி அவந்தியும், யானைப்படைத் தலைவனான கந்தகுப்தனும் சபையில் உபதேசஞ் செய்வதுபோல பிரசங்கஞ் செய்தனரென பாணன் கூறுகிறான். பெரியநாட்டை ஆளுவதற்கு ஒரு பெரிய உத்தியோகக் கூட்டம் அமைந்திருக்க வேண்டும். அரசனின் முக்கியமான உத்தியோகஸ்தன் மஹாசந்திவிகாரி என்பவன். இவன் முதல் மந்திரி. சேனைத்தலைவனுக்கு மஹாபலாதிகிருதன் என்றும் சட்டவல்லனுக்கு மஹாய திலகன் என்றும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அரண்மனை விசாரணைக்காக 'மஹாபிரதிகாரர்' என்ற உத்தியோகஸ்தர்களும் சமஸ்தானங்களை ஆட்சி புரிவோருக்கு ராஜஸ்தானிகன் அல்லது உபராஜாக்கள் என்ற பெயரும் வழங்கப்பட்டு வந்தன. குறு நில மன்னர்கள் ஆண்டில் ஒரு முறை சக்கரவர்த்தியைப் போய்க் காண வேண்டுவதுண்டு. மத சம்பந்தமான காரியங்களை யோசனை செய்யவும் சபை இல்லாமலில்லை. வலபி மன்னனும் காமரூபத்துக் குமார ராஜாவும் வேறு பதினெண் குறு நிலமன்னரும் இதற்கு உரிமையுள்ள கூட்டத்தவரென்று யுவாங்சுவான் கூறுகிறார். நாடு பூக்தி விஷயம் கிராமம், என்றமுறையே பெரிதிலிருந்து சிறியதாக பகுக்கப்பட்டிருந்தது. அரசு செய்வதற்கு சௌகரியமாகுமாறு தன் தலை நகரை தனேசுவரத்திலிருந்து கனியகுபிஜத்திற்கு மாற்றினார். அந்நகருக்கு 20 இலி நீளமும் 5 இலி வீதியுமுண்டு. இதன் வடபாகம் கங்கை யாறாலும் ஏனைய பாகங்கள் கோட்டைகளாலும் கிடங்குகளாலும் பாதுகாக்கப் பட்டிருந்தன. ஹர்ஷர் தன் தலைநகரை அங்கு மாற்றும் போதும் அது ஒரு பெரிய நகராகவே இருந்தது. புத்தமுனியின் உபதேசங்களெல்லாம் இந்நகரண்டையில் வைத்துத்தான் நடை பெற்றிருந்ததாம். 100-க்கு மேல் பௌத்த மடங்களும் 200-க்கு மேல் இந்து ஆலயங்களும் அந்நகரில் இருந்ததாக யுவாங்சுவான் கூறுகிறார்.

அவருடைய தினசரியைப்பற்றி யுவாங்சுவான் குறிப்பிடுவதாவது—ஒரு நாளை மூன்று பகுதியாக பிரித்து முதல் பகுதியை அரசியல் விஷயமான காரியங்களை விசாரணை செய்யவும் இரண்டாவது பகுதியை மத சம்பந்தமான காரியங்களை விசாரிக்கவும் மூன்றாவது பகுதியை கவிகளோடு உத்தியானத்தில் உலாவுவதற்குமாக செலவு செய்து வந்தார்.

ஹர்ஷர் தன் குடிகளை குறு நில மன்னரின் மனம் போல் ஆட்சி புரிய விட்டு விடவில்லை. அடிக்கடி நாட்டை சுற்றி உத்தியோகஸ்தர்களுடையவும் குறு நில மன்னர்களுடையவும் செய்கைகளைக் கவனித்து வந்தார். ஒரே இடத்தில் எப்போதும் இருப்பதில்லை. ஆங்காங்கு தாமதிப்பதற்கு அரண்மனைகளைக் கட்டி வைத்தார். மழைக் காலம் ஒழிய மற்றக் காலமெல்லாம் நாட்டைச் சுற்றிக்கொண்டே யிருப்பார். அதிக்கிரமமானவரை தண்டித்தும் நல்லவரை

வெகுமானித்தும் வந்தார். யுவாங்சுவான் இதைக் கூறுவது காண்க. “அண்டையிலுள்ள உத்தியோகஸ்தர்களும் மன்னர்களும் நீதியில் ஒழுகுவாரானால் அவரைத் தன்னோடு சம நிலையாக பாவனை செய்வார். இதற்கு மாறுபட்டாரைக் கண்ணில் காண்பதற்கும் இசையமாட்டார்.”

ஹர்ஷருடைய ஆட்சி முறையைப் பற்றி பாணன் மிகப் புகழ்ந்திருக்கிறான். 'இரவு, பகைமை, களவு, முதலியன அந்நாட்டிலில்லையாம். அக்கால அரசியலைப்பற்றின யுயாங்சுவானுடைய அபிப்பிராயம் அடியில் வருமாறு.

எக்காரியத்திலும் கருணையோடிருந்ததினால் ஆட்சி முறைக்கு ஒரு இடையூறும் உண்டாகவில்லை. அரசருடைய பொருள்கள் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன. முதல் பகுதியை ஆட்சி முறைக்கும் இரண்டாவது பகுதியை உத்தியோகஸ்தருடைய சம்பளத்திற்கும் மூன்றாவது பகுதியை பண்டிதர்களுக்குப் பரிசிலாகவும் நான்காவது பகுதியை மத சம்பந்தமாகவும் உபகாரப்படுத்தி வந்தார்.

குடிகள் ஆறிலொரு கடமை செலுத்தி வந்தனர். வழிகளிலும் ஆற்றில் தோணி கடத்துவதற்கும் மிகக் குறைந்த தொகை எற்படுத்தப்பட்டிருந்தது. படைகள் ராஜமந்திரத்தை காவல் புரிந்து வந்தன. படை வீரருக்கும் மந்திரி முதலான முக்கிய உத்தியோகஸ்தர்களுக்கும் நிலங்களை விட்டுக்கொடுத்து வந்தனர்.

ஹர்ஷருடைய காலத்தில் நியாய பரிபாலன முறையை யுடாங்சுவான் கூறும்விதம்வருமாறு

பாரத ஜனங்கள் இயல்பாகவே உண்மையுடையவராக இருந்தனர். பொருள் விஷயத்தில் அவருக்கு வஞ்சகமில்லை. இம்மையில் அடையும் துன்பங்களை விட மறுமையில் அடையப்போகும் துன்பங்களை மேலாக மதித்து வந்தனர். தன் வாக்குகளை நன்கு பரிபாலித்து வந்தனர். குற்றவாளிகளும் ராஜத் துரோகிகளும் அவரிடமில்லை. நியமங்களுக்கு மாறுபாடாக நடப்பவரைச் சிறையில் அடைத்து வந்தனர். தண்டனை பெற்றவரை மனிதராக எண்ணுவதில்லை. குற்றவாளிகளின் உறுப்புகளை முறித்துவிடுவார்கள். சிலரை நாடுவிட்டுத் துரத்தும் வழக்கம் நடைபெற்று வந்தது. குற்றவாளிகளைக் கண்டுகொள்ள அவர்களை தேகோபத்திரவஞ் செய்வதில்லை. ஜலபரீட்சை அக்கினிபரீட்சை, துலாபரீட்சை, விஷ பரீட்சை, முதலான பரீட்சைகள் மூலம் குற்றவாளிகளைத் தெரிந்து கொள்வார்கள். ஜல பரீட்சை மூலம் தெரிந்துகொள்ள ஒரு சாக்கில் குற்றவாளியைக் கட்டி கயத்தில் தாழ்த்துவார்கள். அதனோடு ஒரு கல்லையும் கட்டியிருக்கும். கல் தாழ்ந்தால் அவன் குற்றவாளியல்லவென்றும் அவன் தாழ்ந்தால் குற்றவாளியென்றும் தீர்மானிக்கப்படும். அக்கினி பரீட்சையில் பழுக்கக் காச்சின இரும்புத் தகட்டை குற்றவாளியை எடுக்கச் சொல்லுவார்கள். அவன் அதை எடுக்க கை வேகாவிட்டால் குற்றவாளியல்லவென்றும் வெந்திருந்தால் குற்றவாளியென்றும் கண்டு கொள்ளுவார்கள். துலா பரீட்சையில் குற்றவாளியையும் அவன் நிறையுள்ள கல்லையும் துலாத்தட்டுகளில் வைப்பார்கள். அவனிருக்கும் தட்டு தாழ்ந்தால் குற்றமில்லாதவனாகவும், கல் தாழ்ந்தால் குற்றமுடையவனாகவும் கருதப்படுவான். விஷபரீட்சைக்கு ஒரு ஆட்டின் தொடையைக் கீறி அதில் விஷத்தைக் கலந்து வைப்பார்கள். அது செத்துவிட்டால் அவன் குற்றவாளியாகவும், சாகவில்லையானால் குற்றமில்லாதவனாகவும் கருதப்படுவான். இங்ஙனம் நீதி செலுத்தி வந்தார்.

ஹர்ஷருடைய காலத்திலுள்ள பாரதீய சேனைகளைப்பற்றி யுயாங்சுவான் கூறுவதாவது. பாரதீய சேனைகளிலுள்ள படை வீரர்கள் மிக வீரர்களான ஜனங்களிடையே இருந்து தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர் தலை முறையாக படைத் தொழிலிலே ஈடுபட்டவர்கள். சமாதானகாலங்களில் அரண்மனையின் அண்டையில் வாழ்ந்து வந்தனர். போர் செய்யும் வேளையில் முனையின் முன்னே நின்று போர் புரிவார்கள். யானை தேர், குதிரை, முதலியன போருக்கு உபகாரப்பட்டு வந்தன. சேனைத் தலைவர்கள் நான்கு குதிரை கட்டின தேர்களில் நின்று பொருது வந்தனர். குதிரைப்படைகள் முன்னணியில் நின்று போர் செய்தும், படை வீரர்களுடைய கட்டளையைப் படைகளுக்குத் தெரிவித்தும் வந்தன. வாள், குந்தம், பரிசை, முதலியன படைக் கருவிகளாக உபகாரப்படுத்தப்பட்டன. அம்பு, வில், மழு, சூலம் முதலியனவும் இல்லாமலில்லை

இங்ஙனம் நீதி முறையால் ஆட்சி புரிந்து வந்ததால், வறுமையின்றி நாடெங்கும் வளமையுற்று வாழ்ந்து வந்தது. பாணன் நாட்டின் வளத்தை மேன்மையாக புகழ்ந்துள்ளது குறிப்பிடத்தகுந்தது.



# பத்திராசிரியர் குறிப்புகள்

**முன்னுக்கு வழியா?:**—மேல் சமுத்திரக் கரைப் பிரதேசங்களில் உள்ள "நாயாடிகள்" என்ற ஒரு ஜாதியார் அப்பிரதேசத்து உயர் குலத்தோரென அகங்கொண்ட அகம்பாவிகளால் தாழ்ந்தோர்களெனத் தாழ்த்தப் பட்டு மிகவும் துன்பத்திற்காளாகித் தவிக்கிறார்கள். இவர்கள் கள்ளை இலவசமாகக் கிடைத்தால் தான் குடிப்பார்களாம். இத்தகைய ஜாதியாரை நமது துரைத்தனத்தார் முன்னுக்குக் கொண்டுவர எண்ணி நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இந்த செய்கை பாராட்டுதற்குரிய தாயினும், அரசாங்கத்தார் கட்குடியை அவர்களிடம் பழக்கிவைத்ததை நினைக்க வீணாகிறது. சிறுவர்களுக்கு ½ புட்டிக் கள்ளும், பெரியவர்களுக்கு 1 புட்டி கள்ளுமளிக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். குடியை ஒழிக்க 4 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கும் அரசாங்கம் இப்படிச் செய்வதென்றால் வேலியே பயிரழிய சாதகம் செய்வது போலன்றோ விருக்கிறது.

*        *

**தீக்குச்சித் தொழில்:**—ஸ்வீடிஷ் தீக்குச்சி கம்பெனி உலகமுழுமையும் வியாபாரம் செய்கிறது. அதனுடைய வியாபாகம் பெருகுகிறது. பல தேசங்களிலும் இது தன் வியாபாரத்தில் ஏகபோக உரிமையை அனுபவிக்கிறதென்றால், இதன் மூல தனத்தின் அளவையும் சொல்ல வேண்டுமா? இந்தக் கம்பெனி வெளியிட்டிருக்கும் 1928-ம் வருஷ ரிப்போர்ட்டிலிருந்து இதனுடைய மூலப் பெருக்கும், லாபப் பெருக்கும் ஏகபோக உரிமையின் அனுபவப் போக்கும் விளங்கும். இந்தியாவில் இறக்குமதி வியாபாரத்தால் ஏற்படும் வரியையும் ஈடு செய்து நன்றாக வியாபாரம் செய்ய வேண்டி, இங்கும் பல விடங்களில் தங்கள் கம்பெனிகளை ஸ்தாபிதம் செய்து விட்டன. இதனால் சுய தேசத்தவர்கள் ஊக்க மிகுதியாலும் தேசாபிமானத்தாலும், தொழில்களைப் பெருக்கவும் எண்ணி ஆரம்பித்துள்ள நமது சுயதேச தீக்குச்சிச் சாலைகளுக்கு ஆபத்து உண்டாகி விட்டது. ஆனால் ஸ்வீடிஷ் கம்பெனி, தனக்கு முன்னதாக ஏற்படும் சிறிது நஷ்டத்தையும் பொருட் செய்யாது, நமது கம்பெனிகளை முறியடித்த பிறகு அதிக பொருள் சம்பாதிக்குமென்பது திண்ணம். இதனை அரசாங்கம் கவனிக்குமா?

*        *

**காங்கிரசுக் கிடமில்லை:**—வரும் டிசம்பர் மாதத்தில் லாகூர் நகரில் கூடும் காங்கிரசுக்கும் பொருட் காட்சிக்குமாக அவ்வூரிலுள்ள மிண்டோ பார்க்கைக் கொடுக்க வேண்டுமென கேட்டதற்கு அதிகாரிகள் முடியாதென பதிலுரைத்தார்கள். இப்பொழுது பஞ்சாப் கவர்ன்மெண்டார், காங்கிரஸ் தலைவர்களிடத்தும், இன்னுமாக அடக்கு முறையை ஆரம்பித்து அவர்களது கடாட்சம் தேசத் தலைவர்களிடத்துப் பிரகாசிக்கின்றது. இப்படிக் காங்கிரஸ் தலைவர்களை அடக்கியும், இடத்தைக் கொடுக்காமலும் இருந்தால் லாகூரிலே காங்கிரஸ் நடக்க முடியாமல் செய்துவிடலாமென்பதே அவர்கள் எண்ணம் போலும். சீப்பொளித்தால் மணமகளுக்கு மணமாகாது என்பது போல் கருதுகிறார்கள் போலும். காங்கிரஸ் தலைவரோ இது விஷயமாக அதிக ஊக்கம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கிறார். அரசாங்கத்தின் செயல் எதிர்பாரா பெருத்த ஊக்கத்திற்கு இடமளிக்கிறதால், அவர்கள் செயலை ஒரு வழியில் போற்றுகிறோம். உறங்கி இருக்கும் இந்தியர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும் சமயச் சஞ்சீவி அடக்கு முறைதான். அரசாங்கத்தார் முன் பின் யோசியாமல் செய்த அடக்கு முறையால் நன்மைகள் ஏற்படும்.

*        *

**மது விலக்கு மகாநாடு:**—பம்பாயில் மது விலக்கு மகாநாடு இம்மாத முதல் வாரத்தில் சிறப்புடன் நடத்தெப்தியது. இதில் உபசாரணைத் தலைவர் ஸ்ரீமான் கே. நடராஜனும், தலைவர் ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸும் குடியை உடனே ஒழிக்க உள்ள தேவையான நடவடிக்கைகளைக் கையாள வேண்டிய அவசியத்தைப்பற்றி வற்புறுத்தினர்கள். முக்கியமாக இந்நாட்டிலுள்ள மக்கள் மதாசாரப்படி மதுபானம் விலக்கவேண்டியிருப்பதைப்பற்றி ஸ்ரீமான் நடராஜனும், அமெரிக்காவில் மதுவிலக்கினால் ஏற்பட்டுள்ள விசேஷ அனுகூலங்களையும், மதுபானத்தை ஒழிப்பதால் அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்தாலும், இதனால் தேசத்திற்கு ஏற்படும் நஷ்டத்தைக் கவனித்தால் அது பெரிய காரியமல்லவென்றும் தெளிவாக எடுத்துக் காட்டினர், ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ்.

* *

**சுதேசிக் கப்பல் கம்பெனி:**—பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஒன்றே பல ஆண்டுகளுக்கு முன் இருந்த சுதேசிக்கப்பல் வியாபாரம் மாண்ட பிறகு தலையெடுத்து நிற்கிறது. இதில் 3-வது வகுப்புப் பிரயாணிகள் படும் கஷ்டம் மிக அதிகம். இதனை எடுத்துரைத்த மகாத்மா, அக்கம்பெனி உத்தியோகஸ்தரால் வீண் அவதூறு வார்த்தைகளால் தூஷிக்கப்பட்டார்.

இதனால் சிட்டகாங்கில் நடந்த பெரிய கூட்டத்தில் "சுதேசி வங்காள பர்மா நாவிகேஷன் கம்பெனி." யைத்தான் ஆதரிக்கவேண்டுமென்றும், பிரிட்டிஷ் கம்பெனியைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், இதற்கான இயக்கத்தை ஏககாலத்தில் வங்காளத்திலும், பர்மாவிலும் நடத்துவதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. இதற்காக இந்தியர்களாலான பஹிஷ்கார கமிட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்த விஷயம் முஸ்லீம்களுக்கு மிகுந்த உற்சாகத்தை ஊட்டியிருப்பதும், ஸ்ரீமான் சாபஹாஜி கொண்டுவந்திருக்கும் "கடலோரப் போக்கு வாத்து இந்தியக்கப்பல் கம்பெனிகளுக்கு ஒதுக்கிவைக்க வேண்டும்" என்ற மசோதாவும் போற்றத்தகுந்ததாகும். சுதேசத் தொழிலுக்கும், அன்னிய பஹிஷ்காரத்துக்கும் நாடெங்கும் ஊக்கமேற்படட்டும்.

*

**நமது ஆசிரியரின் விஜயம்:**—வாலாஜாபாத் இந்து மத பாடசாலையினரின் வேண்டுகோளுக்கிணங்கி சென்ற ஆகஸ்டு மாதம் நான்காந் தேதி நமது ஆசிரியர் ஸ்ரீமான் கே. எஸ். சுந்தரம் அவர்கள், ஸ்ரீமான்களான சு. சொக்கலிங்கம் பிள்ளை, M. A. நெல்லையப்ப முதலியார், நடேசய்யர் முதலானவர்களோடு அங்கு சென்றதும் அப்பாடசாலையாரால் நல் வரவேற்பு நடந்ததும், உபசாரப்பத்திரம்படித்துக் கொடுத்ததுமான நடவடிக்கைகளைப் பிறிதொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

பாடசாலை மாணவர்கள் "நாய் வளர்ப்பு பூனை வளர்ப்பு" பற்றி நிகழ்த்திய வாதமும், இம்மை மறுமை பற்றி புரிந்த தர்க்கமும் தேகாப்பியாசம் செய்து காட்டிய காட்சியும் நமது ஆசிரியரின் நாடகமான "ராமாமிர்தம்" என்றதை நடித்துக் காட்டிய திறனும் மாணவனொருவன் ஆங்கில வகுப்பு நடத்திக் காட்டிய விதமுமான பலவகைகள் காணத் தகுந்த காட்சியாயும், போற்றத் தகுந்தனவாயுமிருந்தன.

முடிவுரையாக கூறியதில் ஆசிரியரவர்கள் "பத்து கோடி ஜனங்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல் திண்டாடுகிறார்கள்......இம்மையில் உங்களுக்குள்ள கஷ்டங்களைப் போக்க வழி தேடுங்கள். இந்தியாவில் கைத்தொழிலும் வர்த்தகமும் வளர்ந்து எல்லோரும் நன்றாய் உண்டு களித்து மாடமாளிகைகளில் வாழ என்ன செய்ய வேண்டும் என்பதை யோசியுங்கள். அதற்கான வேலையைச் செய்யுங்கள். அமெரிக்கரைப் போல் முதலில் தொழிலிலும் வர்த்தகத்திலும் செல்வத்திலும் உயர்வடைய முயற்சி செய்யுங்கள். தாய் நாட்டில் தரித்திரத்தை நீக்குவது பற்றியும் தொழிலபிவிருத்தி செய்வது பற்றியும் சிந்தித்து செயலாற்றுங்கள்..." என்றார்கள். இதனை பாடசாலையினரும் மாணவரும் கவனிக்க வேண்டும்.

மாணவர்கள் பிராணிகளைப் பற்றி நடத்திய வாதத்தில் அவர்களுக்குப் பிராணிகளிடத்திலுள்ள அன்பின் பெருக்கும், அவைகளின் தன்மையும் விளங்குகிறது. இது மாணவர்களிடத்தில் ஜீவகாருண்யத்தை ஏற்படுத்தும்.

இப்படியே "ராமாமிருதம்" முதலியவற்றை நடித்துக் காட்டியதில் குறிப்பறிந்து நடித்த திறன் மெச்சத் தகுந்ததாய், மாணவர்களின் அபிநயம் போற்றத் தகுந்ததாய், புத்தி கூர்மை

யுடனும் பழக்கிவைத்தவர்களின் திறமையும் விளங்க நடித்தது சிறந்ததே.

பொதுவாக பாடசாலையினர் பிள்ளைகளை நாலாவழியிலும் பழக்க எடுத்துக்கொண்ட திறன் பிள்ளைகளாலேயே அறிய வந்தது மெச்சத் தகுந்ததாகும்.

பாடசாலை நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனருளால் எளிய பிள்ளைகள், நல்ல திருந்திய முறையில் சிறப்பாய் படிக்கும் இப்பள்ளிக்கூடத்திற்கு உபாத்தியாயர்களின் தொண்டை முழுதும் செய்யவும், பாடசாலை நோக்கம் முற்றுப் பெறவும் நமது நாட்டு தனவந்த அன்பர்கள் தங்களாலியன்ற உதவியைச் செய்வார்களென்று நம்புகிறோம்.

*　　*

**நல்லயோசனை:**—ஆதித்திராவிடர்களை உயர்த்தும் வழிகளில் ஒன்றான சென்னை நகரிலுள்ள சேரிகளனைத்தையும் மாதிரிக் கிராமங்களாகச் சீர்திருத்த சென்னை அரசாங்கத்தார் உதகமண்டலத்தில் யோசனை செய்தது போற்றத் தகுந்ததாகும். நாட்டிலுள்ள மற்றச் சேரிகளையும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

*　　*

**ஆதி திராவிடருக்கு:**—ஆதி திராவிடர்களின் நிலையை உயர்த்த அரசாங்கத்தார் திருநெல்வேலி, கர்நூல், கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் பிரத்யேக ஸ்தாபனங்களை ஏற்படுத்தி யுள்ளார்கள். இதில் ஜில்லா தொழில் அதிகாரி ஒருவர், 4 இன்ஸ்பெக்டர்கள், 1 டிப்டி சர்வேயர், 1 ஸ்பெஷல் ஓவர்சியர் ஆகியவர்கள் இருக்கிறார்கள். திருநெல்வேலியில் 20 ஆரம்பப் பாடசாலைகள் திறக்கப் படும். 20 கிணறுகளும் வெட்டப்படும். இந்த இலாகா நன்றாக வேலை செய்ய நாம் விரும்புகிறோம்.

*　　*

**மறைந்தார்:**—சொல் நயமும், பேச்சுத்திறமும், தமிழன்பும், சைவப் பற்றும் கொண்டு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவராயும் விளங்கிய திவான் பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியார் சென்ற ஜூலை மாதம் 21-ம் நாள் தமக் கேற்பட்ட நீரிழிவு ரோகத்தின் காரணமாகத் திடீரென்று 54-ம் வயதில் மண்ணுலகை நீத்துச் சென்றார். ஆறுவருட காலம் சட்ட சபை அங்கத்தினராயும், ஒரு வருஷம் நகர பரிபாலன சபைத் தலைவராகவு மிருந்து நலம்பல செய்தவர். சென்னை நகருக்கு அரிய தொண்டாற்றியவர். முனிசிபல் நிர்வாகத்தில் நிபுணத்துவம் பெற்று விளங்கியவர். சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜாக நியமனம் பெற்று 6 மாத மாவதற்குள் காலமானார். இவர் சில காலத்தில் ஐக்கோர்ட் ஜட்ஜ் பதவியும் பெறக் கூடியவர். இவருக்கு 54 வயதேயாயினும் நல்ல உடல் வன்மையுடனும், உயரிய தோற்றத் துடனுமே விளங்கினார். இவர் ஜஸ்டிஸ் கட்சியின் சிறந்தத் தலைவராய் விளங்கி நாட்டிற்கு நல்ல தொண்டாற்றுவாரென நம்பி யிருந்தோம். ஜட்டிஸ் கட்சி தங்கள் பலத்தை யிழந்தது. பிராம்மணரல்லாதார் தம் தலைவரை யிழந்தனர். இவரது மரணத்திற்கு நாம் பெரிதும் வருந்துவதோடு அன்னவர் குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*　　*

**நீத்தார்:**—செட்டிமார் நாட்டுப் பெருஞ் செல்வரும், அந் நாட்டிலேயே முதன் முதலாக ஸர் பட்டம் பெற்றவரும், கொடை வள்ளல் பெத்தாச்சி செட்டியாரின் தமயனருமான ஸர்—மு. சித. முத்தையா செட்டியார் நோய்வாய்ப்பட்டுத் திடீரென்று மார்படைப்பால் ஜூலை மாதத்தில் தமது 42-ம் வயதில் காரைக்குடி கானாடு காத்தானில் காலஞ் சென்றார். இவர் பல பொது ஸ்தாபனங்களில் சம்மந்தப் பட்டிருந்தார். தொழில் துறைகளிலும் நன்றாகக் கை தேர்ந்தவர். ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அவ்விடத்திய வியாபார முறைகளைத் தெரிந்து வந்தவர். இவர் இள வயதில் காலமானமைக்கு வருந்துகிறோம். செட்டிமார் நாடு ஒரு பெருந்தகையை இழந்தது. தமிழ் நாடு ஒரு பெரிய வர்த்தக மணியை இழந்தது. இவர் குடும்பத்தாருக்கு லக்ஷ்மி சந்தா நேயர் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*　　*

ஜனசங்கையார் பஞ்சத்திற்குக் காரணம் லண்டன் மாக்மிலன் கம்பெனியாரால் வெளியிடப்பட்டுள்ள "ஸ்டேட்ஸ்மன் வருட வெளியீட்டுப் புத்தகத்தில், 1871-ம் வருஷம் முதல் 1921-ம் வருஷம் வரையிலுள்ள 50 வருஷ காலத்தில் இங்கிலாந்திலும், வேல்ஸிலுமாக ஜனங்களின் உற்பத்தி (நூற்றுக்கு அறுபத்தாறு வீதமாக 66 பெர்ஸன்ட் உயர்ந்திருப்ப

தாக அறிகிறோம். என்றாலும் இந்நாட்டிலே, மேலே கூறியுள்ள ஆண்டிற்குள்ள இடைக்காலமான 50 வருடகாலத்திலும் பஞ்சம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நிற்க, நாம் இந்தியாவின் ஜனவளர்ச்சியையும் பார்ப்போம். இந்தியாவில் 1872-ம் வருடத்தில் 206, 162, 360 ஜனங்களிருந்ததாகவும், 1921-ம் வருஷத்தில் 275, 537, 422 மாக இருந்ததாகக் கணக்கில் பார்க்கிறோம். இப்படிக் கணக்கைப் பார்க்கும்பொழுது 1872 முதல் 1921 வரை யுள்ள 49 வருட அளவிற்குள் ஜனங்களின் உற்பத்தி (நூற்றுக்கு முப்பத்துமூன்று வீதமாக) 33 பெர்ஸன்ட் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவின் ஜனத்தொகையின் உயர்வையும் இங்கிலாந்து வேல்ஸ் நாட்டின் ஜனத்தொகையின் உயர்வையும் நோக்க இந்தியாவிலே 33 பெர்ஸன்டும் இங்கிலாந்தில் 66 பெர்ஸன்டுமாக விருக்கிறது. இப்படி இரண்டு மடங்கு அதிகமாக ஒரே 50 வருஷகாலத்திற்குள் இந்தியாவைவிட ஜன உற்பத்தியில் அதிகமாகவிருந்தும் இங்கிலாந்து பஞ்சம் குடிகொண்ட நாடாயில்லை. இந்தியாவிலோ ஜனத்தொகையின் உற்பத்தி அதே 49 வருட காலத்தில் 33 பெர்ஸன்ட் அதாவது பாதியாக யிருந்தும் நமது நாடு பஞ்சமும், வாதையும் குடிகொண்ட நாடாயிருக்கிறது. இதற்குக்காரணம் பிரஜா உற்பத்தியின் அதிகமே எனக் கூசாது மேற்றிசை மேதைகள் கூறுகின்றனர்.

மற்றொரு முறையாகப் பார்த்தாலும் 1921-ம் வருஷத்தில் 318,942, 480 ஆகிறது. இங்ஙன மானால் 54 பெர்சென்ட் ஆகும். இப்படி எடுத்துக் கொண்டால் 66 பெர்சென்ட் ஜனத்தொகை எங்கே? 54 பெர்சென்ட் ஜனசங்கை எங்கே ?

இன்னும் 1921-ம் ஆண்டில் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சதுர மைல் ஒன்றுக்கு 649 ஜனங்கள் வீதமும் இந்தியாவில் அதே சதுர மைல் ஒன்றுக்கு 177 வீதமுமாகக் காண்கிறது. இங்கிலாந்தையும், வேல்சையும்விட இந்தியா செழிப்பும் இயற்கை நலனும் பொருந்திய நாடாகும்.

மேலே நாம் கூறியது பிரிட்டிஷ் அதிகாரிகளின் கணக்குப்புள்ளிகளே யாகும். என்றாலும் மேற்றிசை மேதைகள் ஜனப் பெருக்கின் உற்பத்தி அதிகத்தாலேயே இந்தியா பஞ்சமடைகிறது எனக் கூசாது மொழிவதற்குக் காரணம் நமக்கு அரசியலுலகில் அவர்களை முறியடிக்கப்போதுமான திறமின்மையும், நமது நாட்டில் பிறநாட்டுப் பொருளைச் சுரண்டி வரும் முறையில் வியாபாரப்பெருக்கம் ஏற்படாததுமே யாகும். ஆகவே இது விஷயத்தில் தளரா சிந்தையும், செயலும் ஆற்றவல்ல இளஞ்சிங்கங்கள் முன் வந்து வேலை செய்ய வேண்டும்

# வாலாஜாபாத் இந்துமத பாடசாலை.

## ஸ்ரீ. சுந்தரம்பிள்ளை யவர்களின் விஜயம்

சென்ற ஆகஸ்டு மாதம் நான்காம் நாள் காலை 10-30 மணிக்கு சென்னையிலிருந்து லக்ஷ்மி ஆசிரியரும் வியாபாரி ஆசிரியருமான ஸ்ரீ. கே. எஸ். சுந்தரம் வாலாஜாபாத் இந்து மத பாடசாலையைப் பார்வையிட ஸ்ரீமான்கள் எம். ஏ. நெல்லையப்பர், அட்வகேட் நடேசம் ச. சொக்கலிங்கம் முதலியவர்களுடன் வந்தார். பாடசாலைத் தலைவரும், ஆசிரியர்களும் வரவேற்றார்கள். பாடசாலையில், இன்று ஞாயிற்றுக்கிழமையா யிருந்தும், இவர்கள் பார்வை யிடுவதற்காக எல்லா மாணவர்களும் வந்திருந்தனர்; பாடசாலையை எவ்வளவு திறமையுடன் நடத்திவருகிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக பல சொல்லாட்டங்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஊரிலுள்ள முக்கிய மானவர்களும், மாணவரின் பெற்றோர்களும் விஜயம் செய்திருந்தார்கள். சென்னையிலிருந்து வந்தவர்களுக்கு மாலை போட்டவுடன் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. ஸ்ரீ சுந்தரம் தலைமை வகிக்கும்படி ஸ்ரீ வ. தி. மாசிலாமணி பிள்ளை பிரரேபித்தார். ஸ்ரீ. சுந்தரம் தலைமைப் பீடத்தில் அமர்ந்தவுடன், அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள்.

### உபசாரப் பத்திரம்.

"லக்ஷ்மி" பத்திரிகாசிரியரும், பிரபல பட்டு வியாபாரிகளான கே. எஸ். முத்தையா கம்பெனியின் உரிமையாளருமாகிய பெருந் திருவினர் கே. எஸ். சுந்தரனார் அவர்கள், வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் கிளை அங்கமாகிய மெய்கண்டார் மாணவர் கழகத்தில் தலைமை வகித்தனான்று, பாடசாலை வளர்ப்பாளர்கள் படித்துத்தந்த நல் வரவேற்பு இதழ்:—

பல் அறம்போற்றும் நல்எழில்மிக்கீர்!

தமிழுலகோர் கிடந்ததவப்பயனாய் வியாபாரிகட்குத் திரு நோக்கம் தந்தருளும் வரமணியாய், எஞ்ஞான்றும் இன்பந்திகழ் வாழ்விற் கிருப்பிடமாய் நாட்டுத் தொண்டையே வீட்டுத்தொண்டெனப்போற்றி ஆற்றுவார்க்கோர் எடுத்துக்காட்டாய், பத்திரிகை உலகில் வித்தக மணியாய், மிளிரும் தங்களை, நமது மெய்கண்டார் மாணவர் கழகம் நல் வரவேற்று இயற்கையின் எழுந்த இன்பந்து ஆழ்ந்து போற்றுகின்றது.

தமிழ் கூறும் நல்லுலகில், அமிழ்தினும் இனிமை பெற்று, முல்லைமெல் அரும்பினும் நன்மணம் கமழ்ந்து, திறப்பட்ட நுண்ணறிவுச் சொல் ஆக்கம் செறிந்து, மதிதொறும் புதுமைபெற்றுப் புலரும் நமது 'லக்ஷ்மி'யின் பெருமையினைத் தங்களது இடையறா ஊக்கமும், இனிய நல் எண்ணமுமே உந்தி வளர்க்கின்றது.

திருவாளர்கள், 'தமிழ்நாடு' சொக்கலிங்கனாரையும், 'சுதேசமித்திரன்' நெல்லையப்பரையும், பள்ளிச்சாலையைப் பார்வையிடவும் இளஞ்சிறார்களது மழலைச் சொல்லாட்டம் கேட்டு மகிழவும், உடன் அழைத்து வந்ததிலிருந்தே தங்களுக்கு நமது எளிய பள்ளியின் மீது பொதுளிய பேரன்பு படர்ந்துள்ளது, என்பதை அறிவோம். அவ்வன்புப் படர் கொடி, நறுமலர் பூத்துக் காய்த்து, நற்பலன் அளிக்கும் என்பது திண்ணம். தங்களது தண்ணருள் செறிந்த திருநோக்கிற் கிலக்காய இப் பள்ளிச்சாலையை, இனி, திருமகள் நோக்கிற்கும் இலக்காக்கி, நன்னிலை பெற்று மிளிருமாறு உயர்த்திவிடத் தங்களை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
இந்துமத பாடசாலை
வளர்ப்பாளர்கள்.

### நடவடிக்கைகள்.

தலைவர் முகவுரையாக சில வார்த்தைகள் பேசிய பின்பு நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அவைகளில் வீட்டில் நாயை வளர்ப்பதா அல்லது பூனையை வளர்ப்பதா என்பதைப் பற்றி 18 மாணவர் செய்த வாக்குவாதமும், இம்மை அவசியமா மறுமை அவசியமா என்பதைப் பற்றி 20 மாணவர் செய்த தர்க்கமும், 'குண்டோதரன்' என்ற ரவீந்திரர் எழுதிய நாடக நடிப்பும், 'ராமாமிருதம்' என்று ஸ்ரீ. சுந்தரம்

பிள்ளை எழுதிய நாடக நடிப்பும், 'லாபத்தில் பாதி' என்ற நாடகமும் மிகவும் நன்றாயிருந்தன. சுப்பிரமணியம் என்ற சிறுவன் ஆங்கில வகுப்பு நடத்தியது எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது. தலைவர் முடிவுரைக்குப் பின்னால் பள்ளியின் பின்பக்கத்தில் மாணவர் தேகாப்பியாச விளையாட்டுகள் செய்து காண்பித்தார்கள். அதன் பின்பு ஆதித்திராவிடர் பள்ளிக்கூடத்தை பார்த்துவிட்டு மாலை 3 மணிக்கு வாலாஜாபாத்தை விட்டு புறப்பட்டு மோட்டாரில் சென்னைக்குச் சென்றனர்.

## தலைவர் முடிவுரை.

ஸ்ரீ. சுந்தரம்பிள்ளை முடிவுரையில் கூறிய தன் சாராம்சமாவது :—

மாணவர்கள் இவ்வளவு தூரம், அபிவிருத்தியடைந்திருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷப் படுகிறேன். தர்க்கத்திலும், நாடக நடிப்பிலும் மாணவர் திறமை மெச்சத்தக்கது. ஆங்கில வகுப்பு நடத்திய சுப்பிரமணியம் உண்மையாகவே பின் காலத்தில் ஒரு கலாசாலை தலைவராக வரவேண்டுமென்று விரும்புகிறேன். மாணவர்கள் ஜாதி வித்தியாசத்தையோ மத வித்தியாசத்தையோ பற்றி கவலை கொள்ளக் கூடாது. அதைப்போலவே வேதாந்த விசாரணையும் அவர்களுக்கு இப்பொழுது அவசியமில்லை. இம்மை, மறுமையைப் பற்றி அவர்கள் கடுகளவு கூட சிந்திக்கக் கூடாது. மறுமையில் என்ன நடக்குமென்பதை பெரியவர்கள் கூட இன்னும் அறியமுடியாமலிருக்கும்போது, மாணவர்கள் எதற்காக அதைப்பற்றி கவலை கொள்ளவேண்டும்? நமது முன்னோர்கள் சீருஞ் சிறப்பும் பெற்று வாழ்ந்தார்கள். அவர்கள் காலத்தில் இம்மையில் அநுபவிக்க வேண்டியவைகளைக் குறைவின்றியில் அநுபவித்து வந்தபடியால் மறுமையைப்பற்றி விசாரிக்கவேண்டிய சிந்தனை ஏற்பட்டது. நமது நாடு இப்பொழுது தரித்திரத்தில் அகப்பட்டு விழிக்கிறது. 10 கோடி ஜனங்கள் ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாமல் திண்டாடுகிறார்கள். இம்மையிலேயே இவ்வளவு திண்டாட்டம் இருக்கும்போது மறுமையைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? இம்மையில் உங்களுக்குள்ள கஷ்டங்களைப் போக்க வழி தேடுங்கள். இந்தியாவில் கைத்தொழிலும், வர்த்தகமும் வளர்ந்து, எல்லோரும் செழிப்பாய் உண்டு, மாடமாளிகைகளில் வாழ என்ன செய்யவேண்டும் என்பதை யோசியுங்கள். அதற்கான வேலைகளைச் செய்யுங்கள். வயிறுகாயும் போது வேதாந்தம் நமக்கு என்ன பயனைக் கொடுக்கப் போகிறது? அமெரிக்கா செல்வத்தில் கொழித்துக் கொண்டிருக்கிறது. இம்மை சுகங்களையெல்லாம் அநுபவித்தாய் விட்டது. இப்பொழுது வேதாந்தத்தில் இறங்கியிருக்கிறது. அதற்கு அது அவசியந்தான். உங்கள் வேதாந்தத்தை அமெரிக்கரிடம் விட்டுவிடுங்கள். அமெரிக்கரைப் போல முதலில் தொழிலிலும் வர்த்தகத்திலும், செல்வத்திலும் உயர்வடைய முயற்சி செய்யுங்கள். அவைகள் கிட்டிய பின்பு இம்மை அவசியமா, மறுமை அவசியமா என்பதை விவாதித்துக் கொள்ளலாம். மாணவர்களே, உங்களுடைய தற்கால விசாரணை தாய்நாட்டுத் தொழிலை எப்படி விருத்தி செய்வது, தாய்நாட்டின் தரித்திரத்தை எப்படிப் போக்குவது என்ற விஷயங்களில் மட்டுமே இருக்கவேண்டும். வேறு எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

## பரிசு

முடிவுரைக்குப் பின்பு மாணவர்களில் சிலருக்கு ஸ்ரீ. சுந்தரம் பிள்ளை புத்தகங்களைப் பரிசாய் வழங்கினர்.

தமிழ்நாடு.

# கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கம்

## மூன்றாவது மகா நாடு

1929௵ செப்டம்பர் 14, 15 தேதிகளில் பழனியில் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். எ., எம். எல். அவர்கள் தலைமையில் மகா நாடு நடைபெற்றது. தலைவரின் உரை மொழி வருமாறு:—

தமிழ் என்னும் மொழியானது இனிமையென்று பொருள்படும். இனிய இயற்கைப் பொருள் டலவற்றுள்ளும் சிறந்தது தேன். கொங்கு என்ற சொல், தேன் என்னும் பொருட்டாதலின் கொங்கு நாடென்பது தமிழ் நாட்டின் சிறந்த பகுதியென்று கருத இடமுண்டு. கொங்கு நாட்டு மக்கள் கள்ளமில்லாத தூய உள்ளத்தவர்களாய், இறைவன்பால் தேன் ஒழுக்குப் போன்ற பேரன்பு செலுத்துவதிற் சிறந்தோராதலின் அந்நாட்டின் சால்பு மிகவும் பாராட்டத் தக்கது. தேனுட் பெய்த பொருளானது நலிவின்றிப் பாதுகாக்கப்படுதல்போல இந்நாட்டு மாந்தர் உள்ளத்திற்புகும் நல்லறிவுரைகள் பழுது படாது நிலைபெறும். ஆதலின் இம் மகா நாட்டிற் பேசப்படும் உண்மைப் பொருள்களனைத்தும் தங்குதற்குத் தக்க இடம் இந்நாட்டினரது உள்ளமென்பது தெளியப்படும். நறுந்தேனானது நற்கனிகளில் ஊறித் ததும்பி ஒழுகுந் தன்மையது. எல்லையில்லாத பேரறிவின் இணையற்ற பேரருட் கனியாக இளங் குமாரப் பெருமான் வீற்றிருந்தருளும் இப் பழனிமாநகரமானது அறிவின் தேன் ஊற்றெடுத்துப் பெருகுதற்குரிய பேரிடமாதல் காண்க. இந்நகரத்தை நற்கனியாகவும் இச்சமரச சன்மார்க்க சங்கத்தை நற்கனியினின்றுங் கசிந்து நிரம்பும் தேன் பெருக்காகவும் அறிஞர் மதிப்பர். இன்னொரு முறையாகப் பார்க்குமிடத்து இத்தமிழ் நாட்டினை நிலவரைப்பாகவும் கொங்குமண்டலத்தினைத்தேன்மலர் பூம்பொழிலாகவும் இப்பொதுனிமா நகரத்தைக் கனி நிறைந்த நடுவிடமாகவும் இம்மாபெருஞ் சங்கத்தை அதன் கண் உள்ள அறிவுத்தேன் கூடாகவும் கருதுதல் தவறாகாது. இப்பேரவையை அன்பாகிய நீர் நிறைந்த பொய்கையாகவும் ஈண்டுச் சொற்பொழிவு நிகழ்த்தும் அறிஞர் குழுவினைச் செவ்வி மிகுந்த தாமரையாகவும் அதன் நடுவில் இருப்பானை அத்தாமரையிலுள்ள வண்டாகவும் கருதுக. ஈண்டுள்ள அறிஞர்களின் நல்லுரை கேட்டு மகிழவந்த யான் யாதானும் ஓர் உரைபகர்வதற்குரியன் அல்லேனெனினும் தேன் கொள்ளப் புகும் வண்டானது ஒலியெழுப்புதல் போலச் சில சொற்கள் முற்கூறுதல் எனது கடமையாகும்.

சமரச சன்மார்க்க சங்கம் யாதென்று ஆராய்வதே இம் முன்னுரையின் உட்கோளாகும். சமரசமென்ற சொற்றொடர் ஒத்தசுவையென்று பொருள் படும். சன்மார்க்கமென்பதின் பொருள் நன்னெறி. ஒத்த சுவையுடைய நன்னெறியெனவே, பல்வேறு வகைப்பட்ட கொள்கையுடைய பலரையும் ஒற்றுமைப் படுத்த வல்ல நயஞ்சிறந்த பெருவழி அஃதென்பது பெறப்படும். சமயம் குலம், நாடு, மொழி, என்பவை காரணமாக வேறுபலரும் அறிவாராய்ச்சியினால் ஒத்த மனத்தினராய்ப் பெரும் பயன் எய்துதற்குரிய பொது நெறியே சமரச சன்மார்க்கமாகும். அத்தகைய பொது நெறியை உலகிற்குப் போதிக்கும் பெருமான் ஆசிரியர் திருவள்ளுவனாராவர்.

### தமிழ் நூலறிவினை வளர்த்தல்.

நற்றமிழ் நூலறிவினை வளர்ப்பதினாலேயே தமிழ் மக்களுக்குள் ஒற்றுமையும், கடவுள்பாலன்பும், நல்வாழ்க்கையும், உண்டாய் நிலைபெறுமாதலின், அஃதே முதற்கண் இச்சங்கத்தாரால் நிகழ்த்தப் பெறுதற்குரியது. அறிவினை வளர்ப்பதற்கு முயலாமல், மூடபக்தியை மாத்திரம் வளர்த்தல் நன்றன்று. மூட பக்தி ஆராய்ச்சிக்காரரின் தாக்குகளால் சிதருண்டகாலை அன்பு வழிபாட்டிற்குரிய நியமங்களனைத்தும் மக்களால் கைவிடப்படும். அறிவினால் அன்பு வளருமாயின் அந்நியமங்கள் பிறரால் நலிவடைய மாட்டா. ஆதலால், நமது கோயில்களிலே உருவ வழிபாட்டு முறைகள் நிலைபெற வேண்டுமாயின், அவற்றைப் பாதுகாத்தற் குரிய நல்லறிவினை நம்மவருட் பரவச்

செய்ய வேண்டும். அங்ஙனம் பரவச் செய்தற்குரிய முயற்சியொன்றும் நமது நாட்டில் போதிய அளவு இன்னும் ஏற்படவில்லை. அறிவினை வளர்க்கப் புகுகின்றவர்கள் பலரும் ஆங்கில முதலியவற்றைக் கற்று ஊதியம் தேடுவதிலேயே பொழுது போக்குகின்றார்கள். செல்வர்களுள் அறத்திற்கெனப் பொருட் செலவு செய்யும் பலரும் நற்றமிழறிவினை வளர்த்தற்குப் பொருளளிப்பதில்லை. புகழ் கருதிப் பொருத்தமில்லாத வழிகளிலேயே பொருள்களை வீணாகப் பாழுக் கிறைக்கின்றார்கள். புண்ணியம் இன்னதென்பதைத் தெளிவாக அறியாமல் சூழ்ச்சியாளர் சொல்வழி நின்று தம்மவர்க்குப் பெரும் பயன் விளையாத சமயச் சடங்குகளிலும் பிறவற்றிலும் அருமையான பொருளை வாரி இறைக்கின்றார்கள். நமது நாட்டில் அறத்திற்கெனப் பயன் படும் பொருளுக்கோரளவில்லை. அப்பொருளின் மிகுதிப் பாகமும் தமிழர்களுடையனவே. எத்துணைச் செலவாகியும், தமிழ் மக்களுள் வறுமையும் அறியாமையும் ஒழியவில்லை. அவர்கள் மொழியும் சமயமும் வலிகுன்றி வளம்படா தொழிகின்றன. இதனை இச் சங்கத்துப் பேரறிஞரும் பெருஞ் செல்வரும் உள்ளத்திற் கொண்டு செய்யற்பாலனவற்றை விரைவிற் செய்ய வேண்டும்.

## தமிழ் நாகரிகம்—சமயம்

தமிழ் நாட்டில் வாழ்பவர்களெல்லாரும் தமிழர் என்ற பெயர்க்குரியாரெனினும் தமிழ்ப் பற்றும், பண்டைத் தமிழர் நாகரிகத்தைப் போற்றும் ஆர்வமும் இல்லாதவர்கள் உண்மைத் தமிழர் ஆகார். ஆரிய மொழியையும் ஆரிய நாகரிகத்தையும் மட்டுமே பெரியவாகப் போற்றும் மக்கள் உண்மைத் தமிழர் ஆகார். ஆரியத்திலும் பிற மொழியிலுமுள்ள நலங்களை நாம் இகழ வேண்டியதில்லை. தமிழர் தம்முடைய மொழியையும் சமயத்தையும் பாதுகாத்தல் வேண்டும். தமிழர் தம்முடைய மொழியும் தம்முடைய சமயமும் தனிமாண்புடையன வென்றுணர வேண்டும். தமிழ் மொழியில் ஆரியமும் பிறவும் கலந்திருத்தல் போலத் தமிழர் சமயத்திலும் ஆரியக் கொள்கைகளும் பிறவும் கலந்திருக்கின்றன. அது பற்றித் தமிழர்க்குத் தனிச்சமயம் இல்லையென்று கூறுதல் தவறு.

தமிழருடைய சமயம் அறுவகைப்பட்டது. கடவுளை உலகத்தைப் படைக்கும் ஓங்கார தெய்வமாக வழிபடுதல் பிள்ளையார் வணக்கமாகும். பேரின்ப வடிவமான குழந்தைத் தெய்வமாக வழிபடுதல் முருகன் வழிபாடாகும். இறைவனைத் தந்தையுந் தாயுமாக வழிபடுதல் சிவமும் சத்தியமாக வழிபடுதலாகும். இறைவனது சத்தியை ஆண் வடிவமாக வழிபடுதல் திருமால் வணக்கமாகும். இத்திருமால் வணக்கமும் மும்மூர்த்திகளுள் ஒருவராகிய விட்டுணு வணக்கத்தோடு கலப்புற்றுத் தன் வடிவம் இழந்து விட்டது. அதனால், சைவமும் வைணவமும் வேறாயின. இப்போது சைவரும் வைணவருமாயிருக்கின்ற தமிழ்மக்கள் யாவரும் தங்கள் பண்டைச் சமயம் ஒன்றேயெனக் கொண்டு திருவள்ளுவனார் கூறிய பொது நெறியைத் தழுவி நடத்தல் அவர்களுடைய ஒற்றுமைப்பாட்டிற் கேதுவாகும்.

புராணங்களால் தெரிந்து கொள்வது யாதெனின், கடவுள் அன்பர்க் கருள் செய்வாரென்பதே. அன்பர்க்காக இறைவன் அற்புதச் செயல்கள் நிகழ்த்துதல் கூடும். அற்புதங்களை இயற்கைச் சட்டத்திற்கு முரணென்று துணிவாக யாம் கூறமுடியாது. நோயினை மாற்றும் மருந்துபோல நமது சிற்றறிவிற்பட்ட இயற்கைச் சட்டத்தின் வலியினை மாற்ற வல்ல உயரிய நுண்ணிய சட்டங்கள் பல கடவுளருளால் தொழில் செய்கின்றன வென்பது நுண்ணறிவாளர்க்கு நன்கு புலனாகும். கனமில்லாத காற்றில் கனமான வானவூர்தி செல்லுமென்பதை நேரே பாராதவர்கள் அதனை நம்பாதிருக்கலாம். அதனால், அவர் நம்பிக்கை தக்கதென்று இக்காலத்திலே யார் சொல்லுதல் கூடும்? அவ்வாறே அற்புதச் செயல்களுமாம். தமிழர் சமயமென்பது ஓரே முழுமுதற் கடவுளைச் சுட்டிறந்த முறையிலும், சுட்டியறியும் பல்வகை வடிவ வாயிலாகவும். வழிபடும் நெறி யென்பதையும்; தமிழ் நாகரிகத்தைத் தழுவி நடக்கும் அருளொழுக்க முடைய மக்களனைவரும் தமிழர் என்னும் ஒரு பெருங் கூட்டத்தாராவார் என்பதையும், நம்மவர் யாவரும் தத்தம் உள்ளத்திற் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

## தமிழர் கடமை.

தமிழ்மக்கள் அறிவிலே குறைந்தவர்களல்லர்: கற்கப்புகுந்து பரிசோதனைக்குட் பட்டுத் தேறியவர்களைக் கணக்கெடுத்தால் தமிழ்மக்

களே பிறரினும் மிக்கவரென்பது வெளியாகும். பிறருள் நூற்றறுவர் பரிசோதனைக்குச் சென்றால், இருபத்தைவர் தேறுவர். தமிழருள் பதின்மர் பரிசோதனைக்குச் சென்றால் ஐவர் தேறுவர். இதனால் கற்க முயலாதவர் தமிழருள் பலரென்பது வெளிப்படுவதுடன் கற்கப்புகின், கற்குந்திறமையில் அவர்கள் குறைந்தவரல்ல ரென்பதும் தெளிவாகும். ஆதலால், தமிழராய்ப் பிறந்து பெருஞ் செல்வம் பெற்ற வள்ளல்கள் தம்மினத்தவர்க்குக் கல்வியின் பொருட்டுப் பொருள் செலவழித்தல் இன்றியமையாத பேரறமாகும். நம்மவர்கள் சமயத்தைத் தழுவி நடக்கவேண்டுமாயின் உலக வாழ்க்கையில் வளம்பட வாழவேண்டும். வறுமையினைப் பெரியோர்கள் பெரிய நஞ்சென்பர். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை யென்றது காண்க. உலக வாழ்வில் செம்மையடைதற் கேதுவாகிய கைத்தொழிற் கல்விக்கும் அயல் நாட்டிற் சென்று பல்வகைத்தொழிற் கற்பதற்கும் வேண்டிய பொருளினைத் தமிழ் மாணவர்கட்குத் தமிழ்ச் செல்வர்கள் வாரி வழங்குவதற்குப் பின் வாங்குதல் கூடாது. மொழிப் பயிற்சியும், சமய வுணர்ச்சியு மில்லாத வாழ்க்கை நாகரிக வாழ்க்கையாகாது. ஆதலால், தமிழிலுள்ள பல பல கலைகளையும் நன்கு கற்றுத் தெளிவதற்குத் தக்க பெரிய கலாசாலைகள் நம்மவர்களால், நிலையிடப் பெறல் வேண்டும். தமிழிலே இலக்கண இலக்கிய நூல்கள் பலவுங் கற்றபின் சங்க விலக்கியம், பிற்காலத்துப் பெருங் காப்பியம், சைவ சித்தாந்த சாத்திரம், வைணவ நூல்கள், சித்தர் நூல்கள், சோதிட நூல்கள், வடமொழி, ஆங்கிலம் முதலிய பலவும் தனித்தனி நன்கு கற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்படல் வேண்டும். தமிழ்க் கலாசாலை மாணவர்களுள் ஆங்கிலமும் வடமொழியுங் கற்க விரும்புகின்றவர்களுக்கு அக்கல்வியைப் பயிற்றுவித்தற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும். கல்வியொழுக்கமில்லாத போலித் துறவிகளைத்தமிழ்க் கல்லூரிகளிலே கல்வி பயின்று நல்லொழுக்கம் கடைபிடிக்கச்செய்யவேண்டும். அவர்களுள் கல்வி பயில இயலாதவர்கட்குச் சமய போதனையைத் தக்க அறிஞர்கள் வாயிலாக அளித்தல் வேண்டும். சமய போதனை ஏற்றுக் கொள்ளாதும் பணிவிடை செய்யாதும் வாளா திரிகின்ற போலி வேடத்தினர்க்கு உணவு, உடை, முதலியன கொடுத்தலால் பயன் யாதும் இல்லை அது சோம்பலையும் தீய வொழுக்கத்தையும் வளர்ப்பதாக முடியும்.

இனி, நோய் நீக்கம் முதலிய காரணத்தின் பொருட்டு, தெய்வங்களுக்கு நேர்ந்துகொள்ளுகின்றவர்களிடை, தெய்வத்தின் பெயரால் ஏழைகளுக்குக் கல்வி கற்பித்தல், உணவு, ஆடை, இருப்பிடம் முதலியவற்றை யுதவுதல் என்பவற்றை நடத்துவதாக நேர்ந்து கொள்ளும் வழக்கம் மிகுதியாகப் பரவுமானால், நாட்டுக்குப் பெருநலன் விளையும். தெய்வங்களுக்குத் திருமுழுக்குச் சாத்துதல், அமுது படைத்தல் மாலை சாத்துதல் என்பன மாத்திரமே உவப்பாகுமென்று கொள்ளுதல் தவறு. ஏழைகளுக்கும் மெய்யடியார்க்கும் உதவி செய்தலும் தெய்வத்திற்கும் உவப்பானதே. இதனை நம்மவர்கள் பலர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கடவுளின் பெயரால் பயன் கருதாது செய்யும் எவ்வகை யறமும் சால்புடையனவே. நம்பெருஞ் செல்வர்கள் நல்லறிஞர் கூறும் அறிவுரைகளை யேற்றுச் செய்யவேண்டிய அறங்களைச் செவ்விதிற் செய்தால் அளவற்ற பெரு நன்மைகளை நமது நாடு விரைவிற் பெற்றுப் பெரு மதிப்புடையதாகும்.

## கல்விக்கும் சமயத்திற்கும் செய்யவேண்டிய தொண்டு.

கல்வியின் பொருட்டும், சமயத்தின் பொருட்டும் செய்ய வேண்டிய முயற்சியைத் தொகுத்துரைத்து இவ்வுரையை முடிக்கின்றோம். இந்நாட்டிலே யுள்ள அறவாணராகிய பெருஞ் செல்வர் தமது நாட்டு ஏழை மக்கள் யாவர்க்கும் கல்வி பயிற்றுவதையே பெரிய அறமாகக் கருதல் வேண்டும். ஒவ்வொரு சிற்றூரிலும் சிறந்த சிறுவர், சிறுமியர் பாடசாலை யொன்று கட்டல் வேண்டும். அப்பாடசாலைகளிலே தக்க கல்வி யறிவும், நல்லொழுக்கமும் சமய வுணர்ச்சியு முள்ள போதகாசிரியர்களை நியமித்து அவர்கட்குப் போதிய அளவு ஊதியங் கொடுத்தல் வேண்டும். தக்க பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்படி யேற்பாடு செய்யவேண்டும். உடற் பயிற்சியும் சமய வொழுக்கமும் நற்றமிழ்க் கல்வியும் அதற்குத் துணையாக ஆங்கிலக் கல்வியும் படிப்படியாக ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். நற்கல்வி

யில்லாத ஆசிரியர்களை நியமிப்பதால் பிள்ளைகளுக்குத் தவறாகிய உணர்ச்சியும் குணக்கேடும் ஒழுக்கக் குறைவுமே ஏற்படும். நமது குழந்தைகளாகிய அருமைப் பயிர்களைத் தீய களைகள் கெடுத்துவிடா வண்ணம் தக்க முறையில் பாதுகாக்க வேண்டும். இப்பாடசாலைகளில் பத்து அல்லது பன்னிரண்டாண்டுவரை கல்வி கற்ற மாணவர்களுள் உயர்ந்த கல்வி கற்றற்குரியார்க்குத் தக்க தமிழ்ப் பெருங்கலாசாலை ஒவ்வொரு பெரிய ஊரிலும் நிறுவப்படுதல் வேண்டும். அக்கலாசாலைகளிற் கைத்தொழிற் பயிற்சியும் கற்பிக்கப்பட வேண்டும். அதில் கற்க வரும் ஏழை மாணவர்க்கு உண்டி, உடை, இடம், மருந்து முதலிய எவ்வகை யுதவிகளும் செவ்விதிற் பெறக்கூடிய கலாசாலை விடுதிகள் அமைத்தல் வேண்டும். அக்கலாசாலைகளிலே பலவகைக் கலைகளையும் கற்றற்குரிய வகுப்பு நியமங்கள் ஏற்படுதல் வேண்டும். கலாசாலையிற் கற்றுப் பரீசோதனையிற் றேறும் மாணவர்களைத் தமிழ்க் கல்லூரிகள் பலவற்றிலும் ஆசிரியராக நியமித்தல் வேண்டும். சமய நூல் கற்றவர்களுக்குத் தக்க சம்பளங் கொடுத்து நாடெங்கும் அவர்கள் வாயிலாகச் சமய போதனைகள் செய்விக்க வேண்டும். இன்னும் தக்க, புலவர்களைக் கொண்டு ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தல் வேண்டும். தமிழ் நாட்டிலே பல விடங்களிலும் அரிய ஏடுகளை ஒருங்கு சேர்த்து அவற்றைப் பரிசோதித்துச் செவ்வையாக எழுதுவித்து அச்சிடுதற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். பாட்டு வடிவமாயுள்ள அரிய நூல்களுக்குத் தக்க புலவர்கள் வாயிலாக உரை யெழுதுவித்து அச்சிடுதல் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள அறிவியல் நூல்களைத் தமிழில் செவ்வையாக அமைத்துக் கொள்வதற்குத் தக்க தமிழ்ப் புலவர்களையும் ஆங்கில அறிவியல் நூல் வல்லாரையும் ஒருங்கு சேர்த்து உழைக்கும்படி நியமித்தல் வேண்டும். வடமொழியிலுள்ள பல சமய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். தக்க தமிழ்ப்புலவர்களை நியமித்துக் கலாசாலை மாணவர்க்குப் பெரும் பயன் அளிக்கத்தக்க பாட புத்தகங்களை யெழுதுவித்தல் வேண்டும். இப்பொழுது வெளிவரும் பல வகைப் புத்தகங்களையும் வாசித்து அவற்றுள் தக்கன இன்னவென்றும் தகாதன இன்னவென்றும் தீர்மானித்தற்குச் சிறந்த புலவர்கள் கூடிய கழகங்களை நிறுவுதல் வேண்டும். சித்த மருத்துவ நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்த புலவர் வாயிலாகத் தமிழ் மருத்துவக் கல்வியைப் பரவச் செய்தல் வேண்டும். ஆரிய சோதிடத்தின் வேறாகத் தமிழ்ச் சோதிடம் சிறப்பாக விளங்குதலால், அதன் பயிற்சி தழைத்தோங்குதற்குரிய கலாசாலைகள் நிறுவப்படல் வேண்டும். தமிழிலே அரிய ஆராய்ச்சித் திறம் வாய்ந்த நூல்கள் வெளியிடுவார்க்குத் தக்க ஆதரவளித்தல் வேண்டும். அயல் நாட்டிலே சென்று கைத்தொழிற் கல்வி கற்கும் ஆற்றலும் விருப்பமுமுடையார்க்குப் போதிய பொருளுதவி செய்ய வேண்டும். தமிழிலே தக்க அகராதிகளும், சரித்திர நூல்களும் எழுதுவித்தற்குரிய கலைநிலையங்கள் நிறுவப்படுதல் வேண்டும். தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன் படக் கூடிய இசைக்கல்லூரிகள் அமைத்தல் வேண்டும்.

இனிச் சமயச் சார்பாகச் செய்யப்படும் நிதி முதலிய சடங்குகளிலும், திருவிழாக்களிலும் செலவிடும் பொருளைச் சுருக்கி மேற்சொன்ன அறங்களுக்குப் பயன் படுத்துவதுடன் கோயிற் பூசனை புரிவார்க்குச் சமயக் கல்வி யளித்தல், ஏழைகட்குத் தொழிற்சாலை யமைத்தல், வழிப்போக்கர்க்கு இடவசதி யளித்தல், சிறு பிள்ளைகளுக்குப் பாடசாலையமைத்தல், இலவச மருத்துவசாலை யமைத்தல், இடிந்தொழிந்த திருக்கோயில்களைப் புதுக்குதல், தேவாரப் பாடசாலை யமைத்தல், சித்தாந்தக் கலாசாலை யமைத்தல். சமய உண்மைகளை விளக்கும் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதல், ஊர்தோறும் நூல் நிலையமும் வாசகசாலையும் அமைத்தல், ஆங்கிலங் கற்கும் தமிழ் மாணவர்க்குச் சமயக் கல்வியும் ஒழுக்கமும் பயிற்றுதற்குரிய விடுதிகள் அமைத்தல் முதலிய பல்வகை உயர்ந்த அறங்களை மேற்கொண்டு நடத்தல் வேண்டும்.




ஸ்ரீ. நா. கோபாலய்யங்கார் எழுதியது.

## கல்வியி னத்தியாவசியம்.

எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும் நீதி ஆண்மக்களுக்கே யன்றி பெண்மக்களுக்கும் சமமாகவே சமூகவாழ்க்கையில் இன்றியமையாததெனின் மிகையாகாது. தற்கால ஆசார சீர்திருத்தங்களின் நேர்மையென விளங்கும் பாலிய விவாகங்களும் சிறுமிகளின் குழந்தை மணங்களும் மனதைப்புண் படுத்துகின்றன. நமது தாய்மார்கள் தமது குழந்தைகள் பத்தாண்டுகள் கடக்கு முன்னரே அவர்களின் விவாகத்தை முடித்திடப்படாத பாடுகள் படுகின்றனர். தமது சிறுமிகள் விவாகத்தின் மணத்தை யாதென யறியுமட்டும் விடுவதில்லை. கேவலம் அன்னவரின் விருப்பத்தையுமறிவதில்லை. காசியிலுள்ள பிள்ளைக்கு தென் குமரியிலுள்ள பெண் கிடைத்திடுவதும் அறிமுகமற்ற அன்னோரிற் சிலரேனும் ஆழ்ந்த அன்பும் பரஸ்பர நட்பும் இல்லாது— அடையாது ஒற்றுமையா யிராதிருப்பதுவும் அதிசயமன்று. உறவினருள்ளும் உரிய குணங்களை யறிந்த பின்னரே மணமுடித்தல் சாலச்சிறந்தது. பின் வாழ்வில் ஒற்றுமையற்ற மணமக்களைக்கண்டு கண்கெட்ட பின் சூரியநமஸ்காரம்—குதிரைகள் களவாண்ட பின் லாயத்திற்கிரட்டைப்பூட்டிடுதல் போலவும் நெக்குருகி நெஞ்சம் பிளக்க அவதியுறுவதைக் காட்டிலும் சற்று நிதானித்து யாவும்—பெரும்பாலும் பொருந்திய விவாகத்தை முடித்தல் எவ்வளவு இன்பகாமா யிருக்கும் ? இதை யுணர்த்தும் கல்வியினைப் பெறப்படாமையாலல்லவோ தாய்மார்கள் தொல்லையடைகிறார்கள்.

நமது பெண்களின் கல்வியைக்குறித்துப் பலவித ஆலோசனைகள் கூறலாம். எனினும் ஆண்மக்களுக்குரியவாறு உயர்தாக் கல்வியும் உன்னதப் பட்டங்களும் வேண்டியதில்லையென்பதே எனது துணிபு. வெகு சிலரைத்தவிர இவையிரண்டும் பெரும்பாலோர்க்குப் பெரிதும் பயன்படாதென்றே கூசாமற் கூறலாம். சம்சார வாழ்க்கையில் புருஷனின் வருவாய் உணர்ந்து அதற்குத்தக்கவாறு சிக்கனமாகச் செலவும் அதை முடிக்க இயலுமாறு கணக்கின் பெருமையும், வேறு இதர விவகாரங்களைக் கணவனின் மனநோக்குப்படி அமைக்கவும் உயிர்க்குயிரான உணவை சமைக்கும் பக்குவங்களும் கற்பின் பாகுதியையும் அறத்தின் பெருமையையும், உண்மையின் நோக்கத்தையும் உணர—உணர்த்தப் போதுமான கல்வியே அத்தியாவசியமானது. மேலும் 'பெண்மக்கள் பிறந்தே பிறர்வசப் படுதற்கு' என்று கூறும் உண்மை மொழியின்படி அகமுடையானகத்திலுள்ள மாமி மைத்துனர் முதலானோரிடம் அந்தரங்க அன்பு பூண்டொழுகி கணவனின் சேவையிலீடுபட்டு ஆசி பெறத்தூண்டும் அறிவை பெருக்குவது இக்கல்வியே யல்லவா?

கணவர் வீட்டில் உண்டுடுத்தி உறங்கும் வேளை தவிர மற்றைய போழ்தில் ஊரிலுள்ள வம்புகளை விலைக்கு வாங்கி வாயற்ற பெண்களிடம் மற்ற பெண்கள் அட்டகாசம் செய்யாது எல்லோரிடத்தும் சமமான- சாந்தமான உரையுடன் நடந்து இதிகாச புராணங்களின் நீதிகளை எல்லோருக்கும் கூடியமட்டும் எடுத்துக்காட்டி அறிவு புகட்டக் கூடியதுமான கல்வியை பெண்கள் அடையக்கூடாது என்று கூறுவார் இந்நூற்றூண்டின் மனிதரல்லரென்று தான் கூறவேண்டும். சிறு பருவத்தே மக்களைப்பெற்று அவைகளைக்காக்கவும் வழி தெரி

(தொடர்ச்சி 364-ம் பக்கம்.)




ஸயாம நாட்டு இளவரசர் சமீபத்தில் மரண மடைந்தார்,

எகிப்திய மந்திரி ஜனாப் ஹமீது கௌச்சீ பே இருதய நோயால் தெஹிரனில் திடீரென மரணமடைந்தார்.

மைசூர் திவான் ஜனாப்மீர்ஜா இஸ்மெல் 25-9-29ல் சென்னை வந்து சேர்ந்தார். அன்று சென்னை நகரசபையார் அவரை வரவேற்று உபசரித்தனர்.

திருவாங்கூரைச் சார்ந்த கோட்டையத்தில் புராதன மாதா கோவிலொன்றின் மேல் இடி விழுந்ததால், மேல்பாகமும் சிலுவையும் நொறுங்கிப் போனதாகத் தெரிகிறது.

திருநெல்வேலி, கொடைகாவூர் ரயில்வே ஸ்டேஷனில் ஓர் என்ஜின் பயர்மென் தவறி இருப்புப்பாதையின் மீது விழுந்ததால், இஞ்சின் எறிகை, கால்கள் துண்டிக்கப்பட்டன.

இராஜப் பிரதிநிதி வந்தனோபசார நிதிக்கு இதுவரை சுமார் 7 லட்சம் ரூபா சேர்ந்திருக்கிறது; இதில் பாதித்தொகை இந்திய சமஸ்தான அரசர்களாலும் இந்திய மக்களாலுமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் நடை பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறியதற்காக ஸ்ரீமான் வி. எம். சுப்பிரமணிய ஐயருக்கு திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஆயிரம் ரூபா சன்மானம் அளித்தார்.

கனம் ஆகாகான் அவர்கள், கன்னி மாடலேன் என்னும் பிரெஞ்சு மாதை மணக்கப் போகிறாரென்றும், திருமணம் நவம்பர் மாதம் நடைபெறுமென்றும் தெரிய வருகின்றன. ஆனால் கனம் ஆகாகான் இச்செய்தியை மறுக்கிறார்.

சென்ற வாரத்தில் நடைபெற்ற சென்னை நகரசபைக் கூட்டமொன்றில், விடுமுறை நாட்களில் மதுபானக்கடைகள், லாகிரிவஸ்து சம்பந்தமான கடைகள் மூடப்படவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் பல மதங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யும் ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஆசிரியர் இராதா கிருஷ்ணன் அவ்வேலையை ஏற்றுக்கொள்ள 26-9-29 காலை பம்பாயில் இங்கிலாந்துக்குச் செல்லும் கப்பலில் புறப்பட்டார்.

---

யாது தயங்குவதையும், தமக்கே சிறிது நோய் கண்டவிடத்து ஆஸ்பத்திரியில் ஆஜராகி நிற்பதற்கும் காரணம் அன்னோர் சுகாதார நூல்களைக் கனவிலும் கேட்டிராததே காரணமென்று கூறுவது மிகையாகாது.

தற்காலத்தில் பெண்கள் உயர்தர கலாசாலைகளில் கற்று ஆண்மக்களைப் போல் பல துறைகளிலும் உத்தியோகத்திலமர விரும்புகிறாரில்லை. வெகு சிலரைத்தவிர மற்றையோர் அடுப்பங்கரைக்கு அதிபதிகளாவது சாதாரணமே. அக்காலத்தில் கஷ்டத்தின் பலன், பொறுமையின் பெருமை, சத்தியத்தின் சக்தி, கற்பின் மாக்ஷி முதலிய நீதிகளை யுணர்த்தும் காவியங்களை கற்று வந்தால் எற்ற சமயங்களில் அறிவின் பயனால் வறுமையை வறுவாயாக்கி துன்பத்திலே இன்ப மடைய பொருள்களை யுண்டாக்கலாம். வீண் ஆடம்பரங்களும் படாடோபங்களும் இன்றி எளிய சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்கு அறிவு புகட்டும் கல்வி வேண்டும். வேண்டுமென்றே முடிக்கின்றேன்.

மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும்

பரிசுபெற்ற

## நியூ பிராஸஸ் (ரிஜிஸ்டர்ட்)

# எர்குஷன் ரப்பர் ஸ்டாம்புகள்












JL M2ll, N24 ... N29

224423
சென்னை-600 008

**மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,**

தபால் பெட்டி 74, மதராஸ்.

# மஹாலக்ஷ்மி கவசம்

முற்றும் கற்றுணர்ந்த மஹான் ஒருவரால் வேதாகம சாஸ்திரமுறை பிறழாது செய்யப்பட்டது. உண்மையான பலனை அளிக்கத் தக்கது.—வாழ்வில் கஷ்டம் நீங்கி, கவலை நீங்கி, துன்பம் நீங்கி, துயரம் நீங்கி சௌக்ய சம்பன்னராய் வஜ்ரதேகத்துடனும் வசீகர முகத்துடனும் வற்றாத தேஜஸுடனும் வாழ இதைவிட அரிய சாதனம் வேறில்லை என்றே சொல்லவேண்டும். ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர் மறுமுறை ஒரு டஜனுக்கு நண்பர்களுக்கு சிபார்சு செய்கிறார் என்றால் இதன் உண்மையைப்பற்றி இன்னும் எழுத வேண்டுமா?

பல்லாயிரக்கணக்கான கவசங்கள் இதுவரை விற்கப்பட்டு விட்டன. நீங்களும் ஒன்று இன்றே வாங்குங்கள்.

தங்கக் கவசம் ரூ. 7—0—0.

வெள்ளிக் கவசம் ரூ. 2—0—0.

## மஹாலக்ஷ்மி கம்பெனி,

தபால் பெட்டி 280, :: மதராஸ்.

1,00,000 குடும்பங்களை சீர்படுத்திய நூல் எது?

## இல்வாழ்க்கையின்

### இரகசியங்கள்.

என்ற நூல்தான். ஆனால் இதைப் போலவே சிறிது பெயர் மாற்றத்துடன் அநேக போலிப் புஸ்தகங்கள் கிளம்பி யிருக்கின்றனவே? உண்மையான புஸ்தகம் எது என்று எப்படித் தெரிந்து வாங்குவது? நேயர்களே! புஸ்தகத்தில் "ஏரோப்ளேன்" (ஆகாயக் கப்பல்) டிரேட் மார்க்கு போட்டிருக்கும். இதுதான் உண்மையான ஆதிநூல். இந்த டிரேட் மார்க் உள்ள புஸ்தகம் எல்லா ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். விலை ரூ. 2-0-0

ஒரே காலத்தில் இரண்டு புஸ்தகங்கள் தருவித்தால் தபால் செலவில்லை.

வாசன் புஸ்தக சாலை,

244, தங்கசாலைவீதி, மதராஸ்.

## "ஆனந்தவிகடன்."

இதற்கு இப்பொழுது நான்காம் ஆண்டு நடக்கிறது.

64 பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளிவரும் உயர்ந்த பத்திரிகை. இதில் பலமேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனின் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா?

தபால்கூலி யுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருஷ சந்தா ரூ. 1-0-0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0

மாதிரிகாபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244, தங்கசாலைவீதி மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 3311

ரூ. 2-14-0 ரூ. 2-14-0

## நூதன கைத் தையல் மெஷின்.



சிலகாலம் வரையில் மட்டும் மேற்கண்ட எமது அசல் விலைக்குக் கொடுக்கிறோம்.

இம் மிஷின் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள் மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாகெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கானடியன் வாட்சு பீபிள்,

ஸோல் எஜண்ட்ஸ்

ஜார்ஜ் டவுன், மதராஸ்.

1,000 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல் வெளிவந்துவிட்டது!

### கைத் தொழில் முறைகள்.

இதில் மாதம் 100 ரூ. முதல் 500 ரூ. வரை சம்பாதிக்கத்தக்க அநேக தொழில் முறைகள் தெளிவாகக் கூறப்பட் டிருக்கின்றன. சோப்புகள், பெப்பர்மிண்டுகள், தீக் குச்சிகள், பலவித மருந்துகள், மெழுகு வர்த்தி வர்ண தினுசுகள், வார்னிஷ், கூந்தல் தைலங்கள் இப்படி 1000 முறைகள் உண்டு. விலை ரூ. 1-8-0

வாசன் புஸ்தக சாலை,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

எமது விசேஷ குறைந்தவிலை விற்பனை.
22 காரட் ரோல்டு கோல்டு கைக் கடியாரங்கள்.




இதில் எம் மாதிரி வேஷப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். கடியாரம் உறுதியாயும் நெடுநாள் உழைக்கக்கூடியதாயுமிருக்கும். ஒவ்வொன்றும் ரோல்டு கோல்டு அமரிக்கன் கை சங்கலியுடன் அனுப்பப்படும். சிலகாலம் வரையில் 1-க்கு விலை ரூ. 4-15-0 ஜினேன் வாட்ச் கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

# ரெடிமேட் ஷர்ட்டுகள்.



உசத்தியான, டுயில், டோரியா காக்கி, பாப்ளின் முதலிய துணிகளில் தைத்தவை. உறுதியான தையல். மனோகரமான கட்டிங். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| டுயில் ஷர்ட்டு | ரூ. | 2 | 0 | 0 |
| காக்கி | ,, | 2 | 4 | 0 |
| அமெரிக்கன் டோரியா | ,, | 2 | 4 | 0 |
| பாப்ளின் | ,, | 3 | 8 | 0 |
| ஸில்க் ஷர்ட்டு | ,, | 6 | 8 | 0 |

கே. எஸ். முத்தையா கம்பெனி : தபால் பெட்டி 99, மதராஸ்.



நீங்கள் புதிய வாழ்வு, யௌவன வாழ்வு, ஆண்மை வாழ்வு, இன்ப வாழ்வு, நோயற்ற வாழ்வு அடைய விரும்புகிறீர்களா ?

" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மறுக்க முடியுமா ?

உண்மையில் நீங்கள் நோயற்ற வாழ்வு, யௌவன வாழ்வு விரும்பினால் இன்றே,

## "வீ ர சி ங் க லே ஹி ய ம்"

அனுப்பும்படி எழுதுங்கள். எவ்விதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனியைப் போல் பறந்து விடும்.

வீரசிங்க லேஹியம் இரத்தத்திற்குச் சுத்தியும் விருத்தியும் உண்டாக்கி நோய்களைத்தொலைத்து உடம்பை வஜ்ரம் செய்கிறது. எல்லா நோய்களையும் அகற்றவல்லது. தலைநோய், மந்தம், மயக்கம், முதலியவைகளைத் தடுக்கிறது. தாதுவிற்கு அதிசய அபார ஆச்சரியப்படும்படியான வீரபலத்தைக் கொடுக்கிறது. மேக சம்பந்தமான சகல நோய்களையும் உடனே தொலைக்கிறது

40 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 4—8.

பாக்கிங் தபால் செலவு இனம்.

☞ சிங்கப்பூர், பினாங்கு, மலாய், ஸ்டேட் நண்பர்கள் மூன்று டப்பிகளுக்கு ஆர்டர் செய்தால், தபால் செலவு, பாக்கிங் செலவு இனம்.

வைத்ய ஆஸ்ரமம், அகஸ்திய குண்டம், காசி.

கியாதி பெற்ற

## "ஜெயப்பூர் காட்டன் சேலை."



இந்த புடவையின் அழகும் நைஸும் நாம் சொல்லத் தேவையில்லை. நைஸான வெள்ளை உடலில் அழகான கலர் கரை, உடல் புட்டா போட்டது. 20 விதமான கரைகள்— சிறு புட்டாமுதல், பெரிய ரோஜா பூ, மோட்டார், கிராமபோன் முதலிய புட்டாக்கள் போட்டது. இந்த படத்தில் ஒரு புடவை தான் மாதிரி தெரிகிறது. இன்னும் எத்தனையோ விதமுண்டு.

☞ உடல் கலரில் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஸ்கை புளு, பிங், கத்திரிப்பூ பதாமி கலர்களில் கிடைக்கும்.

**FAMOUS JAIPUR COTTON SARI.**

இந்த மாதிரி புடவைகள், இரண்டு லக்ஷம் இரண்டு மாதத்தில் வங்காள நாட்டில் விற்பனையாகி இருக்கின்றன.

பிடித்தமில்லாவிட்டால் எங்கள் செலவில் திருப்பி யனுப்பலாம்.

## நாகரீகமான ஆடை ! நேர்த்தியான உடை !!

நாஸூக்கான புடவை.

| | | | |
|---|---|---|---|
| 6 மு x 27 இஞ்சி | சிறு பெண்களுக்கு | புடவை 1-க்கு ரூ. | 1 - 8. |
| 7 மு x 30 | | ,, | ,, 1-12. |
| 8 மு x 35 | ,, | ,, | ,, 2 - 0. |
| 9 மு x 40 | ,, | ,, | ,, 2 - 2. |
| 10 மு x 44 | புடவை | ,, | ,, 2-12. |
| 12 மு x 44 | | ,, | ,, 3 - 4. |
| 16 மு x 44 | | ,, | ,, 4 - 4. |
| 18 மு x 44 | | ,, | ,, 4-12. |

கே. எஸ். முத்தையா கம்பெனி, சில்க் அவுஸ், காசி.


PRINTED AT MUTHIAH PRESS, MADRAS AND PUBLISHED BY K. S. SUNDARAR.

# அமெரிக்கன் சில்க் - - -
# - - - அங்கவஸ்திரம்.

தூய்ய வெள்ளை, உடல் திக்கான பட்டு, தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இரு பக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 6 மு நீளம். 40" அகலம். விலையின் இறக்கத்தை கவனியுங்கள்.

விலை ரூ. 6—0—0 தான்.

**கிடைக்கவில்லையே !** என்று வருந்தவேண்டாம். ஏற்கனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்து வருவதால் முந்திக் கொள்ளுங்கள்.

---

# ஷாமுனியோஸா ஸில்க் - -
# - - - அங்கவஸ்திரம்.

அழகான இமிடேஷன் சில்க். கலருக்கு உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டு குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா **2—0—0**

விலை ரூபாய் இரண்டு தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6 மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப ஒரு டஜனுக்கு ஆர்டர் செய்கிறார்கள்.

# கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, சென்னை.